அனலைதீவு ஐயனார்கோவில்

# சித்திரப்பெருந்தேர்

9.167



## வெள்ளோட்டம் : 21.8.1980

திருப்பணிமலர்

உ

## அனலைதீவு ஐயனார் கோவில்

# சித்திரப்பெருந்தேர்



## சிறப்புமலர்



## வெள்ளோட்டம்

## 21.08.1980



அருள்மிகு அனலைதீவு ஐயனார்!



# நல்லை ஆதீனகர்த்தா
# ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக
# ஞானசம்பந்த பரமாச்சார்ய
# ஸ்வாமிகளின்
# வாழ்த்துச் செய்தி!

அனலைதீவு ஐயனார் ஆலயத்திற்கு மிகப் பாரிய தேர்த் திருப்பணி நிறைவேறியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அனலைதீவு இலங்கையில் சைவமணித்தீவு என்று கூறலாம். சைவ சமயந் தவிர வேறு சமயத்தவர் இடம்பெறாத, ஒரே இடம் அனலைதீவு. அவ்விடம் சைவ வைணவ வேற்றுமையில்லை என எடுத்துக்காட்டாக விளங்கும் ஹரிஹர புத்திரர் என்ற ஐயனார் ஆலயம் சிறந்து விளங்குகிறது. இந்திய சிற்பக் கலைஞருடைய திறமைமிக்க வேலைப்பாடமைந்த சித்திரத் தேர் உருவாகி இவ்வருட உற்சவத்தில் பெருமான் எழுந்தருளுவது அனலைதீவுப் பெருமக்களின் அருந்தவம்.

வாழ்க திருப்பணி.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்



## ஐயனை வாழ்த்தி வணங்கி ஆனந்தமடைவோம்.

ஈழத்தில் சைவங்காக்கும் பெருங்குடிமக்கள் வாழுமிடமாகப் பொலிவு பெற்றது அனலைதீவு. இத்தீவு ஐயனுர் பெருமானை அரணுகக் கொண்ட சிறப்புக்குரியது. இச் சிறப்புப் பெற்ற திருவூரில் ஐயனுர் கோவில் முடிமணியாக விளங்குவதால் அவ்வூர் மக்கள் ஒன்றுபட்டு அழகிய சித்திரத்தேரை உருவாக்கி வெள்ளோட்டத்துக்கு ஒழுங்கு செய்துள்ளமை போற்றுதற்குரியது. ஈழத்திலே எங்குமே காணமுடியாத கலைத்திறன், சிற்பத்திறன், ஆகியவை பொலிய திரு. இலட்சுமண ஸ்தபதி (தமிழ் நாடு, இராமநாதபுரம், மாலைகண்டான்) அவர்கள் இத்தேரை உருவாக்கியுள்ளார். பெருமைக்குரிய இத்திருப்பணியைச் செய்தோர். செய்வித்தோர் அனைவருக்கும் ஐயனுர் பெருமானின் திருவருளுக்குரியவர் என்பதில் எதுவித ஐயமுமில்லை. பதிபுண்ணியங்கள் எனப் பேசப்படுபவை இவைகளே. தேர் வெள்ளோட்டம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல ஹரிஹரபுத்திர ஐயனுர் திருவடிகளை வணங்கி அமைகின்றேன்.

இங்ஙனம்
தங்கம்மா அப்பாக்குட்டி

துர்காதேவி ஆலயம்,
தெல்லிப்பழை.



## அமைச்சர்
## கௌரவ தொண்டமான்
# வாழ்த்துகிறார்!

அனலைதீவில் அமைந்துள்ள தொன்மைவாய்ந்த ஐயனார் கோவிலில் நீண்ட காலமாக இருந்துவந்த ஒரு குறைபாட்டை, தேர்த் திருப்பணிச் சபையார் ஒரு புதிய தேரை அமைத்ததன் மூலம் அகற்றிவிட்டார்கள் என்பதைக் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தத் தெய்வீகத் திருப்பணிக்கு ஐயனார் எழுந்தருளி இருக்கும் அனலைதீவை சேர்ந்த மக்கள் மட்டுமின்றி, நாட்டில் வாழும் சைவப் பெருமக்கள் பலர் நிதி உதவி அளித்து உதவியுள்ளார்கள் என்பது மக்கள் மனதிலே ஆன்மீக உணர்வு வளர்ந்து வருகின்றது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

மதமும் வழிபாடும் மனிதனின் மனச்சாந்திக்கும் வாழ்க்கை முறைக்கும் அத்தியாவசிய வழிமுறைகளாக அமைகின்றன. இந்தப் பின்னணியில் பல்வேறு நெருக்கடிகளுக்கிடையே அனலைதீவு மக்கள் இத்தகைய ஒரு கைங்கரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து விரைவில் வெள்ளோட்டம் நடத்த முடிவு செய்துள்ளார்கள் என்பது நம்பிக்கையூட்டக்கூடிய ஒரு நடவடிக்கையாகும்.

அவர்களின் இந்த முயற்சியும், இதைப் போன்று ஏனைய முயற்சிகளும் வெற்றி பெற ஐயனார் அருள் புரிவாராக!

**சௌ. தொண்டமான்**
*கிராமிய தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர்*

*கிராமிய தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர்*
*கொழும்பு.*
*05-08-80*



காங்கேசன்துறை ஆட்சிமன்ற
உறுப்பினரும்,
எதிர்க்கட்சித் தலைவருமான
**மாண்புமிகு அ. அமிர்தலிங்கம்**
அவர்கள்

# வாழ்த்துகிறார்!

அலைகடலின் மத்தியில் அழகுற அமைந்திருக்கும் அனலைதீவு ஒரு சிறிய கிராமமாயினும் தக்கார் பலரும், தாழ்விலாச் செல்வர் பலரும் வாழும் கிராமமாக விளங்குகின்றது. அக்கிராமத்துக்குச் சிறப்பும் புனிதமும் அளித்து நிற்பது அங்கு கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஐயனார் ஆலயமாகும். அவ்வாலயத் தேர்ப்பணிச் சபையினர் இலங்கையிலுள்ள ஏனைய ஆலயத் தேர்களை விஞ்சும் வகையில் ஓர் அழகிய பாரிய சித்திரத்தேரை அமைத்து அதன் வெள்ளோட்ட விழாவை 21-8-80 இல் நடாத்துவது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். இத்தேரை கலையம்சங்கள் எல்லாம் பொருந்தச் செய்து முடித்த சிற்பாசாரியார்களுக்கும், ஓய்வின்றி உழைத்து பல இட்சம் ரூபா நிதியைத் திரட்டி இப்பெரும் பணியை நிறைவேற்றியிருக்கும் தேர்த் திருப்பணிச்சபையினருக்கும் எனது பாராட்டுக்கள். சித்திரத் தேரில் பவனிவரப்போகும் ஐயனார் அருளால் அனலைதீவும் தமிழ்ப் பெருமக்களும் பெருவாழ்வு பெற்று வாழ அவர் அருளை வேண்டுகின்றேன்,

அ. அமிர்தலிங்கம்
எதிர்க்கட்சி முதல்வர்.

எதிர்க்கட்சி முதல்வர் அலுவலகம்,
பாராளுமன்றம்,
கொழும்பு-3,
07 - 08 -80.

## அரசாங்க அதிபரின்
# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள தீபகற்பங்க ளில் அனலைதீவு தனித்துவம் மிக்கதாக விளங்குகிறது, இங் குள்ள மக்கள் அனைவரும் சைவசமயிகள்.

அனலைதீவு மக்களை, அவ்வூரில் எழுந்தருளியுள்ள ஐய னார் அப்பன் ஒற்றுமையுடன் வாழ அருள்பாலித்திருப் பதைப் போலவே- அப்பெருமானின் பேரில் அம்மக்கள் கொண்டிருக்கும் பக்தியின் வெளிப்பாடாக – மிகப்பெரிய அளவிலான புதியதேர் ஒன்றை மிகச்சிரத்தையுடன் கட்டி யெழுப்பியிருக்கிறார்கள்.

இத்தேரின் வெள்ளோட்ட விழா மலருக்கு எனது ஆசி யைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசாங்க செயலகம்
யாழ்ப்பாணம்
16. 08. 80

யோகேந்திரா துரைசுவாமி
அரசாங்க அதிபரும், யாழ் மாவட்ட
அமைச்சின் செயலாளரும்



நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர்

# வாழ்த்துகிறார்!

அனலைதீவு ஐயனார் கோவில் சித்திரத்தேரின் வெள்ளோட்ட நன்னாளில் எனது பக்தி நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

நமது கோவில்கள் பக்தியை வளர்க்கும் இடங்கள் மட்டுமல்லாது கலைகளை வளர்க்கும் கலைக்கூடங்களும்கூட. அந்தவழியில் நின்று, அழியாக் கலைச் செல்வமாகிய இந்த சித்திரத்தேரை உருவாக்க உழைத்த எல்லோரையும் பாராட்டுகிறேன்.

ஐயனாரின் அருள் எங்கும் பரவட்டும். உங்கள்பணி வளரட்டும்.

வணக்கம்

மு. சிவசிதம்பரம்
பா. உ. நல்லூர்,
தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்.



யாழ்ப்பாணம் மாநகர முதல்வரின்

# வாழ்த்துச் செய்தி

அனலைதீவு ஐயனார் கோவில் சித்திரத் தேரின் வெள்ளோட்டம் ஆகஸ்ட் திங்கள் இருபத்தோராம் நாளில் இடம் பெறுமென்று செய்தியறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

பக்தகோடியினருக்கு தித்திக்கும் உவப்பான மேற்படி செய்தியைத் தருவதற்காக அனலைதீவு ஐயனார் கோவில் தேர்த் திருப்பணிச் சபையினர் அர்ப்பணிப்புடன் பட்ட சிரமங்களை நினைவு கூர்வதுடன் அவர்களை அதற்காகப் பாராட்டவும் விளைகிறேன்.

வெள்ளோட்ட சிறப்பு மலர் புதிய சித்திரத் தேரில் ஐயனார் எழுந்தருளும் திருக்கோலம் கண்கொள்ளாக் காட்சியாக அமையுமென்பதில் வியப்பில்லை. அனலைதீவில் பக்திப்பிரவாகம் பெருக்கெடுக்கும் பொன்னாளாக அந்நாள் மலர ஐயனார் அருள்பாலிப்பாராக.

இராசா. விசுவநாதன்
யாழ். மாநகர முதல்வர்

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
28 - 07 - 80

# தீவுப்பகுதி வடக்கு

## உதவி அரசாங்க அதிபர்

# வாழ்த்துரை!

அலைகடல் மத்தியிலே, அழகொளிர அமைதியுடன் அமைந்திருக்கும் அனலைதீவு கிராமத்தின் சிறப்புக்குரிய பல காரணிகளில் முதலிடம் பெறுவது அவ்வூரிலேயமைந்து, அகிலமெங்கும் அருளொளி பரப்பும் ஐயனார் ஆலயம் என்று கூறுவது மிகையாகாது.

ஆண், பெண், சிறுவர் பெரியவர்களென்ற பேதமின்றி அனலை தீவிலே வாழ்ந்துவரும் அனைத்து மக்களதும் நெஞ்சிலும், நாவிலும் நீங்காது ஒலித்து வரும் திருநாமம் ஐயனார் என்பதேயாம்.

வேளாண்மைத் தொழிலும், வாணிபத்திலும், விஞ்ஞான உயர்கல்வித் தேர்ச்சியிலும், ஈழத்திலும், அயல் நாடுகளிலும் சிறப்புற விளங்கும் இவ்வூர் மக்கள் தம்மது கிராமத்தின் ஐயனார் ஆலயத்தையும் ஏனைய சைவாலயங்களையும் செவ்வனே பேணி நித்திய நைமித்திய காரியங்களைத் திறம்படச் செய்து வருவதுடன் சிறந்ததொரு அன்னதான மடத்தையும் ஐயனார் ஆலயத்தில் அமைத்துப் பணியாற்றுகின்றனர.

சைவத்துக்கும், தமிழுக்கும், பெருமை தரும் கலைச் சிறப்பினை வெளிப்படுத்தும் சித்திரத் தேரொன்று அமைத்திடல் அவசியமென உணர்ந்து தமிழகத்தில் சிற்பத்துறையிலே தேர்ச்சி பெற்று விளங்கும் ஆசாரியர்களைக் கொண்டு எழில் கொஞ்சும் கலைப் பொக்கிஷமானதும் முப்பக்க பரிமாண சிற்பங்கள் நிறைந்ததுமான சித்திரத் தேரினைப் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் நிர்மணித்து 21-08-1980ல் வெள்ளோட்டம் விட இருப்பதறிந்து மட்டிலா மகிழ்வெய்துகிறேன்.

உருவத்திலே சிறியதாயும், பரப்பளவிலே குறுகியதாயுமமைந்த இச் சிறிய தீவிலே வாழும் மக்கள் உள்ளத்தாலுயரந்தவர்களாயும், ஊக்கத்தில் மிகுந்தவர்களாயும் அமமைந்து உழைத்தமையால் ஐயன் வலம்வர அழகுறு சித்திரத்தேர் இன்று அமைக்கப்பட்டு விட்டது. ஊரவர் தம் ஒற்று

மையையும், ஒன்றுபட்ட உழைப்பின் மகத்துவத்தை விளக்கும்சின்னமாக இதனையமைக்க உறுதுணை புரிந்த அனைவருக்கும் எல்லாம் வல்ல இறையருள் எல்லையின்றிக் கிட்டுவதாகுக.

ஆலயத்திற் திரளும் அடியார்கள் அனைவரும் ஒருமித்து 'அரோகரா' கோஷத்துடன் ஐயனின் தேரின் வடத்தினை இழுக்கும்போது அலங்கரிக்கரிக்கப்பட்ட தேரிலே ஐயன் அசைந்துவரும் காட்சியைக் காணும் போது நாவுக்கரசர் கூறியது போல் ''மனிதப் பிறவியும் வேண்டுவதே'' என நாமும் பாடத் தோன்றுமல்லவா!

தேர்திருப்பணிச் சபையினரின் சிறப்புமலரும் சைவநெறிக் கருவூலமாகச் சிறப்புற எனது நல்வாழ்த்துக்கள்.

சுபம்

சி. சடாட்சர சண்முகதாஸ்
தீவுப்பகுதி வடக்கு - ஊர்காவற்றுறை
அரசாங்க அதிபரும்,
அனலைதீவு கிராம சபையின் விசேட ஆணையாளரும்

உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்,
ஊர்காவற்றுறை
06 - 08 - 80

## வண்ணை பெருமாள் கோவில் தர்மகர்த்தா

## சபைத்தலைவர்

# வாழ்த்துகிறார்!

சைவமதத்தில் ஊறித் திளைத்த பக்திநெறி தவறாத நன்மக்களை, தன்னகத்தே கொண்டுள்ள அனலைதீவு ஐயனார் ஆலயத்துக்கு அதி உன்னத சித்திர தேர் ஒன்று உருவாக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெறுவது என்பது ஆச்சரியத்துக்கு உரிய ஒன்றல்ல.

அனலைதீவு மக்கள் ஐயனார் மீது கொண்டுள்ள பயமும் பக்தியுமே இத்தேர் உருவாக காரணமாய் இருந்தது என்பது ஒருபுறமிருக்க, அம்மக்களின் பக்தியை பரவசத்துடன் ஏற்றுக்கொள்ள ஐயனாரே இத்தேர் சிறப்பாக உருவாக அருள் பாலித்துள்ளார் என்பது மிகவும் பொருத்தமாயிருக்கும்.

தேர் வெள்ளோட்டம் சிறப்புற அமைந்து அனலைதீவு மக்கள் ஐயனாரின் திருவருளை இன்று போல் என்றும் பெற்றுய்ய வேண்டுமென ஐயனாரிடம் பிரார்த்திக்கிறேன்.

இத்தேர் வெள்ளோட்டத்தைத் தொடர்ந்து அனலைதீவு ஐயனாரைத் தரிசிக்க நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் சைவப் பெருமக்கள் திரள்திரளாக வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்வார்கள் என்று நம்புகிறேன்.

து. சீனிவாசகம்
சமாதான நீதவான்

வண்ணை ஸ்ரீ வெங்கடேசுவரப் பெருமாள்
தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம்.



'சிவநெறிப் புரவலர்'

கனகராசா அவர்கள்

# வாழ்த்துகிறார்!

சைவம் வளர்ந்தோங்கும் அனலைதீவில் எழுந்தருளியிருக்கும் ஐயனார் ஆலயத்திற்காக உருவாகியிருக்கும் சித்திரத் தேர் இன்று வெள்ளோட்ட விழாக்காண்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

வேண்டுவார்க்கு வேண்டுபவை எல்லாம் ஈர்ந்தருள அனலைதீவு ஹரிஹர புத்திரனைப் பிரார்த்தித்துக் கொண்டு மலர் சிறப்புற எமது நல்லாசியையும் கூறுகின்றோம்.

இவ்வண்ணம்
க. கனகராசா

'திரு ஆலவாய்',
யாழ்ப்பாணம்.

# அனலைதீவு ஐயனார் கோவில்

## பரிபாலன சபை

## 1979-80

தலைவர்: திரு. மு. சிவரத்தினம்.

செயலாளர்: திரு. மு. வே. மயில்வாகனம்.


துணைச்செயலாளர்: திரு. சு. சோமசுந்தரம்.

தனாதிகாரி: திரு. வே. சிவகுரு.

மனேஜர்: திரு. ஐ. வைத்தியலிங்கம்.

### நிர்வாக உறுப்பினர்கள்.

திரு. சி. நவரத்தினம்.
திரு. சு. வீரவாகு.
திரு. ஐ. க. இராசரத்தினம்.
திரு. ச. இராசரத்தினம்.
திரு. கா. விசயரத்தினம்.
திரு. செ. தம்பையா.
திரு. ச. சிவஞானம்
திரு. க. குமாரசாமி.
திரு. க. சபாரத்தினம்.
திரு. மூ. குமாரசாமி.
திரு. மு. நடராசா.




# தமிழ்நாடு இராமநாதபுரம்
# மாலைகண்டான் சோமலக்ஷ்மண
# ஸ்தபதியார்

அகமும் முகமும்மலர, சிவசின்னங்களுடன் இங்கு இருப்பவர்தான் எமது பிரதம சிற்பி தமிழ்நாடு இராமநாதபுரம் மாலைகண்டான் திரு. சோம, லக்ஷ்மண ஸ்தபதியார் அவர்கள்!

கலைத்திறன், அதிஉன்னத சிற்பத்திறன் பொலிய கம்பீரமாக

நிமிர்ந்து நின்று 21-08-80ல் வெள்ளோட்டம் காணவிருக்கும் அனலை ஐயனாரின் மகோத்தர மகாரதத்தைச் சமைத்த திரு. லக்ஷ்மண ஸ்தபதியார் சகல சௌகர்யங்களும் பெற்று- அவரது தேர் அமைக்கும் பணி தொடர்ந்து நிலைத்திட- நீடூழிகாலம் வாழ எம்பெருமான் ஐயனாரின் அருள் என்றும் கிட்டவேண்டுமென தேர்த்திருப்பணிச் சபையாருடன் அனலைதீவு மக்கள் வாழ்த்துகிறார்கள்!

வாழ்க லக்ஷ்மண ஸ்தபதி,
வளர்க அவர் பணி!



## தேர்த் திருப்பணிச் சபை
## ஆரம்பகாலப் பொருளாளர்
அமரர்
# சு. சிவபாதசுந்தரம்
அவர்கள்.

அமரர் திரு.சு.சிவபாதசுந்தரம் அவர்கள் தேர்த்திருப்பணிச் சபையின் ஆரம்ப காலப் பொருளாளராக இருந்து திருப்பணி நடவடிக்கைளில் தீவிரமாகச் செயற்பட்டவர். தேர்திருப்பணி விஷயமாக சிங்கப்பூர். இந்தியா போன்றநாடுகளுக்குச் சென்று பல ஆக்கபூர்வ ஒழுங்குகளை மேற்கொள்வதில் அயராது உழைத்தவர்.

ஐயனாரில் அதிக பற்றுடைய இப்பெரியார் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக தேர்த்திருவிழா அன்று அன்னதானம் வழங்கி வந்த பெருமைக்குரியவர். அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் அதிபராகச் சேவைசெய்ததன்மூலம் இக்கிராமத்தில் பல டாக்டர்களையும், பொறியியலாளர்களையும், பல கல்விமான்களையும் இவரால் உருவாக்க முடிந்தது. வித்தியாலயத்தின் வளர்ச்சியில் மட்டுமல்ல அனலைதீவு முழுக்கிராம வளர்ச்சியிலுமே மிகுந்த பற்றுள்ளவராக அமரர் சிவபாதசுந்தரம் விளங்கினார்.

1974ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முப்பதாம் திகதி தேர்த்திருப்பணிச் சபையினரின் கூட்டமொன்றில் கலந்து கொள்ளும் பொருட்டு, யாழ்ப்பாணம் தலையாழியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து அனலைதீவுக்கு வந்திருந்தபோது- கூட்டத்தில் கலந்து கொண்ட சில நிமிடநேரத்தில் அவரது உயிரைக் காலன் பறித்தான் என்ற செய்தியை அப்போது எவராலும் நம்பமுடியவில்லை.

தேருக்காக இந்திய சிற்பாசாரியர்களினால் முதன்முதலில் உருவாக்கப்பட்டு, ஆலயத்தின் மண்டபம் ஒன்றில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த விநாயகர், நடேசர், முருகன், ஐயனார் ஆகிய சிற்பங்களை, தேர்த்திருப்பணிச் சபையின் கூட்டமுடிவில் வெளிக்கொணர்ந்து, அவற்றை வணங்கிவிட்டு வீடுதிரும்பிய சிலநிமிடநேரத்தில் திரு சிவபாதசுந்தரம் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள். இப்பெரியாரின் ஆத்மா சிவபதப்பேறுபெற்று இறைவனுடன் ஒன்றிக்கலந்திருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

# அனலைதீவு ஐயனார் கோவில்

## தேர்த் திருப்பணிச் சபை உறுப்பினர்கள்

தலைவர்: திரு. வே. சண்முகம்
உப தலைவர்: திரு. க. இளையதம்பி.
இணைச் செயலாளர்கள்: திரு. ஐ. வைத்தியலிங்கம்.
திரு. மு. சிவரத்தினம்.

### நிர்வாக உறுப்பினர்கள்

திரு. நா. பழனி.
திரு. வ. பரமலிங்கம்.
திரு. இ. பொன்னம்பலம்.
திரு. க. தருமலிங்கம்.
திரு. வே. சி. பொன்னையா
திரு. சு. வீரகத்தி.
திரு. ஆ. வே. கணபதிப்பிள்ளை.
திரு. த. மயில்வாகனம்.
திரு. க. குமாரசுவாமி.
திரு. த. பாலரத்தினம்.
திரு. க. துரைராசா.
திரு. க. இரத்தினசபாபதி.
திரு. வே. சிவகுரு.
திரு. வ. கணேசன்.
வித்துவான் ப. கணபதி.

### பின்னிணைப்பு நிர்வாக சபை

திரு. மு. குமாரசாமி.
திரு. நா. அமிர்தலிங்கம்.
திரு. கா. விஜயரத்தினம்.
திரு. சு. இரத்தினசபாபதி.
திரு. நா. பாலசுப்பிரமணியம்.
திரு. ச. க. காசிலிங்கம்.
திரு. ஆ. இராசேந்திரம்.
திரு. சு. தயாபரராசா.
திரு. நா. பரஞ்சோதி.
திரு. க. இளையதம்பி.
திரு. சு. சதாசிவம்.
திரு. சி. காராளபிள்ளை.
திரு. வே. கிருஷ்ணசாமி.

மேற்படி திருப்பணிச் சபையுடன், தேர்த் திருப்பணி பூரணத்துவப்பட ஆலய நிருவாக சபை உறுப்பினர்களும் செயலாற்றினர்.

# அனலைதீவு ஐயனார் கோவில்

## தேர்த்திருப்பணிச்சபை

# மலர் வெளியீட்டுக்குழு.

திரு. சு. இரத்தினசபாபதி (இளைப்பாறிய கிராம சேவையாளர்)

திரு. க. இரத்தினசபாபதி (வர்த்தகர், கொழும்பு)

திரு. எஸ். கே காசிலிங்கம் (பத்திரிகையாளன்)

திரு. மு. சிவரத்தினம் (ஆசிரியர்)

திரு. ஐ. வைத்தியலிங்கம் (மேற்படி கோவில் மனேஜர்)

திரு. க. இளையதம்பி (அதிபர், வடலூர் அரசினர் வித்தியாசாலை)

திரு. மு. வே. மயில்வாகனம் (ஆலய பரிபாலனசபைச் செயலாளர்)

திரு. க. இராசரத்தினம்

திரு. ஆ. இராசேந்திரம்

# பதிப்புரை

உங்கள் கைகளில் தவழும் இந்த மலரை உருவாக்கும் பொறுப்பை ஏற்று நிறைவேற்றியவன் என்றமுறையில் சிலவார்த்தைகளை இங்கு குறிப்பிடவேண்டியது என் கடமை என்று கருதுகிறேன்.

என் தந்தை கடும் சுகயீனமுற்று படுக்கையிலிருக்கும் செய்திகேட்டு அண்மையில்தான் திடீரென வெளிநாட்டிலிருந்து தாயகம் திரும்பியிருந்தேன். கடந்த ஐந்து ஆண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டு தாமத நிலையிலிருந்த ஐயனின் தேர்த் திருப்பணி வேலைகளை, வேகமாகச் செயற்படுத்தி, இவ்வாண்டு உற்சவத்தின் போது வெள்ளோட்டத்தை நடாத்தி முடிப்பதில் 'அனலைதீவு ஒன்று பட்டு, செயற்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன்!

ஐயனார் ஆலய திருப்பணி வேலைகளில் ஐயனாரின் பக்தர்களில் ஒருவன் என்றமுறையில் நானும் என்னால் இயன்றதை அவ்வப்போது செய்துவந்திருக்கிறேன். 1974—1978ம் ஆண்டுக்காலத்தில் ஐயனார் ஆலய பரிபாலன சபையின் துணைச் செயலாளராகவும், அதே ஆண்டுக் காலத்தில் அன்னதான சபையின் துணைத் தலைவராகவும் சேவை செய்யும் பாக்கியமும் எனக்குக் கிடைத்திருந்தது. எனினும் தந்தையாரின் கடும் சுகயீனம் தற்போதைய நிலையில் என்னைப் பொதுவேலைகள் எதிலும் பங்குபற்றமுடியாமல் செய்தது.

-என்றாலும் ஐயனாரின் சித்திரத்தேர் வெள்ளோட்ட வேலையில் அடியேனும் சிறுபங்காகிலும் ஏற்க வேண்டுமென்பது, எம்பெருமானின் திருவுளமாயிருந்துள்ளது. அதனாலேயே தேர்த்திருப்பணிச்சபை உறுப்பினர்கள் சிலர் என் வீடு தேடிவந்து, வெள்ளோட்ட மலர் வெளி

யீட்டுப்பொறுப்பை ஏற்குமாறு பணித்தபோது, முதலில் மறுத்த போதிலும், புறக்கணித்துவிட முடியவில்லை!

மிகக்குறுகிய காலத்தில்— அதாவது பதினைந்து நாட்களில்— இம்மலரைத் தயாரித்து வெளியிடவேண்டியிருந்த போதிலும், ஐய ஞரின் அருளால் கூடியவரை-சகல அம்சங்களிலும் சிறப்பாக மலர் அமைந்திருப்பதாகவே கருதுகிறேன்.

மலர் உருவாவதற்கு விளம்பரங்களும், கட்டுரைகளும், வாழ்த்துச் செய்திகளும் வழங்கி உதவிய அன்பர்கள், அறிஞர்கள், பெரியார்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐயனுரின் ஆசியும் அருளும் அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன். அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கி உதவிய மலர்க்குழு உறுப்பினர்களுக்கும், என் அருகிலிருந்து உதவிய உ. இ. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும், மலரை சிறப்பாக அச்சிட்டு உதவிய சித்திரா அச்சகத்தாருக்கும் என் நன்றி.

வணக்கம்


ச. கு. காசிலிங்கம்.

தேர்த் திருப்பணிச்சபை
மலர்வெளியீட்டுக்குழு சார்பில்

'அம்மை- அப்பன்'
அனலைதீவு.

இலங்கையில் மிகப்பெரும் சித்திரத்தேரை தன்னகத்தே கொண்டுள்ள

# அனலைதீவு ஐயனார் கோவிலின் முகப்புத்தோற்றம்



பழமை வாய்ந்த கூழாமரமும், அரசமரங்களும், வேப்பமரங்களும்,
இலுப்பை மரங்களும், தேக்கு மரங்களும், மாமரமும்,
தென்னந்தோப்பும்


ஆலயத்தின் தோற்றத்தை அழகுபடுத்துகின்றன.



ஆலய முகப்பு



கோயில் உள்வீதியின் ஒருபக்கத் தோற்றம்.



சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்னர் ஆலயத்தின் மேற்றிசைச் சமுத்திரத்தில் கரை சேர்ந்த பெட்டியினுள் காணப்பட்ட சுயம்புலிங்க உருவத்திலான ஐயனுர்! இருமருங் கிலும் இரு தேவிமார் வீற்றிருக்கிறுர்கள், கோயில் மகாமண்டபத்தில் இச்சுயம்பு லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.




இப்பெட்டியினுள்ளேதான் ஐயனுர் அனலைபம்பதி வந்துசேர்ந்தார்! இத் திருப்பெட்டி கோயில் மகா மண்டபத்தில் வைக்கப்பட்டு பழமை மாருமல் பேணப்பட்டு வருகிறது.

## அனலைதீவு அருள்மிகு அரிஹரபுத்திர ஐயனார் கோவில் வரலாற்றின் சின்னம் "கூழாமரம்"



ஆலயத்தின் மேற்கு வீதியில் காணப்படும் கூழாமரம் இது!


சமுத்திரத்தில் கரைசேர்ந்த பெட்டியைச் சிலர் தூக்கிவந்தபோது, இவ்விடத்தில் பெட்டியின் பாரம் அதிகரித்து வருவதை உணர்ந்த மக்கள் அதனைத் தொடர்ந்து தூக்கமுடியாமல் இதன் கீழ் வைத்தனர். பின்னர் ஊர்மக்கள் திரண்டு பெட்டியை அசைக்க முயன்றும் தோல்விகண்டனர். இது திருவருள் சக்தி என்பதை உணர்ந்து அவ்விடத்திலேயே ஐயனாருக்கு ஆலயம் அமைத்தனர். கூழாவடி என்பதும் நயினைகுளம் என்பதும் இவ்விடத்திற்குப் பெயர்.



தீர்த்த உற்சவத்தன்று ஐயனுர் இங்கு எழுந்தருளுவார். ஆலயத்தின் மேற்குத்திசை சமுத்திரத்தில் சங்கம தீர்த்தம் இருக்கின்றது. இது சேது தீர்த்தம் வந்து சங்க மிக்கும் புனித தீர்த்தமாகும். இதில் நீராடுவோர் தம் பாவங்கள் எல்லாம் நீங்கி பேரின்பம் அடைவதாக நம்புகிறுர்கள். புனித தீர்த்த மண்டபத்தின் தோற்றத்தையும் இங்கு காண்கிறீர்கள்.



ஆலய முகப்பில் காணப்படும் திருக்கேணி.



வாகனசாலையின் ஒருபக்கத் தோற்றம்




கொடித்தம்பம்



வடகிழக்கு வீதியில் உள்ள பழைய அன்னதான மடம் - நேர்த்திக்கடன் நிறைவேற்றுவோர் தங்கள் அன்னதானத்தை இந்த மடத்தில் நடத்திவந்தனர். நாளடைவில் இம்மடத்தின் இடவசதி போதாமல் வரவே பொதுமக்கள் ஒன்று கூடி அன்னதானசபை ஒன்றை ஸ்தாபித்து, ஊர்மக்களிடம் நிதிதிரட்டி புதிய மண்டபத்தை அமைத்தனர்.



ஆலயத்தின் தென்கிழக்குப் பக்கமாக அடியார்களுக்கு தாகசாந்தி அளிக்கும் தண்ணீர்ப்பந்தல் - மண்டபம் அமைந்துள்ளது. சைவப்பெரியார் அமரர் எஸ். பொன்னம்பலம் அவர்கள் இப்பணியை நீண்டகாலமாகத் தொடர்ச்சியாகச் செய்துவந்தார். தற்போது அவரது மக்களால் இப்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



ஆலயத்தைப் பிரகாசிக்கச் செய்துகொண்டிருக்கும் மின்சார இயந்திரசாலை.



ஆலய பரிபாலன சபையாரின் நிர்வாக அலுவலகம்.

உ

# அனலைதீவு ஐயனார் தோத்திரத் திரட்டு

வரகவி முத்துக்குமாருப் புலவரும்
திரு. ஆ. ஐயம்பிள்ளைப் புலவரும்
பாடியவை

காப்பு

கலித்துறை

பொன்னக மெங்கும் பொருந்து மணலயம் பொற்பதியில்
தன்னக மாகிய ஆலயம் மேவிய சாத்தனையான்
என்னக மீதி லிருத்தித் துதித்து இறைஞ்சுதற்குப்
பன்னக வேணியன் முன்னருள் சேயைப் பணிகுதுமே

ஆசிரிய விருத்தம்

உத்தம சுகந்தபரி பூரண னந்தனே
யுனதுபத தாமரையதா
மொண்மலர் கசிந்துவழி யருளெனுந் தேனையா
னுள்ளநிறையக் கொள்ளவே
நித்தமுந் தாவுனை நினைத்துத் துதித்துமனம்
நேசிக்க ஞானவருள்தா
நினைவுற்ற கருமமுங் கல்வியுஞ் செல்வமும்
நீடாயுளும் பெரிதுதா
நத்தமுறு மத்தற்கும் முத்தற்கும் நடுவாகி
நட்பிற் பெறும் புதல்வனே
நற்பழன நெற்பயிர்கள் சுற்றணல யுற்றுறையும்
நாதனே சிவபோதனே
அத்தமணி பெற்றமுடி யேற்றுலகை யரசுபுரி
யட்சர சதாயநமவே
ஆதிருத் திரரூப செகதம்ப காளகட
அரிஹரர குமாரநமவே

ஊப்புக் கசிந்துநிண மொக்கக் கலந்துதிர
        முற்றுக் குழைந்தகுழியி
    னுட்பட் டிடுங்கழுதை துக்கப் படுத்தமல
        மொக்கச் செறிந்தபாண்டம்
வெப்புற் றிடும்பலபொ யிட்டுப் பொதிந்தபொதி
        மிக்கப்பெருப் பவமதாம்
    வித்திட் டிடுங்கூடு ரத்தக் குணப்பாடு
        மெத்திக் கிடந்தவீடு
இப்பெற்றி கொண்டனடி யைப்பெற் றிடாதநா
        னெப்பெற்றி யாளாகுவே
    னினியுன தடைக்கல முனக்கபய முன்தஞ்ச
        மெனையடிமை கொண்டருளுவாய்
அப்பிற் படும்பவள மொப்பிற் பெருஞ்சடில
        அணலயந் தேவநமவே
    ஆதிருத் திரரூப செகதம்ப காளகட
        அரிஹர குமாரநமவே

மாதா வயிற்றிற் செனித்துப் பிறந்தறிவு
        வந்திந்த வயதாகியும்
    வாணாள் கழிக்கவழி யறியாத யானிந்த
        மாயப்பிர பஞ்சமென்னும்
பாதாள மீதிற் புகுந்துகலி யென்றிடும்
        பாரமலை யைச்சுமந்தே
    பஞ்சபா தகமெனும் வலையினுட் சிக்கியே
        பலநாளு மழுதகுரலுன்
காதார நுளையுமே ஐயனே யினியுன்
        கடைக்கணரு ளைப்பரப்பிக்
    கலியையும் பிணியையும் வலியதீ வினையையுங்
        காலா லுதைத்துருட்டி
ஆதார மாகிநின் றடிமைகொண் டருள்புரியு
        மணலயத் தேவநமவே
    ஆதிருத் திரரூப செகதம்ப காளகட
        அரிஹர குமாரநமவே

சந்தமிகு பொன்னொளி தயங்குதரு நீழலுறை
        தலைவன்முதல் யாருமின்றித்
    தனிவனந் தனிலுனது கையடையதாகியுறை
        தமியளாகிய சசியையே
வந்துஅசு முகிபற்ற வலியபுலி வாயிலுறும்
        மானென்ன மதியழிந்தே

வரதனே செண்டலங் காரனே ஐயனே
வாவா வெனக்கூவியே
சிந்தையி னிரங்கியழு சசியைவிடு வித்துவரு
தீயவள்கை யற்றுவிழவே
திருவுள மிரங்கியருள் கடவுளே யுன்புதுமை
செப்புதற் கெளிதாகுமோ
அந்தமிகு தவளமத தந்திபிட் ருந்திவரு
மணலயந் தேவநமவே
ஆதிருத் திரரூப செகதம்ப காளகட
அரிஹர குமாரநமவே

சீதசந் திரசோதி நளினமுக பிரபையுஞ்
செம்பதும ரத்னகுழையுஞ்
செண்டலங் காரமுங் கண்டிகையுந் நீறுடு
தேகமுஞ் சிவயோகமும்
மூதண்ட முகடளவு மகுடமுந் திசையெலாம்
மூடிவரு நெடியசடையும்
முக்கண்ணு மரவணியுமக்குமா லிகையுமெழில்
முறுவற்கிரு பைப்பெருக்குஞ்
சோதிசா மளவர்ண வகளங்க சயபுயச
சுந்தர மளந்தமுத்துத்
தொங்கல்கங் கணமங்க தம்பொன்னினரைஞாண்
துலங்கவந் தருள்புரிகுவாய்
ஆதபத் திரநீழல் தந்தெமக் கருள்புரியு
மணலயந் தேவநமவே
ஆதிருத் திர்ரூப செகதம்ப காளகட
அரிஹர குமாரநமவே

கோதிச் சுழித்தமுடி யழகமசை யைக்கட்டு
கொத்துமுத் தாரமசையக்
கொங்குற்ற கோதையுந் தங்கரத் தினபொற்
குமிட்புஞ் சிமிட்புமசையக்
காதிற் செறிந்தகுண் டலமசைய விருவிழிக்
கயலசைய வதனசந்ர
காந்தியசை யப்பவள வாய்முத் தரும்பவொளி
கைக்கமல வளையலசையச்
சீதச் செழுங்களப மளவியணி வாரிணைச்
சினவுதன கும்பமசையத்
திருமருவு துணைவியர்க ளிருபுறமு மசையவரு
தெளிகருணை வாரியெனவே
ஆதிக்க மாய்நடுவி லுறைகின்ற மணிவர்ண
அணலயந் தேவநமவே
ஆதிருத் திரரூப செகதம்ப காளகட
அரிஹர குமாரநமவே

கருமுகிற் குலமதென வருசினத் தெருமைபல
கலையடிப் படநடவவே
கமலமொட்டுடையநிறைதரளமெற்றிடவெருவு
சரியகட கயலுலவியே
வருசரத் தினிவெரு வி வானமுயிற் குலைசிந்தி
வனசப் பழம்பிளந்து
மாவினிற் கனியை முட்டித் தெங் கினம்பாளை
மடலைக் கிழித்துவாவிப்
பெருமதத் துளிதுளித் தினமுளைக் களனியிற்
பிறளும்வரி வளையுருட்டிப்
பிறனத் திரளினுந் தலைமடைக் குருகினும்
பிடரிகைப் படமோதியே
அருகினிற் றண்டலைக ளமருநர் பெருவளமை
அணலயந் தேவநமவே
ஆதிருத் திரரூப செகதம்ப காளகட
அரிஹர குமாரநமவே

மிடல்கொ ளத்தவள தந்திமேல்வரும் மாசாத்த
விமல வமலாவரிய
வேதாந்த நாயகா சாத்தா புறத்தவா
மெய்ஞ்ஞான சிவசொரூபா
படவரவு கங்கண ஐங்கரற் கிளையவா
பரமேஸ்வரன் புத்திரா
பாரிடர்க ளதிபா செண்டலங் காரா
பசும்பொற்பிர காசசடிலா
கடல்நிறக் கடவுளே பூரண புட்கலை
கருத்துநிறையுங் கணவனே
சாரியே மிகுகருணை வாரியே குறமாது
கணவனுக் கொருதுணைவனே
அடல்கொள்குக் குடதுவச லங்கார பிரதாப
அணலயந் தேவநமவே
ஆதிருத் திரரூப செகதம்ப காளகட
அரிஹர குமாரநமவே

மஞ்சவன் னத்தூது கோவைவண் ணமுதற்
பலபாவினங் கள்தன்னுற்
பாரியுப காரிமத ரூபியள காதிபதி
பரராசன் நீயென்னவே
செஞ்சொலிசை கொண்டுபின் சென்றஞ்சி யவர்புறத்
திண்ணையி லொதிங்கினுலுந்

தினையளவு மெண்ணுர்கள் தீரா வகந்தையொடு
சித்திரப்பொறி போலுறும்
வஞ்சமிகு நெஞ்சரைக் கனவிலும் நினைவிலும்
மற்றுள பிறப்பிலேனும்
மதியாம லெள்ளளவு முன்னடி வணங்குநல்
வரமெனக் கருள்புரிகுவாய்
அஞ்சன மணிப்பிரபை யஞ்சவெழில் மிஞ்சுசுக
அணலயந் தேவநமவே
ஆதிருத் திரரூப செகதம்ப காளகட
அரிஹர குமாரநமவே

சுத்தப்ர காச வட்டப்ர மாகாச
சுளிவட்ட முகடுமுட்டத்
துரியமு லாதார அளவுகண் டோடியே
சுழலுமொரு பிரணவமதாஞ்
சத்தத்தில் நாதமாய் விந்துவாய் விந்துவிற்
றங்கியெழு பஞ்சகிர்த்தியத்
தலைமையா யைம்பூதநிலைமையா யதில்வருஞ்
சரமசர சீவதத்வச்
சித்தத்தில் நின்றுயர் நிருத்தஞ்செய் தடியவர்கள்
தீவினைக் கதவடைத்துச்
சென்மவழி யைக்கட்டி நன்மைவழி காட்டுமுன்
திருவுளக் கருணையெளிதோ
அத்தத் திருச்செண்ட லங்கார மாசாத்த
அணலயந் தேவநமவே
ஆதிருத் திரரூப செகதம்ப காளகட
அரிஹர குமாரநமவே

---

## ஐயனுர் திரு ஊஞ்சல்

### காப்பு

கரந்தைபுனை கண்ணுதலுங் கண்ணன் முனுங்
களிப்புடனே கலந்துதவு காரி தன்மேல்
உரந்தருபொன் னூஞ்சலிசை யோது தற்கு
உம்பல்முகத் துடனுதித்தெவ் வுலகு முய்யப்
புரந்தரன்பூ சனையியற்றப் பொன்னி யாற்றைப்
பூங்காவில் வரச்செய்த புனிதன் றன்னை
நிரந்தரமா யுயிர்தோறும் நிறைந்து நிற்கும்
நின்மலனு மைங்கரன்முள் நினைகு வாமே

இரவியெழு நழுவிருநாகந் தூண தாக
இடையிலுறு மொருநாகம் விட்டமாகப்
பரவுபண பாயிரமேல் வராக நாகம்
படக்கிடக்கு மொருநாகம் பருநா ணாக
மரபினுயர் மேல்நாகச் சுவாராஞ் சக்ர
வாளவட்டப் பூநீலம் பலகை யாக
உரமுறுநான் முகன்படைத்த ஊஞ்சல் வைகி
உய்யவுல கையனே ஆடீ ரூஞ்சல்.

சந்திரசூ ரியர்கிரண கவிகை தாங்கச்
சமன்நிருதி யாலவட்டந் தடக்கை யேந்த
இந்திரன்கா ளாஞ்சிசா மரைகால் கொள்ள
இருநிதிமன் னவனடைப்பை யினிது தாங்க
அந்தமில்சீர் வருணனங்கை யுடைவாள் பற்ற
அணலநக ராரியரே ஆடீ ரூஞ்சல்
சுந்தரஞ்சேர் பூரணைபுட் கலைபங் காகத்
துய்யதிற லையனே ஆடீ ரூஞ்சல்.

பாதாளப் பெருங்கடலின் நடுவ ணாகப்
பல்காளப் பன்னகப் பணமேலோனு
கூகாள கண்டவுருக் கொள்ளு வோனும்
கொடுமைபட வருசூரைக் கெடுநங் காளை
ஏகாளை யுங்கரத்தை யீர்க்கும் வாளை
யிடைசேர்த்துக் கடைகாத்தெப் போதும் நிற்கும்
மாகாளர் படையுடனே போற்றி செய்யும்
மாசாத்தப் பெருமானே ஆடீ ரூஞ்சல்

போரேற்றி னுகம்பிணிக்கும் மள்ள ரார்ப்பப்
பொங்குபங்க நீள்கயல்கள் புரண்டு தாவித்
தூராற்றுந் தருவினிறால் கிளிக்கச் செந்தேன்
துள்ளருவி வெள்ளமனைத் தூம்பு தூங்கும்
பேராற்றும் வளநயினர் குளக்கட்கோயில்
பெரிதுவந்த ஆரியரே ஆடீ ரூஞ்சல்
நீராற்றுஞ் சடிலரன்மான் மகவாய் வந்த
நித்தியபூ ரணைசாத்தா ஆடீ ரூஞ்சல்

வானவர்கள் மன்னவர்கள் வாழ்த்தி நிற்ப
மாதர்மா முனிவர்கணம் வாழ்த்தி நிற்ப

ஈனமில்லா மறையவரபல் லாண்டி சைந்ப
இசையிசைத்துத் தும்புருநா ரதர்க ளேத்தக்
கானமருந் திருவணலப் பதியில் மேவுங்
கதியுதவு நயினார்நற் குளமே மேலா
யானதிருக் கோயிலெனக் கொண்ட நாதா
அரிஹரபுத் திரப்பெரும ஆடீ ரூஞ்சல்.

கன்னலொடு செந்நெல்விளை துன்னும் வன்னக்
கலைபயிலும் வயலினைய லியறுங்காமர்
பொன்னிகர்செங் கமலமலர் சொரியு முத்தைப்
புதுமதியி னுதயமெனப் பொங்குஞ் செங்கேழ்
மின்னிய செங்காவி மலரலரும் வாவி
விளங்குசீ ரணலநகர்ப் பதியின் மேவி
மன்னர்புகழ் துன்னுபொன்னு லயத்தில் வாழும்
மால்சுதரே மாசாத்தா ஆடீ ரூஞ்சல்.

செம்மைநல மறியாத சிதட ரோடும்
திரிவேமைச் செந்நெறிக்கட் சேர்க்கு மாற்று
லிம்மையில்சந் திகள், சதுக்கம், தெற்றி, வீதி
யெவ்விடத்து மெழுந்தருளு மிறைவர் நீரே
கம்மெனுநீர்த் திருவணல கோயில் கொண்ட
காரணரே யெம்மையிங்கு காத்தெந் நாளு
மிம்மையினிற் சூழிடர்கள் யாவு நீக்கி
யிருப்பவரே மாசாத்தா ஆடீ ரூஞ்சல்

கொண்டலெழ விடுதாழை வாழை தாவிக்
குடக்கனிவிண் மடக்கயல்கள் குதிகொண் டேறி
விண்டுமது சொரிபலவின் கனிகள் கீறும்
வியன்பழனத் தணலநகர் விளங்க வந்த
செண்டுலவு கரத்தரசே ஆடீ ரூஞ்சல்
திகழணல வாரியனே ஆடீ ரூஞ்சல்
அண்டர்தமக் காரமுதே ஆடீ ரூஞ்சல்
அரியரனார் புத்திரரே ஆடீ ரூஞ்சல்

வாழி

சித்துரவா ரணம்வாழி சேவல் வாழி
திறன்மகா காளர்முதற் சேனை வாழி
சந்ரநுதற் பூரணைபுட் கலையும் வாழி
சதுர்வேத வாச்சிரம தருமம் வாழி

மந்திரவே தியர்வாழி மகங்கள் வாழி
வான்மகளிர் கற்புநெறி மநுநூல் வாழி
எந்தையரி ஹரகுமர னடியார் வாழி
எழிலணலப் பதியென்றும் வாழி வாழி

---

## எச்சரிக்கை

பாலாளி யிற்றுயில்மா லரன்பாலா அனுகூலா
நீலாளி சுற்றணையூ ருறைநிமலா எச்சரிக்கை
—எங்கள் அமலா எச்சரிக்கை

காலாயுதக் கொடியோய் கடதடவா ரணமுடையோய்
சேலார் தடம்பணைசூ ழணைத்தேவே எச்சரிக்கை
—எங்கள் கோவே எச்சரிக்கை

கண்டு நேர்மொழி வண்டு சேர்குழல் கயலார் விழிமடவார்
விண்டு வாய்த்துதி கொண்டு போற்றிடும் விமலா எச்சரிக்கை
—எங்கள் அமலா எச்சரிக்கை

திண்டி பேரிகை கொக்கரை சல்லரி சின்னமும் பலதுன்னவே
கொண்டல் வாரணப் பிடரமேலிவர் குழகா எச்சரிக்கை
—எங்கள் அழகா எச்சரிக்கை

நந்து சேர்புனற் றுறைசூழ் பண்ணை நயினர் குளப்பதிசேர்
சுந்தரத் திருமந் திரத்தவர் சுவாமி எச்சரிக்கை
—எங்கள் சுவாமி எச்சரிக்கை

---

## பராக்கு

பூசுரர்கள் வாணலப் புரியோய் பராக்கு
பூரணைபுட் கலைகணவ புனிதா பராக்கு

அடியரிடர் தீர்த்தருளு மமலா பராக்கு
ஆறங்க நால்வேத மானே பராக்கு

வாரணா ரூடமா சாத்தா பராக்கு
மருவுசெண் டாயுதக் கரனே பராக்கு

தேரேறி வருமைய னாரே பராக்கு
தீவினை களைந்தெமைக் காப்பாய் பராக்கு

அரிஹர குமாரனே ஐயா பராக்கு
அணலநயி னார்குளத் தமர்வோய் பராக்கு

# ஐயனூர் கவசம்

அரியர குமாரா அடியனே னழைக்க
வருவா யுன்றன் மனமுவந் தென்முன்
மாயவன் சிவன்மகன் வருக வருக
நேயமாய்ப் பூரணே நினைவோன் வருக
புட்கலை மணாளா போற்றிட வருக
முக்கணன் தந்த மூர்த்தியே வருக
செக்கர்வா னிறச்சடைச் செம்மலே வருக
செண்டா யுதனே சீக்கிரம் வருக
வண்டார் துளவணி மகனே வருக
அண்டர்கள் போற்று மையா வருக
பூங்கடல் வண்ண புவிதனைக் காத்திடுங்
கருணைமா சாத்தனே கர்த்தனே வருக
வெள்ளைவா ரணமேல் விளங்கிடு மெங்கள்
வள்ளலே யென்முன் வருக வருக
இந்தி ராணித னிடர்தனை யகற்றும்
மந்திர வடிவே வருக வருக
கட்டிய சடையுங் காதிற்குண் டலமும்
இட்டமுப் புரிநூ லிலங்கிட வருக
துட்டநிக் கிரக சிட்டபரி பாலன
அட்டதிக் கும்புக முரசே வருக
அசமுகி கரத்தை யறுத்தமா காளனும்
பூதப் படையும் பொலிவொடு விளங்கப்
பாதச் சிலம்பொடு பலபணி யிலங்க
அணலயம் பதிவா ழையனே வருக
கணநாதர் போற்றுங் கடவுளே வருக
ஓம் ஆம் என்னு முயர்பரா பரனே
ஆம் ஓம் என்னு மாதியே வருக
ஐந்து கடவுளா யைந்தொழில் நடாத்தும்
எந்தையே தந்தியி லிவர்ந்துநீ வருக
வஞ்சனை சூனியம் மாற்றிட வருக
பவமறுத் தருட்கண் பார்த்திட வருக
ஆபத்து வேளையி லையா வருக
கோபத்தை மாற்றிக் கொண்டே வருக
என்னென்ன பிழைக ளோதிருந் தாலும்
அன்னைபோற் காத்து அருள்செய வருக
எங்கிருந் தாலு மென்னெதிர் வருக
அடங்குவஞ் சகமுனி யலகை கூளிகளும்
அஞ்சிட வென்முன் ஐயநீ வருக

ஊத்தை குடியன் உதிரமா காளி
காத்தவ ராயன் கலங்கிட வருக
மாட னிருளன் மற்றுள பேய்கள்
சாடா தென்னைத் தாங்கிட வருக
காளி கறுப்பன் காடனு மிவர்களைத்
தூளிதப் படுத்தத் துரத்திநீ வருக
காய்ச்சலு மிருமலுங் கட்டுங் க்ஷரப்பனும்
பீச்சலு மகற்றப் பெம்மான் வருக
வாதமும் பித்தமும் வாந்தியும் மாந்தமும்
ஓதிடு மவர் வினை யோட்டிட வருக
தொங்கலுஞ் சன்னியுந் தோஷமுங் க்ஷயமும்
மங்கிட என்முன் வருக வருக
ஒன்பது கிரக முடன்பகைத் தாலும்
அன்புடன் காக்க ஐயனே வருக
மன்னரு முலகமும் வான்பகை கொளினும்
உன்னையான் நினைக்க வோடியே வருக
சந்ததி தோறுமுன் முள்கள் வணங்கத்
தந்திடு மாறு தமியேன் வேண்டினன்
அணலயம் பதியுறை ஐயனே சரணம்
அரிஹர குமார ஆதி நமஸ்தே.

—வரகவி, முத்துக்குமாருப்புலவர்.

[இந்த ஐயனார் கவசத்தைத் தினந்தோறும் காலை மாலை கிரமமாக ஓதிச் செபஞ்செய்து வந்தால் கிரகப் பகையும், பிணியும் வறுமையும். பேய், பில்லி, சூனியங்களாலுண்டாகுந் துன்பமும், பழி பாவங்களும், உடனே நீங்கும். செல்வமும், கல்வியும், தீர்க்காயுளும், களத்திரபுத்திரப்பேறும், இராசசன்மானமும், வெற்றியும், நினைத்தகாரியங்கள் சகலமுங் கைகூடப்பெற்று இன்புற்றுவாழுவர்; இது திண்ணம்,]

# கீர்த்தனைகள்

## விநாயகர் காப்பு விருத்தம்

சீர்மருவு பலவளங்க ளென்னாளுங்
குறைவின்றிச் சிறப்புற் றோங்கும்
பார்மருவு மணலநகர்ப் பதிவாளும்
மாசாத்தர் பதங்கள் பாடக்
கூர்மருவு மொருகொம்பு தனைமுறித்துக்
கயமுகனைக் கொன்று வென்ற
கார்மருவும் விகடதடக் கரிமுகத்துக்
கணபதிதாள் காப்புத் தானே.

பார்த்தனுக்குச் சாரதியாய் ரதத்தை யோட்டிப்
பாண்டவர்க்குத் துரியனையும் பகையாய் மூட்டிக்
கூத்ததிகம் செய்துவிளை யாட்டுக் கொண்ட
கோவிந்த னோடரனும் கூடிச் சேர்ந்து
காத்தெமைரெட் சிக்கவென்று தந்த வையா
கரமதனிற் செண்டுகொண்டு கடனீர் பொங்கி
ஆர்த்தலைகள் புடைசூழ அனலவாழ மரிஹரகு
மாரரெனக் கருள்செய் வாரே.

பல்லவி

ஐயனே அருள்தருவாய் - அணலநகர்
ஐயனே அருள் தருவாய்

மையலாகி உலகமாய்கை தனிலே வெம்பி
வந்தே னுனதுபத மலரடி தனைநம்பி — ஐயனே

பாதி மதிநதியெப் போதும் சடைக்கணிந்த
பரமனரு ளாயணலப் பதியிலே வந்தமர்ந்த
— ஐயனே

வாதும் கொலைகளவு சூதும்பொய் யோட
வந்துன் யடியவர்கள் கூட்டத்திற் கூட — ஐயனே

ஆவிபோம் பொழுதுன்னைக் கூவிநா னழைத்திட
மேவி மதகரிமேல் பாவியடியேனுக்கு — ஐயனே

கலித்துறை

உலக மெலாமிரந் துண்ட வனுமுர லோடுகட்டுண்
டலகை முலைப்பா லருந்திய மாய னளித்தனலத்
தலைவ னெனத்தரு மாசாத் தனேதமி யேன்மகிழ
மலைநிகர் வெள்ளை மதகரி மீது வருகுவையே.

பல்லவி

மதகரி தனிலேறி வருமெங்களையனே மறவா திருமனமே

அனுபல்லவி

கதிதர அணலயம் பதிதனில் வாழும்
காரியே புறத்தவா கருணைதந் தாளும் — மதகரி

சரணம்

அரனு மரியுங்கூடி யளித்திடு மையனே அணலயம்பதி
தனில்
அமர்ந்திடும் மெய்யனைக் கருனைசெய் தடியரைக்
காக்கின்ற
துய்யனைக் கன்மனத் தவர்கண்ணில் காணுதபொய்யனே
— மதகரி

அண்டர்கள் போற்ற அணலயில் வாழ்வோனே
அன்னை பூரணி புட்கலை மணவாளனே
தண்டை சதங்கை சிலம்பணி தாளனே
தாரணி வாசத் துளவணி தோழனே — மதகரி

வையம் பரவும்பூங் கடநிறத் தழகும்
மதிமுகத் தழகும் வார்சடைமுடி யழகும்
கையிற் றரித்தசெண்டுங் காதிற் குழையழகும்
காக்குங் கருணையோடு பார்க்கும் விழியழகும் — மதகரி

நேரிசை வெண்பா

காராயோ வெந்தனிரு கண்கலக்கம் பார்த்தருளைத்
தாராயோ மாசாத் தரேயெனக்கு - நேராக
வந்தேனுன் சன்னிதியில் வாட்டும் வினைப்பாச
பந்தமெலாந் தீர்த்தருட்கண் பார்.

பல்லவி

பார்க்கப் பவங்கள்பறந்தோடும் மதகரிமேற் பவனி
வருவதை

ஆர்க்கும் மேலான சிவன் அரியுட னருளிய
ஐயனை யருடரு மெய்யனை விரிசடை துய்யனைச்
செண்டணி கையனைக் கண்ணுல் — பார்க்க

புத்தியும் வித்தையும் பலபொருளும் அருளும் ஞான
போதனை அணலவாழ் நாதனை யடியவர்
வேதனை தவிர்த்தபொற் பாதனைக் கண்ணுல்
— பார்க்க

சிந்தை மகிழ்ந் தணலவந்தன் போடமர்ந்திடும்
சீலனைச் சிவனருள் பாலனை முப்புரிநூலனைக்
கழலணி காலனைக் கண்ணுல் — பார்க்க

மெய்யாகவே விளங்கு மையாயிரம் படை
வீரரும் வாட்படை வீரமா காளரும்
விளங்கிடத் தவில்சின்னம் முளங்கிடவருவதை
— பார்க்க

கலித்துறை

மண்ணுஞ் சுமந்தடி பட்டவ னும்மண் ணுழுதபன்றி
எண்ணும் திருப்பெயர் பெற்றவ னும்மெமை யாள
வென்று
முன்னந் தரவந் தணலப் பதிவாழ் முதல்வனையென்
கண்ணுங் கருத்தும் நினைந்தே கசிந்து களிக்கின்றதே.

பல்லவி

கருணை செய்தெனைக் காரும் ஐயனே

அனுபல்லவி

மருமலர்ச் சோலைசூழும் அணலப்பதி
வாழுமடியார்க் கெந்நாளு மகிழ்ந்து — கருணைசெய்

சரணம்

வெள்ளை மதகரி மேல்வரு மையனே
வேண்டு மடியார் வினைதீர்க்கும் மெய்யனே
அள்ளியே கட்டும் சடைபிர காசிக்க
அரிஹர குமரா வந்து அடியார்க் கருளைத்தந்து
— கருணைசெய்

அன்றிந் திராணியைக் காத்திட்ட வீரனே
அசமுகி கையை அறுப்பித்த தீரனே
மண்டலத் தோர்கள் மகிழ்ந்து துதித்திட
வாருவா யென்னருகா கத்தருவா யுன்னிருபாதம்
— கருணை

பக்தர்கள் போற்றிப் பணிந்திடும் பாதனே
பாம்பணி யும்பரன் தந்திடும் நாதனே
சத்துரு சங்கார வொய்யார கெம்பீரனே
சரணஞ் சரண மையா தருணந் தருணம் வந்து
— கருணை

விருத்தம்

கஞ்சனைமுன் வென்றவனுங் கரியுரித்துப்
போர்த்தவனுங் கருணை கூர்ந்தே
அஞ்சலென வடியவரைக் காத்தருளத்
தந்தவையா வடியேன் மீது
வஞ்சகம்போ லிருக்காதே மனமகிழ்ந்து
வறுமையெலாம் மாற்ற வேயுன்
நெஞ்சமின்னு மிரங்காம லிருந்தா
லுமக்கிதுவும் நீதி தானோ.

பல்லவி

நெஞ்சிரக்க மில்லையோ என்னையா இப்போநீ
யெனக்கருள் புரிவாய் மெய்யா — நெஞ்

அனுபல்லவி

தஞ்சமென் றுனைவணங்கக் குஞ்சரந் தனிலிவர்ந்து
கஞ்சமலர்த் தாளிணைதந் தஞ்சலென் றெனையாளுவாய்
— நெஞ்

சரணம்

கன்னலுஞ் செந்நெலும் புடைசூழும் நயினைகுளம்
தன்னருகி லேநிதமும் வாழுமன்ன பூரணிபுட்கலை
நாளும் மனம்மகிழ அன்புடனணைய நகராளும்
மன்னவனே யுன்னையன்றி யின்னிலந் தனிலெனக்கு
அன்னைதந்தை வேறுமுண்டோ ஐயனே யெனக்கருள
— நெஞ்

பட்சமுடனென்னருகில் வாராய் - சிறு
பாலகன் மனக்கவலை தீராய்
கச்சணி தனச்சகிக்கு நோய்வந்து
காட்சிதந்து காத்தருளும் வீரா
அச்சுதனே டேயரனு மிச்சையுட னேயனைய
அக்கணத்தி லேயுதித்த
அப்பனே யெனக்கருள — நெஞ்சிரக்

வஞ்சகம்பொய் சூதுகொலை போக்கி - உந்தன்
மலரடி வணங்கவும் ஆளாக்கி
நெஞ்சினிற் கவலையெல்லாம் நீக்கி - இந்த
நேரமேயுன தருட்கண்நோக்கிப்
பஞ்ச பாத கங்க ளெல்லாம் பஞ்சுபோற்
பறந்து மாள வஞ்சகஞ் செய்யாம
லென்முன் வந்தருள் தந்தெனையாள — நெஞ்சிரக்

கலித்துறை

ஆயர் குலத்தி லசோதையின் பாலர னேடளித்த
சேயனைச் சிந்தனை செய்யாம னனிச் செகந்தனிலே
காய மதனை நிலையென் றெண்ணிக்கயற் கண்ணியர்கள்
மாய வலைப்பட்டு வாழ்நாட் களித்து மயங்கினனே.

பல்லவி

பாவி ஐயனே கடைக்கண் பாரும் மெய்யனே
மாயன் பாண்டவர் சகாயன் வெண்ணையுண்ட
வாயன் தரும்பாலா
மாது பூரணை புட்கலை யென்னளும்
மனதின் மகிழ்லோலா — பாவி

ஓடியுலகெ லாம்வாடி யுனைக்காணத்
தேடியிங்கு வந்தேன்பார்
மோடி செய்யாம லுனது பதமலர்
மோட்சந் தந்தே யெனைக்கார் — பாவி

எந்தன் மனதுமகிழ்ந் திடவேயொரு
மைந்தனைத் தந்தருள்வாய்
தந்திமீ தேறியே யுந்தன் மனமகிழ்ந்
தெந்தன்முன் வந்தருள்வாய் — பாவி

கட்டளைக் கலித்துறை

ஆட்டை யெடுத்துக்கொண் டம்பலத் தேநிற்கு
மாண்டியுடன்
ஆட்டை யெடுத்துக்கொண் டாயர் மனையி லலைந்
தவர்பெண்
ஆட்டை யெடுத்துக்கொண் டன்னுடை வத்தை யளித்து
மகிழ்ந்
தாட்டை யெடுத்ததி னல்வந் தணல யமர்ந்தவனே.

பல்லவி

அணலப்பதி ஐயனே என்னை
ஆதரித் தருண்மெய்யனே,
அந்த ரத்தவர் நிலமும்
வந்தனை செய்தே வணங்கும் — அண

வஞ்சமாம் பிரபஞ்ச மாயையில் வாடியேயுனை
நாடினேன்
வாது செய்யாமலேநீ யிப்போ தெனக்கருள் புரிவாய்
அணல
சங்கு சக்கரக் கோதண்டக் கையன் றன்னோடு அரன்
தந்தவா
தாயிலு மினியவனே சேயனை விடஞாயமோ — அண

மாயவாழ்க்கையு மோயவேயெமன் வந்துமே
துன்பந்தந்துமே
மாட்டியேவலையில் சூலம்நீட்டியே குத்திடமுன்னம்
— அண

கலித்துறை

கைப்பாசஞ் சூலங் கதைகொண் டெமன்கடா வேறி
வந்தால்
இப்பா ருலகி லெனக்கா ருதவியென் றேங்கியஞ்சி
அப்பா லணலப் பதியில்வந் தேனுன் னடைக்கலங்கார்
எப்போ விரக்கம் வருமோ வுமக்கெனை ரட்சிக்கவே.

பல்லவி

எப்போ யிரங்குமையனே உமக்கு மனம்
எப்போ யிரங்குமையனே

முப்போகமும் விளைவு தப்பாமலே செழிக்கும்
அப்பா அணலப்பதி ஐயா வுமக்குமனம் — எப்போ

வாடியே மனதில் நொந்துதேடியுன் பதியில்வந்து
பாடியே யலர்பதங் கூத்தாடியு மிரக்கமில்லை - எப்போ

வஞ்சிபூரணை புட்கலை கொஞ்சிடும் கணவாவுன்னை
தஞ்சமென்றடிபணிந்து கெஞ்சவு மிரக்கமில்லை – எப்போ

எல்லையில்லா என்றுயரம் மெல்லமெல்லவே யுமக்கு
கல்லையும்முருக்கும்படி சொல்லவும் இரக்கமில்லை
— எப்போ

கலித்துறை

ஆரணத் தேவு மயிரா வதத்தனு மன்றுதொழ
வாரணத் தேறி வருமைய னேவகை யொன்றறியாக்
காரணத் தால்முழு மூடன் படித்த கவிப்பிழையைப்
பூரண மாகப் பொறுத்தே யருளைப் புரிகுவையே.

பல்லவி

என்ன சொன்னாலும் திருச்செவிக்
கேராதிருக்கும் வகையேதையா

அனுபல்லவி

அன்னம் பாலிக்கும் பொன்னம் பலத்தில் வாழும்
ஐயர் அருளால் வந்த மெய்யரே என்னாளும் — என்ன

சரணம்

சன்னதி முன்னின்று என்னைப்போ லேழைகள்
சரணஞ் சரண மென்பதாலோ
தாவிக் குயில்வந்து கூவிப் பூஞ் சோலையில்
சத்தம் வைத்திடு வதினாலோ
அன்னை தந்தையரைச் சன்னை செய்திட்டனே
அல்லாம லுன்னடியாரை வைதிட்டனே — என்ன

பேரிகை சல்லரி மேளந் தடாரிகை
பேசும் முழக்கத் தினாலோ
பெண்க ளிருவர்க்கும் பிள்ளையில் லாமனப்
பேதமை கொண்டதினாலோ
வார்செறி மத்தள தாளத்தி லாசையோ
வந்தடி யார் நிதம் போற்றிடு மோசையே — என்ன

அருகினி னின்று மாகாளருஞ் சேனையும்
ஆர வாரிப்ப தினாலோ அது அல்லாமல் வாசலி
லண்டம் நடுங்கவெள் ளானை
சத்தம் வைப்பதாலோ

தருமமோ உமக்குச் சாமி தயவாகச்
சாற்றும் பதங்களை யேற்று அருள்புரி — என்ன
தாயாகும் மாயவன் ஆயர் வீட்டில்
வெண்ணெ தயிர்தின்ற
தென்பதினலோ
தந்தையிரந் துண்டா னென்றுலகில் சொல்லச்
சஞ்சலம் மிஞ்சின தாலோ காயாம் பூவண்ணனே
காதடைத் திட்டதோ காருங் காருமென்னக்
கறுவம் வந்திட்டதோ — என்ன

கலித்துறை

என்போடு கொம்பு தரித்தெரு தேறிடு மெங்கள்சிவ
சம்போடு சங்கரி தந்தவ னேதமி யேன்மகிழக்
கொம்போடு நால்வாய்ப் புழைக்கை யுளவெள்ளைக்
குஞ்சரத்தில்
அன்போ டிவர்ந்தரு டந்தாளணல் யமர்ந்தவனே

பல்லவி

அணலயம் பதிவாழ் ஐயன் பெருமை
ஆருக்குத் தான்தெரியும்

அனுபல்லவி

கணநாத ரெங்கணு மேபுடை சூழமா
காளரும் வாள்கரத் தேந்தியே தாழ
மணமலர் வாசனை யந்தரம் நீழ
மாசாத் தனைக்கண் டென்பவம் மாள — அணலயம்
தும்புரு நாரதர் கின்னரர் பாட
தொந்தோ மென்று கைத் தாளங்கள் போட
சிந்தை மகிழ்ந்துகந் தருவர்களாடச்
சிவசிவ வென்றந் தணர்களுங் கூட — அணலயம்
அரம்பாஸ் திரிகள் நாட்டியம் புரிய
அந்தரத் தில்மலர் மழையது சொரிய
வரம்பாற் றிகழ்நயி ளுைளப் பெரிய
வளங்களை யாவருஞ் சொல்லுதற் கரிய — அணலயம்
அம்பரத் தவர்வந்து தினந்தினங் கூடும்
ஐயன்சன் னதிவட பக்கத்தி வீடும்
தம்பிரான் சிதம்பரப் பெரியவர் காடும்
தனக்குமேற் புறத்தினிற் றீர்த்தமே ளுடும் — அணலயம்

ஆ. ஐயம்பிள்ளைப்புலவர்.

# ஐயனார் அகவல்

அரிஹர குமாரனே அணைலநக ரையனே
பிரியமுட னடியரைப் பேணியே காத்திடும்
ஆழிவரு ணத்தனே ஊழிதோறும் நித்தனே
அண்டர்பர வையனே செண்டமர் கரத்தனே
அருவுருவி னோடரிய திருவுருவு மானவா
சரமசர மானவா தாவுபரி வாகனா
ஆறங்க மானவா போதங்க ளானவா
அம்பர திகம்பர அகம்பரம தானவா
அரிவை பூரணைபுட் கலைக்குமண வாளனே
பாதாம் புயத்தனே பீதாம் பரத்தனே
படிபுகழும் நிந்தனே கடிகமழும் மார்பனே
பூதசே னாதிபா பொழிகருணை வாரியாய்
ஐயனே மெய்யனே யுய்யும்வா றறிகிலேன்
வாக்கினாற் கையினால் மனதால் வணங்கினேன்
காக்குமா றுன்பதங் கடைக்கணா லருளிய
மன்னரால் சென்மரார் மாறு தேவதைகளால்
பன்மராற் பலநவக் கிரக தீவினையினால்
அந்தகன் கொடுமையா லழலினா லிடியினால்
வந்த கன்மங்களால் வாரியா லரவினால்
உந்திடும் வினையெலா மோட்டியே யருள்புரி
சுந்தரத் தணைலநகர் சந்ததமும் வாழ்கவே
மாதம்மும் மாரியாம் மழைவளம் பொழியவே
சீர்பெறப் பசுநிரைகள் பால்பழம் பெருகவே
உழவர்குடி வாழ்கவே தறுகண்மிடி மாழ்கவே
உன்கோயில் சூழ்கவே யென்பாவம் மாழ்கவே
செந்தா மரைச்சரன் தந்தாள வேணுநீ
வீரமா காளரோடு பாரிடர்கள் சூழவே
காவல்செய் தருள்தருங் கடவுளே நமோநம
வானோர்கள் பரவும் மாசாத்தா நமோநம
வலிய பூதாதியர்கள் தலைவா நமோநம
நானாகி நீயாகி நின்றாய் நமோநம
ஓம்நாத அரிஹர குமாரா நமோநம

# தனிப்பாடல்கள்

பொருந்தொ ணாத பிறப்பினுக் கஞ்சியே
    போக வஞ்சிப் புலம்பிடு வோர்க்கெலாம்
மருந்து வேறிலை யிப்புவி மீதிலே
    மாம ருந்து மருந்தொன்று கேட்பிரேல்
திருந்து நல்நயி ஞர்குள நற்பதி
    சிறந்த கூழா மரநிழல் தங்கியே
பொருந்தி வாழைய ஞரைய ஞரென்று
    புகலு வோர்க்குப் பொதுமருந் தாகுமே

தேரும் மாவுஞ் சிவிகையும் யானையுஞ்
    சேனை யும்பல செல்வமும் கல்வியும்
பேருஞ் சீரும் பெருமையுங் கீர்த்தியும்
    பெறுவ துன்னருள் பெற்றபின் பல்லவோ
கூரும் வேற்கைக் குமரன் துணைவனே
    குன்ற வில்லியுங் கொண்டல்வண் ணத்தனும்
யாரும் போற்ற அருளிய மைந்தனே
    அணல யம்பதி யாண்டரு ளையனே

வடமலைகள் கிடுகிடென மறுமலைகள் சாய
    மழையினுடன் பிரசண்ட மாருதம டிக்கக்
கடல்குமுறி யலைபொருதிக் கலகலென வரவே
    காராளர் கண்டுநின் றபயமுறை யிடவே
திடுதிடென யானைமீ தையனுர் தோன்றித்
    திக்கெட்டு மேபடைக ளேவியே நின்று
விடுவிடென வெடிவைக்க அஞ்சியே கடலும்
    விசைகெட்டு அலைகெட்டு ஒய்ந்திட்ட தன்றே

தொகுப்பு: **அனலையூர்**
**ஐ. ஆறுமுகம்**
**அவர்கள்**

# ஐயனர் வழிபாடு

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர்

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

## 1. கிராம தேவதைகள்

ஐயனர் - ஹரிஹரபுத்திரர், சாஸ்தா, வைரக்ஷகர், ஐயப்பன முதலிய பல பெயர்களால் வழிபடப்பெறும் தெய்வமாவார், நம் நாட்டில் சிவபெருமான் திருக்கோயிலை ஊர் நடுவே அமைத்து, ஊரின் நான்கு புறங்களிலும் ஊர்க்காவல் தெய்வங்களாக மாரியம்மன், பிடாரி, ஐயனர் முதலிய தெய்வங்களை எழுந்தருளச்செய்து மக்கள் வழிபட்டனர்.

கிராமங்களில் மழையில்லாத காலத்திலும், அம்மை, காலரா முதலிய பிணிகள் வரும் காலத்திலும், மாடுகளுக்குக் கோமாரி முதலிய நோய்கள் வரும் நேரத்திலும மக்கள் இத்தெய்வங்களை வழிபட்டு நன்மைகள் பெற்றுவருவது கண்கூடாகும். போகம் மோக்ஷம் எனப்பெறும் பெரும் பயன்களைப் பெறுதத்குரிய தெய்வமாகச் சிவபெருமானையும், அவ்வப்போது தமக்கு ஏற்படும் இடையூறுகளைப் போக்கிக்கொள்ள கிராம தேவதைகளையும் மக்கள் வழிபட்டுவருகின்றனர். ஐயனரின் பிறிதொரு அவதாரம் ஐயப்பன் ஆவார்.

ஐயப்பன் வழிபாடு கேரளத்தில் சிறப்பாகப் போற்றப்பெற்று வருகிறது. இன்று தென்னாட்டில் நகரங்களிலும், கிராமங்களிலும் பல லட்சம் மக்கள் ஐயப்பன் வழிபாட்டை மேற்கொண்டு குறிப்பிட்ட காலங்களில் கேரள நாட்டிலுள்ள சபரிமலைக்கு யாத்திரை சென்று வருகின்றனர்.

ஒரு மண்டலகாலம் காலை, மாலை இரு வேளைகளிலும் நீராடித் தியானம் செய்தல், க்ஷவரம் செய்து கொள்ளாமலிருத்தல், உணவு, உடை இவைகளில் சில நியதிகளை மேற்கொள்ளுதல் போன்ற சில நெறிமுறைகளை மேற்கொண்டு 'சாமியே சரணம் ஐயப்பா, சொல்லிக்கொண்டு மக்கள் ஐயப்பன் வழிபாட்டைச் செய்கின்றனர். விரத முடிவில் இருமுடி சுமந்து சபரிமலை யாத்திரை செய்து ஐயப்பனை வழிபட்டு நன்மைகள் பலவும் பெறுகின்றனர்.

இந்நோன்பை மேற்கொள்வோர் விரதம் முடிந்ததும், தாங்கள் மேற்கொண்ட தியானம், வழிபாடு முதலிய பழக்கங்களைக் கைவிடாமல தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் மேலும் பல பயன்கள் விளையும்.

ஐயனர் வரலாற்றையும், ஐயப்பன் வரலாற்றையும் பற்றிய சமயநூற் கருத்துக்களை இக்கட்டுரையில் தொகுத்துக் காண்போம்.

# 2. ஐயனார் தோற்றம்

முன்னொரு காலத்தில் திருமால் முதலிய தேவர்களும், அசுரர்களும் அமுதம் பெறவேண்டித் திருப்பாற்கடலைக் கடைந்தனர், சிவபெருமான் திருவருளால் திருப்பாற்கடலைக் கடைந்தனர். சிவபெருமான் திருவருளால் திருப்பாற்கடலில் அமுத கலசம் தோன்றிற்று. அதைக்கண்ட தேவர்களும், அசுரர்களும் தனித்தனியே 'இது எங்கள் முயற்சியால் வந்தது. ஆதலால் எங்களுக்கே உரியது' என்று கூறித் தங்களுக்குள் சண்டையிட முற்பட்டனர். அதனைக் கண்ட திருமால் பிணக்கை ஒழிக்கவும், தேவர்களே சாவாமருந்தாகிய அமுதத்தை உண்டு இறவாமல் வாழவும் விரும்பி, மூவுலகத்தாரும் மையல்கொள்ளும் மோகினி வடிவத்தை எடுத்தார். அம் மோகினியின் அழகைக் கண்ட அவுணர்கள் அமுதத்தைப் பெற விரும்பும் முயற்சியைக் கைவிட்டு, ஆவேசமேலிட்டுக்கொண்டு மோகினியைச் சுற்றிவர முற்பட்டனர்.

## திருமாலின் சூழ்ச்சி

மோகினி வடிவம் கொண்ட திருமால் தன்னைச் சுற்றிவரும் அசுரர்களை நோக்கி, 'உங்களுக்குள் சிறந்த வீரன் எவனோ அவனே என்னை அடைதற்கு உரியவன் என்றார். அசுரர்கள் அனைவரும் 'நானே வலியவன் நானே வீரன்' என்று கூறித் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டு இறந்தனர். இராகு கேதுக்களாகிய அசுரர் இருவர் மட்டும் தேவர்களோடு கூடிக் கள்ளத்தனமாக அமுதமுண்டு,திருமாலால் தலை துணிக்கப்பட்டுக் கரும்பாம்பும் செம்பாம்புமாகி அமுதமுண்ட மகிமையினால் ஒன்பது கிரகங்களில் இருவராக எண்ணப்படும் பெருமையைப் பெற்றனர்.

## சிவபிரானும் மோகினியும்

தேவர்களுக்கு அமுதளித்தபின் திருமால் மோகினி வடிவோடு திருப்பாற்கடலின் கரையில் அமர்ந்திருந்தார். சிவபெருமான் தமது நால்வகைச் சக்திகளில் திருமாலும் ஒருவர் என்பதை அறிவித்தருளும் பொருட்டு அழகிய திருவுருவோடு அங்கு வந்தார். மோகினியைக் கண்டு காதல் கொண்டார். மோகினியும் சிவபிரானிடம் காதல்கொண்டார். சிவபெருமான் மோகினியைத் தழுவ வந்தார். அப்போது திருமால் 'நான் ஆடவன்: அடியேனைத் தாங்கள் வந்து கூடுதல் முறையோ' என்று கூறினார். பெருமான் திருமாலை நோக்கி, 'நமது சக்தி நான்கு வகையான பெயர்களோடு இலங்குவாள். எனக்கு மனைவியாகும்போது பவானி என்றும், கோபம் கொண்டபோது காளி என்றும், போர் செய்யும்போது துர்க்கை என்றும், ஆணுரு வடையும்போது திருமால் என்றும் பெயர் பெறுவாள் ஆதலின் நீ எமக்குச் சக்தியே யாவாய்' என்று கூறினார். நாம் முன்பு தாருகாவனத்திற்குப் பிக்ஷாடனராய்ச் சென்றபோது நீயும் மோகினி வடிவந் தாங்கிவந்து நம்மைக் கூடிப் பிரமனைப் பெற்றாய் அல்லவா? இன்றும் அதுபோல் உன்னைக் கூட வந்துள்ளோம்' என்று கூறி மோகினியின் கரத்தைப் பற்றினார். மோகினியும் உடன்பட்டார். நாவலந்தீவில் தேங்கு மரத்தடியில் இருவரும் கூடியின்புற்றனர்.

## ஹரிஹரபுத்திரர்

சிவபெருமானும், திருமாலும் இவ்வாறு கூடிய காலத்தில் கருங்கடல் போன்ற மேனியும், செவ்வானம் போன்ற சடையும், செண்டாயுதம் ஏந்திய திருக்கரமும், போற்றுதற்குரிய வீரமும் கொண்டவராய், ஞானியர் போற்றும் பெருமையும் நன்மையே புரியும் கருணையும் உடைய ஐயனார் திருவவதாரம் செய்தார். சிவபெருமான் அவருக்கு ஹரிஹரபுத்திரர் எனத் திருப்பெயர் சூட்டினார். பல வரங்களையும் தந்தார். உருத்திரர்களுள் ஒருவராக்கினார். ஒரு புவனத்தைக் கொடுத்து, தேவர்களும் முனிவர்களும் வணங்கும் தலைமை அளித்து, அவரைப் புவனத் தலைவராக்கினார். உலகங்கள் அனைத்தையும்

காத்துக்கொண்டிருக்கும் பெருவரம் அளித்தார்.

மைக்க ருங்கடல மேனியும் வானுலாம்
செக்கர் வேணியும் செண்டுறு கையுமாய்
உக்கிரத் துடன் ஓர்மகன் சேர்தலும்
முக்கண் எந்தை முயக்கினை நீங்கினன்

அத்த குந்திரு மைந்தற்கு அரிகர
புத்தி ரன்எனும் நாமம் புனைந்துபின்
ஒத்த பான்மை உருத்திரர் தம்மொடும்
வைத்து மிக்க வரம்பல நல்கியே.

புலனம் ஈந்து புவனத் திறையென
அவனை நல்கி அமரரும் மாதவர்
எவரும் ஏத்திடும் ஏற்றமும் நல்கினன்
சிவனது இன்னருள் செப்புதற் பாலதோ.

-கந்தபுராணம் - மகாசாத்தாப் படலம்

ஐயனார் சிவகுமாரர்களில் விநாயகர், முருகன் ஆகியோரின் இளவலாகும் பெருமையைப் பெற்று, சிவபெருமான் ஆணைப்படி தம் கடமைகளைச் செய்துகொண்டு விளங்கி வருகின்றார் என்பது கந்தபுராணத்தில் காணப்படும் ஐயனார் திருவவதார வரலாறாகும்.

## பாத்ம புராணத்தில்

பஸ்மாசுரன் என்பவன் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து, யார் தலையில் கை வைக்கின்றேனோ அவர் உடனே பஸ்மமாக வேண்டுமென்ற வரத்தைப் பெற்றான். தான் பெற்ற வரம் சரியானதுதானா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பிய பஸ்மாசுரன் வரமளித்த சிவபெருமான் தலையிலேயே கைவைக்க ஓடினான். சிவபெருமான் அஞ்சியதுபோல மறைந்தார். ஐவேலிக்காய் எனப்படும் சிவலிங்கக்காயில் மறைந்திருந்தார் என்றும் சிலர் கூறுவர்.

வரம்பெற்ற பஸ்மாசுரன் உலகையே அழிக்க முற்பட்டான். திருமால் பஸ்மாசுரனின் செய்கையை அறிந்தார். மோகினி வடிவோடு சென்று அவனை அணுகினார். பஸ்மாசுரன் மோகினியிடம் மயங்கினான். தான் பெற்ற பெருவரத்தை மோகினியிடம் தெரிவித்தான். திருமால் பஸ்மாசுரனை நோக்கி வரம்பெற்றால் மட்டும் போதுமா? வரத்தைப் பயன்படுத்துவதற்கு உரிய மந்திரத்தைச் சொல்லுமுன் கரநியாசம், அங்கநியாசம் செய்ய வேண்டாமா? என்றார். பஸ்மாசுரனும் அவ்வாறே அங்கநியாசம் செய்யமுற்பட்டு, 'சிரசே சுவாகா' என்று கூறித் தன் கையைத் தானே தன் தலையில் வைத்துக்கொண்டு பஸ்மமானான். மோகினி தன்னை அடைய வேண்டுமானால் எண்ணெய் தேய்த்துக் குளித்துவா என்று கூறியதாகவும், பஸ்மாசுரன் தலையில் எண்ணெய் தேய்ப்பதற்காகக் கையை வைக்கும்போது அழிந்ததாகவும் கூறுவதுண்டு. பஸ்மாசுரன் அழிந்தபின் சிவபெருமான் வெளிப்பட்டார். திருமால் மோகினி அவதாரமெடுத்து அவனை அழித்ததை அறிந்தார். இருவரும் தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அழிக்க மோகினியாகவும், பிக்ஷாடனராகவும் சென்றனர். அப்போது ஐயனார் அவதரித்தார் என்று பாத்மபுராணம் கூறுகிறது.

## 3. இந்திராணியைக் காத்தருளியது

கந்தபுராணத்தில் சூரபத்மனுக்கு அஞ்சிய இந்திரன் தன் மனைவியோடு சீர்காழிக்கு வந்து மூங்கிலாய் மறைந்து தங்கித் தவஞ்செய்ய முற்பட்டான். சூரபன்மனிடமிருந்து தன் மனைவி இந்திராணியைக் காத்தருளுமாறு ஐயனாரை வேண்டினான், ஐயனார் பூதகணங்கள் புடைசூழ வெள்ளை யானையின் மேல் பூரணை, புட்கலை என்னும் இருபெரும் தேவியரோடு இந்திரனுக்குக் காட்சிதந்தார், இந்திரன், சூரபன்பன் கொடுமையால் தேவர்கள் துயருறுவதையும், அதனைச் சிவபெருமானிடம் தெரிவிக்கத் திருக்கயிலை செல்வதையும் கூறித் தான் கயிலை சென்று திரும்பிவரும் வரை இந்திராணியை அடைக்கலமாக ஏற்றுக் காப்பாற்றவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். ஐயனாரும் அதற்கிசைந்து தனது வீரருள் மாகாகாளர் என்பவரை இந்

திராணிக்குக் காவலாக இருக்குமாறு கூறி மறைந்தார்.

சூரபத்மனின் தங்கை அஜமுகி என்பாள் அங்கு வந்து இந்திராணி தவம்புரிவதைக் கண்டு, அவளைத் தூக்கிக்கொண்டு போய்த் தன் தமையன் சூரபத்மனுக்கு அளிக்க விரும்பினாள். முடிவில் இந்திராணியை அழைத்தாள். அவள் மறுக்கவே அவளை அஜமுகி தன் கைகளால் பிடித்து இழுத்தாள். அஞ்சி நடுங்கிய இந்திராணி,

மையரா அபளி யானும் பரம்பொருள்
முதலும் நல்கும்
ஐயனே! ஓலம்; விண்ணோர்க்கு ஆதியே!
ஓலம்; செண்டார்
கையனே! ஓலம்; எங்கள் கடவுளே! ஓலம்;
மெய்யர்
மெய்யனே! ஓலம்; தொல்சீர் வீரனே;
ஓலம்; ஓலம்;

ஆரணச் சுருதியோர்சார் அடலுருத்
திரன்எனறு ஏத்தும்
காரணக் கடவுள்! ஓலம்; கடல்நிறத்து
எந்தாய்! ஓலம்;
பூரணைக்கு இறைவா! ஓலம்: புட்கலை
கணவா ஓலம்;
வாரணத்து இறைமேல் கொண்டு
வரும்பிரான! ஓலம்.

என்று ஐயனாரை விளித்துத் தன் அபயக் குரலை வெளிப்படுத்திப் பலவாறு கதறினாள்.

அபயக்குரல் கேட்ட ஐயனாரின் படைத் தலைவர் மகாகாளர் தன் வாட்படையைச் சுழற்றிக்கொண்டு இடிபோல ஆரவாரித்து வெளிப்பட்டார். அஜமுகியைத் தடுத்தார், அவர் வார்த்தையைக் கேட்க மறுத்த அஜமுகி, முத்தலைச் சூலத்தையும், மலையையும் அவர்மீது எறிந்தாள். மகாகாளர் அவற்றைப் பொடிபடுத்தித் தன் ஆணையைக் கேளாது இந்திராணியைத் தீண்டிய அஜ்முகியின் கையை வெட்டினார். காலால் அவளை இடறி ஓட்டினார். இந்திராணியைக் காத்த ஐயனார்கோயில் சீர்காழியில் தென்பாதித் தெருவில் உள்ளது. இவ்விடத்திற்குக் கைவிடான் சேரி என்று இப்போது பெயர் வழங்கிவருகிறது.

சூரபத்மனுக்குப் பயந்த இந்திரன் கோமுத்தீசுரம் எனனும் திருவாவடுதுறைத் தலத்தில் தங்கித் தவம் புரிந்தான். அஜமுகி இந்திரனைக் கண்டு காதல்கொண்டு அவனைப் பலவந்தமாக அணைய முற்பட்டாள். அதன் காரணமாகக் கருவுற்ற அஜமுகி கிருத்தியா என்ற பெண் குழந்தையைப் பெற்றாள். கிருத்தியை கண்ணில் கண்ட பொருட்களையெல்லாம் வாரி விழுங்கி நாசமாக்க முற்பட்டாள். ஐயனார் சிவபெருமான் ஆணைப்படி அவளைக் கடலில் எறிந்து உலகைக் காத்தருளினார்.

## 4. திருவுலா வெளியிட்ட திருப்பிடவூர் ஐயனார்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனாரோடு திருவஞ்சைக்களத்தில் தங்கியிருந்தபோது ஒருநாள் அஞ்சைக்களத்து இறைவனை வேண்டி. இவ்வுலக வாழ்வு போதும் என்னை ஏற்றருள் என்ற குறிப்புடைய திருப்பதிகம் பாடி வழிபட்டார். பெருமான், இந்திரன், மால், பிரமன் முதலிய தேவர்களை அனுப்பிச் சுந்தரரை வெள்ளையானை மீது ஏற்றித் திருக்கயிலைக்கு அழைத்துவருமாறு கட்டளையிட்டார். சிவபிரான் அருளியவாறு தேவர்கள் திருவஞ்சைக்களம் வந்து சுந்தரரை வெள்ளையானை மீது ஏற்றித் திருக்கயிலாயத்திற்கு அழைத்துச் சென்றனர். சுந்தரர் சேரமான் பெருமானை மனதில நினைத்துக்கொண்டே கயிலை சென்றார். சுந்தரர் கயிலை செல்வதை அறிந்த சேரமான்பெருமானும் ஒரு குதிரையைக் கொண்டுவரச்செய்து, அதன் காதில் திருவைந்தெழுத்தை ஓதி அக்குதிரை மீது ஏறிச் சுந்தரரை வலம்வந்து வான் வழியே கயிலை சென்றார். சுந்தரர் திருக்கயிலாயம் சென்று இறைவனை வணங்கினார். சேரமான் தன்னோடு உடன் வந்திருப்பதை விண்ணப்பித்தார், இறைவன் நந்திதேவரிடம் சேரர்கோவை உள்ளே அழைத்துவரக் கட்டளையிட்டார். உள்ளே

வந்த சேரர் காவலரைச் சிவபிரான் இங்கு நாம் அழையாமல வந்தது ஏன் என வின விஞர். சேரமான்பெருமாள் சுந்தரரைப் போற்றி வந்தேன் என்று கூறித் தாம் பாடி யருளிய திருக்கயிலாய ஞான உலாவைப் பாடி வணங்கினர். சிவபிரான் அதனைக் கேட்டு மகிழ்ந்து, அவரைச் சிவகணத் தலைவராக இருக்குமாறு அருள்பாலித்தார், திருக்கயிலை யில் சேரமான் பாடியருளிய திருக்கயிலாய ஞான உலாவை அங்கிருந்து கேட்ட ஐய ஞர் தென்னாட்டில் திருப்பிடவூருக்குக் கொண்டுவந்து தமிழக மக்கள் அறிந்துய்யு மாறு வெளிப்படுத்தினர். இது பெரிய புராணத்தில் காணப்படும் ஐயனரின் அருள் மிகு செயலாகும்.

திருப்பிடவூர் திருச்சிராப்பள்ளியிலி ருந்து பெரம்பலூர் செல்லும் வழியிலுள் ளது. இங்குள்ள ஐயனர் கையில் திருக்கயி லாய ஞான உலா உள்ளது. இவ்வையனரை மக்கள் அரங்கேற்றிய ஐயனர் என அழைக் கின்றனர்.

## 5. ஆகமங்களில்;

சாஸ்தா என்ற சொல்லுக்கு உலகங் களை ஆள்பவர் என்றும், ஆணை செய்பவர் என்றும், மக்கள் மனங்களில ஊடுருவிய வர் என்றும் பொருள்கள் கூறப்படுகின்றன.

ஐயனர் பதினறு பேதங்களை உடைய வர் என்று தியான ரத்னவளி என்ற ஆகம பத்ததி கூறுகிறது. ஐயனரின் பதினறு பேதங்கள்:- 1, மதகஜசாஸ்தா, 2, மோகினி, சாஸ்தா, 3. அமிருதசாஸ்தா, 4, கிராம சாஸ்தா, 5, உக்ரசாஸ்தா, 6, விர சாஸ்தா, 7. லட்சுமிசாஸ்தா, 8, பால சாஸ்தா, 9. மதனசாஸ்தா, 10 பீஷண சாஸ்தா, 11. ருத்ரசாஸ்தா, 12 வரத சாஸ்தா, 13. அசுவசாஸ்தா, 14. சௌந் தரசாஸ்தா, 15. புவனசாஸ்தா, 16. மகா சாஸ்தா, ஆகியனவாம்.

மலைகளில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தா வைப் பதினறு கைகளை உடையவராகவும், காட்டில் பிரதிஷ்டிக்கப்படும சாஸ்தாவைப் பத்துக் கைகள் உடையவராகவும், நகரங் களில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தாவை எட் டுக் கைகள் உடையவராகவும், கிராமங் களில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தாவை இரண்டு கைகள் உடையவராகவும், பிர திஷ்டை செய்விக்கவேண்டுமென்றும் சிவா கமம் கூறுகிறது.

சாஸ்தாவின் மனைவியர் - சௌந்திகன் என்ற அரசனுடைய புதல்வி பூரணதேவி யும், அம்பாராஜனுடைய புதல்வி புஷ் களாதேவியுமாகிய இருவராவர்.

சாஸ்தாவின் பரிபாரங்கள்-மகாகாளன், கோப்தா, பிங்களாஷன், வீரசேனன், சாம் பவன், திரிகேந்திரன், சூலி, தகஷன், பீம ரூபன் முதலியோராவர்.

சாஸ்தாவின் வாகனம்: குதிரை, யானை ஆகியன. ஐயனர் கோயிலின் வாயி லில் இவ்விரு வாகனங்களும் விளங்குவ தைக் காணலாம்.

கொடி; யானைக்கொடி, கோழிக்கொடி.

## சுப்பிரபேதம் என்ற ஆகமத்தில்;

ஐயனர் இரண்டு கண்களும், இரண்டு கைகளும் கொண்டவர். கரிய மேனியில் வெண்ணிறப் பூணூல் அணிந்தவர். ஆபர ணங்கள் அணிந்தவர். நாய், கோழி, ஆடு இவைகளோடு விளையாடுபவர். எல்லாச் சித்திகளையும் அளிக்க வல்லவர். மதன, வர்ணினி என்ற இரு மனைவியருடன் திகழ் பவர். பெருவயிறும், பேருடலும், நீளமான அளகங்களால் விளங்கும் தலையும் உடைய வர். இடதுகையில் தடியும், வலதுகையில வளைதடியும் உடையவர். பழம், தளிர் இவைகளைக் கையில் கொண்டவர். மடக் கிய கால் மீது கையை வைத்திருப்பவர் என்று ஐயனரது தோற்றம் கூறப்பட்டுள் ளது.

## அம்சுமத்பேதம் என்ற ஆகமத்தில்;

ஐயனர் வெண்ணிற மேனி உடையவர் என்றும், முக்கண்ணர் என்றும், சாந்த மானவர் என்றும், வெண்பட்டாடை உடுத்

துப் பத்மபீடத்தில் அமர்ந்திருப்பவர் என்றும, அபயம், வரதம், கத்தி, கேடயம் இவை களைத் தாங்கும் நான்கு கைகளை உடையவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

## பூர்வகாரணகமத்தில்:

சாஸ்தா, சாந்தமூர்த்தி என்றும், இரண்டு கைகள் உள்ளவர் என்றும், கருநிற மேனியர் என்றும், தூக்கி மடக்கிய இடது கால்மீது இடதுகையையும், தொங்க விடப பட்ட வலதுகாலையும் உடையவர் என்றும் வளைதடி, வச்சிராயுதம் உடையவர் என்றும், நீலநிற கேசம உடையவர் என்றும், யானையை வாகனமாகவும், கொடியாகவும் கொண்டவர் என்றும், நீலம் வெள்ளை ஆகிய நிறங்களை உடைய குதிரை, எருது ஆகிய வற்றை வாகனங்களாகக் கொண்டவர் என்றும், நான்கு கைகளை உடையவர் என்றும். வீராசனத்திலும், யோகாசனத்திலும் வீற்றிருக்கும் ஞானி என்றும் கூறப்பட்டுள்ளது.

## சில்பரத்தினம் என்ற நூலில்:

ஐயனார் அழகிய அளகம் உடையவர். குண்டலம் அணிந்த காதினர். ஒரு கையில் வில்லும், மற்றொரு கையில் அம்பும் வைத்திருப்பவர். நீலப் பட்டாடை தரித்தவர். மேகம் போன்ற மேனியர். பிரமை என்ற மனைவியையும், சத்யகன் என்ற பிள்ளையையும் அருகில் கொண்டு சிம்மாசனத்தில எழுந்தருளியிருப்பவர். சிவப்புநிற அணிகலன்கள் பூண்டவர் என்று கூறப்பட்டுள்ளது.

## மகாலக்ஷ்மி கல்பத்தில்:

மகாசாஸ்தா, சத்ருசாஸ்தா, ஐவ சாஸ்தா, சர்வசாஸ்தா, சாஸ்தா, பிரசாஸ்தா என்று ஐயனார் பேதங்கள் ஆறு விதமாகக் கூறப்பட்டுள்ளன.

## ஐயனார் நிறங்கள்:

வசியம், ஆகர்ஷணம் இவைகளில் செந்நிறம் கொண்டவராகவும், மோகனத்தில் கருநிறம் கொண்டவராகவும், ஸ்தம்பனத்தில் பொன்னிறம் உள்ளவராகவும், விஷம் போக்கும் வழிபாட்டிலும், ஞானம் பெறுவதற்கான வழிபாட்டிலும் வெண்ணிறம் உள்ளவராகவும், துவேஷம், உச்சாடனம், மாரணம் இவற்றில் கருநிறம் உள்ளவராகவும்ஐயனார் வழிபடப் பெறுகிறார்.

## 6. ஐயனார் பற்றிய சில கதைகள்:

கி. பி. 16ஆம் நூற்றாண்டில் நரசிம்ம பூபாலன் என்ற சோழ மன்னன் ஒருவன் அரசு வகித்தான், அவனது அவைக்களப் புலவராக அப்பய்யதீக்ஷிதரும், வேறொரு புலவரும் விளங்கினர். இருபெரும் புலவர்களோடு மன்னன் ஐயனார் கோவிலுக்குச் சென்றான். அக்கோயிலில் ஐயனார் மூக்கில் விரலை வைத்த நிலையில காணப்பட்டார். அதற்கான காரணத்தை மன்னன் அருகில் உள்ளவர்களிடம் கேட்டான். அவர்கள், ''இங்கு ஒரு ஞானி'' வருவார். அவர் அரசனுடைய வேண்டுகோளின்படி காரணம் கூறுவர்: உண்மைக் காரணத்தைக் கேட்டவுடன் சாஸ்தாதன் மூக்கிலிருந்து கைவிரலை எடுத்துவிடுவார்'' என்று எங்கள் மூதாதையர் கூறியுள்ளனர் எனத் தெரிவித்தனர். அரசன் உடனே அருகில் இருந்த ஒரு புலவரைப் பார்த்துக் காரணம் கூறுமாறு கேட்டான், அதற்குப் புலவர் பின்வரும் பொருளமைந்த பாடலொன்றைப் பாடினர். திருமாலின் புதல்வனாகவும், சிவகுமாரனாகவும் நான் இருக்கிறேன். பிரம்மனுக்கு நான் சமமானவன். பூதகணங்கள் என்னைச் சூழ்ந்துள்ளன'' என்று ஐயனார் சிந்திப்பதாகக் கவி பாடினார் அப் புலவர். சாஸ்தா மூக்கிலிருந்து கைவிரலை எடுக்கவில்லை.

அரசன் அப்பய்ய தீக்ஷிதரைப் பார்த்துக் கவி பாடும்படி கேட்டுக்கொண்டான். அப்பய்யதீக்ஷிதர் பின்வரும் பொருளமைந்த பாடலைப் பாடினார். ''நான் பார்வதியையும், திருமாலையும் அம்மா என்று அழைப்பேன்; சிவனைத் தந்தை என்று அழைப்பேன். திருமகளை என்ன முறை கூறி அழைப்பது என்று தோன்றவில்லையே என ஐயனார் சிந்தனை செய்கிறார்'' என்ற பொருளமைந்த செய்யுளைப் பாடினார். அக் கவிதையைக் கேட்டவுடன் ஐயனார் மூக்கிலிருந்து கைவிரலை எடுத்துவிட்டார். அரசனும், ஏனையோரும் அப்பய்ய தீக்ஷிதரின் கவித் திறனைப் பாராட்டினர் என்று தீக்ஷிதேந்திர நூலில் கூறப்பட்டுள்ளது.



Ma is good but some
more [illegible]
6/6/83

## 7. புஷகலை - பூரணை திருமணம்;

ஐயனாரின் இடதுபுறமிருக்கும் அம்பிகை புஷ்கலை. இவ்வம்பிகை கரிய திருமேனி உடையவள். வலது கையில் மலரையும், இடது கையில் வரமுத்திரையையும் தரித்தவள். இடது காலை தொங்கவிட்டும், வலது காலை மடக்கியும் இருப்பவள்.

### புஷ்கலையை ஐயனார் மணந்த வரலாறு:

நேபாள நாட்டில் பலஞன் என்றொரு மன்னன இருந்தான். அவன் மந்திர தந்திரங்களில் வல்லவன். காளிதேவியிடம் பக்திகொண்டவன். காளிதேவக்கு ஒரு கன்னியை அர்ப்பணித்தால் மூப்பின்றி வாழலாம் என்று சிலர் கூறக்கேட்டு ஒரு பெண்ணைக் காளிகோயிலுக்குக் கொண்டுசென்றான். அம்மன்னன் கொண்டுவந்த பெண் சிவபக்தி பூண்டவள். தனக்கு வரும் இடையூற்றிலிருந்து காத்தருளுமாறு சிவபெருமானை வேண்டினாள். சிவபெருமான் ஐயனாரை அனுப்பி அப்பெண்ணைக் காக்குமாறுசெய்தார். பலஞன் ஐயனாரின் பேரழகில் ஈடுபட்டு அவரைத் தன் மருமகனாக அடைய விரும்பினான். தன் மகள் புஷ்கலையை மணம் புரிந்துகொள்ளுமாறு வேண்டினான். ஐயனாரும் அதற்கிசைந்து புஷ்கலையை மணந்து புஷ்கலாபதி என்ற பெயரைப் பெற்றார்.

பூரணை ஐயனாரின் வலது புறமிருக்கும் அம்பிகை. இவள் பொன்னிறம் கொண்டவள். இடது கையில் குவளை மலரை ஏந்தியவள். வலது கையைத் தொங்கவிட்டிருப்பாள். இடது காலை மடக்கியும், வலது காலைத் தொங்க விட்டுமிருப்பவள்.

### பூரணையை ஐயனார் மணந்த வரலாறு;

வஞ்சி மாநகரில் பிஞ்ஞகன் என்றொரு மன்னன் இருந்தான். அவன் ஒருநாள் காட்டிற்குள் வேட்டையாடச் சென்றான். இரவு நேரம், மன்னனுக்குத் திசை தெரியவில்லை. இரவில் பூதகணங்கள் கானகம் வந்தன. அரசனைக் கண்டு அவனைக் கொல்வதற்கு நெருங்கி வந்தன. பிஞ்ஞகன் ஐயனாரை வேண்டினான். ஐயனார் மன்னன் முன் தோன்றினார். பூதங்கள் அஞ்சி ஓடின. ஐயனாரின் அழகில் ஈடுபட்ட பிஞ்ஞகன் தன் புதல்வியை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டினான். ஐயனாரும் அதற்கு இசைந்து பூரணையை மணந்து பூரணாதிபதியானார்.

பூரணை, புஷ்கலை இருவரும் சத்தியபூரணர் என்ற முனிவரின் புதல்விகள் என்றும், சௌந்திகன் அம்பாலிகன் ஆகியோரின் புதல்விகள் என்றும் அவர்கள் தவம் செய்து ஐயனாரால மணம் புரிந்துகொள்ளப் பெற்றனர் என்றும் கூறப்படுவதுண்டு.

## 8. ஐயப்பன் வரலாறு;

வஞ்சி நாட்டில் ஐயனார் பூரணையுடன் மணந்து வாழ்ந்து வருவதை அறிந்த நேபாள மன்னன் பலஞன் தன்மகளை விடுத்து ஐயனார் பூரணையுடன் வாழ்வதைக் கண்டு வேதனையடைந்து ஐயனாரை நோக்கி மனிதனாகப் பிறந்து பன்னிரண்டு ஆண்டுகள் பிரமச்சாரியாக வாழ்வாயாக என்று சபித்தான். ஐயனாரும் நாம நிலவுலகில் தோன்றுவதற்கு இது ஒரு காரணமாயிற்று என்று கூறியும், அந்நேபாள மன்னனை நோக்கி, "கேரளத்தில் பந்தள தேசத்தில நீயே மன்னனாகப் பிறப்பாய், அங்கே நான் குழந்தையாக உம்மிடம் வந்து பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்வோம்" என்று கூறியும் மறைந்தார்.

கேரள நாட்டில் பந்தளம் என்ற பகுதிக்கு அரசனாகப் பாண்டிய மன்னன் பரம்பரையில் இராசசேகரன் என்ற பெயருடன் பிறந்து அரசு புரிந்தான் பலிஞன். திருமணமாகிப் பல்லாண்டுகளாகியும் புத்திரப் பேறு வாய்க்காமையால் மனவேதனை அடைந்த அம்மன்னன் சிவபெருமானை வேண்டிப் பணிந்தான். சிவபெருமான் திருவருளால் ஐயனார் அம்மன்னனின் குழந்தையாக வரத் திருவுளம் கொண்டார்.

ஒரு நாள் காட்டில் வேட்டையாடச் சென்ற மன்னன் குழந்தையொன்று அழுது கொண்டிருப்பதைக் கண்டு அதனருகில் சென்றான். ஒளியும், தண்மையும் உடைய

அக்குழந்தையின் முகத்தைக் கண்டு வியந்தான். சிவபெருமான் அந்தணர் உருவில் வந்து அரசனை நோக்கி, "மன்னா! இக்குழந்தை தெய்வாம்சம் பொருந்தியது. இதனைத் தெய்வம் உனக்கு அளித்திருக்கிறது. எடுத்துச் சென்று வளர்ததுவா. இக்குழந்தையன் பெருமைகளை விரைவில் நீ உணர்வாய்!" என்று கூறி மறைந்தார்,

மன்னன் மகிழ்ச்சிக்கடலில் திளைத்தவனாய்க் குழந்தையை அரண்மனைக்கு எடுத்துச்சென்று அரசியிடம் கொடுத்து மணிகண்டன் எனப் பெயர் சூட்டி அன்போடு வளர்த்துவந்தான்.

## குருதக்ஷிணை

மன்னன் மணிகண்டனைக் குருகுலத்தில் சேர்த்துக் கல்வி பயிலுமாறு செய்தான். ஓதாமலே எல்லாவற்றையும் உணர்ந்த மணிகண்டனைப் பார்த்துக் குரு வியந்தார் மணிகண்டன் கடவுள் தன்மை பொருந்தியவர் என்று உணர்ந்த குரு, ஊமையும், குருடனுமாயிருக்கும் தன் மகனைக் குறையற்றவனாகச் செய்தருளுமாறு மணிகண்டனை வேண்டினார். மணிகண்டன் குருவின் மகனுக்கு இருந்த குருட்டுத்தன்மையையும், ஊமைத் தன்மையையும் ஒழித்து, அவனை நிறைந்த ஞானமும், உடல்நலமும் உடையவனாகவும் செய்தருளினார்.

## அறிவிழந்த அரசி.

மணிகண்டனை மகனாக அடைந்தபின் மன்னன் மனைவி ஒரு ஆண்மகவைப் பெற்றிருந்தாள். அரசனும் அக்குழந்தைக்கு இராஜராஜன் எனப் பெயரிட்டான். மணிகண்டர் தம் இளவல் இராஜனோடு கூடி விளையாடி மகிழ்ந்திருந்தார்.

மன்னனின் அமைச்சன் மணிகண்டனின் பேராற்றலை உணர்ந்து, "இவர் அரசரானால் நமக்குப் பெருமை இருக்காது", என்று நினைத்து எப்படியாவது மணிகண்டரை நாட்டைவிட்டு விரட்டிவிட்டு இராஜராஜனை அரசனாக்க வேண்டுமென்று திட்டமிட்டான். மணிகண்டனிடம் அளவற்ற அன்பைப் பொழியும் மன்னனிடமிருந்து மணிகண்டனை எவ்வாறு பிரிப்பது என்று ஆராய்ந்து முடிவில் அரசியிடம் சென்றான். அவனிடம், "மன்னன் மணிகண்டனையே அரசனாக்குவான் போலத் தெரிகிறது. அரச பரம்பரையில் வந்த தங்கள் புதல்வன் இந்நாட்டு மன்னனாக ஆவதற்கு ஆவன செய்யுங்கள் என்று கூறினான். அரசி, "அதற்கு வழி யாது?" எனக் கேட்டாள். அமைச்சர் அரசிக்கு ஒரு உபாயம் சொல்லிக்கொடுத்தான். 'தாங்கள் தாங்க முடியாத தலைவலியால் தவிப்பவர் போல நடிக்க வேண்டும்.' என்னுடைய தூண்டுதலால், புலிப்பால் கொண்டுவந்து தடவினால் தான் தலைவலி தீரும் என்று மருத்துவர் கூறுவார். அதனைக்கேட்ட மணிகண்டன் தானே புலிப்பால் கொண்டுவந்து தருவதாகக்கூறிப் புறப்பட்டுப்போவார். புலியிடம் அகப்பட்டு இறப்பார்'. என்று தீயவழி கூறினான் அமைச்சன். மந்தரையின் வார்த்தையினால் மனம் மாறிய கைகேயி போல மந்திரியின் சூழ்ச்சிக்குப் பலியானாள் அரசி. அமைச்சன் கூறியவாறே தலைவலி வந்தது போல நடித்தாள். மருத்துவர், இந்நோய் புலிப்பால் இன்றித் தீராது என்றனர். மணிகண்டர், நான் புலிப்பால் கொண்டுவருகிறேன் என்று கூறிப்புறப்பட்டார். கானகம் நோக்கிச் சென்றார்.

## மகிஷி வதம்

தனு என்ற அரசனுக்கு ரம்பன், கரம்பன் என்று இரு புதல்வர்கள் இருந்தனர். ரம்மனுடைய மகன் மகிடாசுரன துர்க்கையால் கொல்லப்பட்டான். கரம்பனுக்கு மகிஷி என்ற பெயருடைய அரக்கப் பெண்ணொருத்தி இருந்தாள். மகிஷி பிரம்மனைக் குறித்துத் தவம் செய்து வரம் பல பெறறு தேவருலகம் சென்று அரசு பெற்று, தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் இடையூறுகள் பல விளைவித்து வந்தாள்.

ஐயனார் மணிகண்டராகக் கானகம் வருவதை ஞானக்கண்களால் அறிந்த இந்திரன் முதலான தேவர்களும், முனிவர்களும் கான



5 + 5, is good

கம் வந்தனர். அவரை அழைத்துக்கொண்டு மேற்குமலைத்தொடரில் பொன்னம்பல மேடு என்னும் இடத்திற்குச் சென்றனர். காந்த மலை எனப்படும் அம்மலையில் பொன்னம்பலத்தின் சிம்மாசனத்தில் மணிகண்டரை எழுந்தருளச் செய்து, தங்களுக்கு மகிஷி என்ற அரக்கியால் ஏற்பட்ட துன்பங்களைக் கூறி, மகிஷியை அழித்துத் தங்களைக் காத்தருளுமாறு மணிகண்டரை வேண்டினர். மணிகண்டர் உடனே தெய்வலோகம் சென்றார். மகிஷியுடன் போரிட்டு வென்று அவளைக் கொன்று தேவர்களைக் காத்தருளினார்.

## புலி வாகனர்

மகிஷியைக் கொன்றபின் மணிகண்டர் காந்தமலை வந்து அமர்ந்து தன் தாய் புலிப்பால் கேட்டதை இந்திரனிடம் கூறினார். இந்திரன் புலியானான். மணிகண்டர் அதன் மீது ஏறி அமர்ந்தார். ஏனைய தேவர்கள் பெண் புலிகளாய் உடன் வந்தனர்.

புலிமீது ஏறிப் புலிக்குழாத்துடன் வரும் மணிகண்டரைக் கண்டு நகரமக்கள் அஞ்சி ஓடினர். அமைச்சன் மயக்கமுற்றான். அன்னையும் அடாது செய்ததை எண்ணி வருந்தினாள். தந்தை, மணிகண்டனை வாரித் தழுவினார். மணிகண்டன் அமைச்சரைத் தெளியவைத்துத் தாயைத் தேற்றி, "அன்னையே எனக்கு அரசாளும் விருப்பம் இல்லை. இராஜராஜனுக்குப் பட்டம் சூட்டி நாட்டை அரசாளச் செய்யுங்கள். உலகநலம் கருதி பன்னிரண்டு ஆண்டுகள் உங்கள் பிள்ளையாய் வளர்ந்தேன். நான் வந்த காரியம் முடிந்தது போய் வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டார். மன்னனை நோக்கி, 'சபரி மலையில்' சரங்குத்திய இடத்தில் தனக்கு ஓர் ஆலயம் அமைக்குமாறு கூறி விடை பெற்றுக் காந்தமலை சென்றார்.

## சபரிமலையில் சாஸ்தா கோயில்;

மணிகண்டரின் பிரிவாற்றாது மன்னன் இராஜசேகரன் மனம் வருந்தினான். கும்ப முனி அம்மன்னனின் வருத்தத்தை மாற்றி ஆறுதல் கூறினார். சில நாட்கள் சென்றபின் மன்னன் தன் படையோடு சபரிமலை சென்றான். அங்கு சரங்குத்திய மரத்தைக் கண்டு, அவ்விடத்தில் கோயிலைக் கட்டத் திர்மானித்தான். இரவுப்பொழுது வந்தது, உறங்கிய மன்னனை ஒரு பூதம் தூக்கிச்சென்று காந்தமலையில் இருந்த ஐயப்பரிடம் விட்டது. மன்னன் காந்தமலையிலுள்ள, பொற்கோயிலில் தேவர்கள் புடைசூழ வீற்றிருப்பதைக் கண்டான். மணிகண்டர் மன்னனை வரவேற்று உபசரித்தார். சபரிமலையில் தான் அமர்ந்துள்ள ஐயனார் கோலத்தில் ஒரு கோயில் கட்டுமாறு கூறினார். 'இடையூறுகள் வரின், பயன்படுத்துக, என்று ஒரு கத்தியையும் வழங்கி அனுப்பினார். மன்னன் சபரிமலையில் சிறந்த சிற்பிகளைக் கொண்டு, கோயில் கட்ட முற்பட்டான். இந்திரன், 'தானே அக்கோயிலைக் கட்ட வேண்டும்' என்று மன்னனைத் தடுத்தான். இருவருக்கும் போர் மூண்டது. மன்னன் மணிகண்டர் தந்த கத்தியால் இந்திரனோடு போரிட்டான். முடிவில் இந்திரன் மன்னனைச் சரண் அடைந்தான். மன்னனும், இந்திரனும் விசுவகர்மாவின் துணையோடு பதினெட்டு படிகளுடன் கூடிய சபரிமலைக் கோயிலைக் கட்டினர். சாஸ்தாவின் திருவுவைப் பரசுராமர், அகத்தியர், தேவர், முனிவர் முதலியோர் துணையுடன் வழிபட்டனர். மன்னன் பிரதிஷ்டை செய்தான்.

சின்முத்திரையோடு கூடிய வலக்கரமும் முழங்காலின் மீது நீட்டிய இடக்கரமும், கொண்டவராய்க் குந்தி அமர்ந்த கோலத்தில் சாஸ்தாவைப் பிரதிட்டை செய்தான் மன்னன். அன்று முதல் இன்றுவரை 'சபரிமலை' சாஸ்தா பலலாயிரக்கணக்கான பக்தர்களின் அன்புத்தெய்வமாய் விளங்கி அருள் புரிந்து வருகின்றார்.

நன்றி. சாரைநகர் மணிவாசகர் சபை!

உ

# அனலையம்பதி

# ஐயனார் கலித்துறை

(நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் தமது நண்பனும் சைவப் பிரசாரகரும் ஆகிய மு. மயில்வாகனம் அவர்களுடன் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த தீவுப் பகுதிகளிலுள்ள திருக்கோயில்களை வழிபட்டு வந்தகாலை அனலைதீவு ஐயனார் திருக்கோயிலுக்குப் போய் அவரைத் தரிசனஞ் செய்து பாடியது.)

ஓதக் கடல்சூழ் அனலைப் பதியி லுறையுமருட்
போதக் கடலைப் புரிகுழற் பூரணை புட்கலைக்கு
நாதக் கடவுளை நாங்கள் பணிய நமைப்பணிந்து
காதக் கடல்கடந் தோடிய தீவினைக் கட்டுக்களே. ....1

வாரணத் தானைக் கடனிற வண்ணனை மாயவனுங்
காரணத் தானு முலகுய்ய வீன்றருள் கற்பகத் தைப்
பூரணத் தானை யனலைப் பதியிற் புறத்தவனை
ஆரணத் தானை யடிதொழத் தீமை யகன்றிடுமே. ....2

தண்டா மரைமுக மும்மலர்க் கண்களுந் தன்கரத்தில்
செண்டா யுதமும் தரித்தெமை யாளுஞ் சிவக்கொழுந்தைக்
கண்டே னிரண்டு கரங்கூப்பி னேன்வினைக் கட்டறுத்துக்
கொண்டே னழியாப் பெருவாழ்வு தான்வந்து கூடியதே. ....3

அறங்காப் பவனன லைப்பதி யுய்வை யடையநின்று
புறங்காப் பவனெழிற் பூரணை கேள்வன் புனிதனருட்
டிறங்காப் பவனெனை யுங்காத் திடத்திரு வுள்ளங்கொண்டான்
மறங்காத் திடுமிருட் பொல்லா மயக்கங்கள் மாய்ந்தனவே....4

பாட்டா ரளிமுர லும்பொழில் சேரன லைப்பதியிற்
கோட்டானை யேறுங் குமரனை நெஞ்சங் குழைந்துருகத்
தாட்டா மரைபணிந் தேனெனைப் பற்றத் தனியெருமை
மாட்டா னினிவர மாட்டான் பயந்து வணங்குவனே. ....5

வணங்கா தவர்க ளகங்காரம் போக்கி வணங்குபவர்
குணங்கா தலித்தருள் கூரு மனலைக் குமரனடி
இணங்காத நோய்க்கு மருந்து மிடிக்கோ விருநிதியம்
அணங்கா கியபிற விக்கடல் நீந்து மருங்கலமே. ....6

வஞ்சம் பொறாமை யகங்காரங் கொண்ட மனத்தினரை
அஞ்சுங் கொடுந்தண் டனைபுரிந் தாளன லேசனிசை
கொஞ்சுங் கிளிமொழி புட்கலை கேள்வனைக் கும்பிடுவோர்
தஞ்சஞ் சலம்விட் டிருமையு நன்மைகள் சாருவரே. ....7

காரிக் கடவு ளனலைப் பதியமர் கற்பகத்தின்
வேரிக் கமல விரைப்பூங் கழல்கள் விரும்பியன்பாய்
நேரிற் கடும்பிணி நீங்கும் பொல்லாங்கு நில்லாதழியும்
ஊரிற் றெழுநோ யொழியுமென் றோதின ருத்தமரே. ....8

மாகாத் தனையன லைப்பதி மேவிய வள்ளறனைப்
பூசாத்தி யேத்தி நற்பூசையும் பொங்கலுஞ் செய்து புகழ்ப்
பாசாத்திப் பற்றறுக் கும்பழ மாமறை மந்திரங்கள்
பேசாத் தினம்போய்ப் பிறவாத் தினமெனப் பேசுவரே. ....9

உறவா கியவைம் புலன்க ளடங்கி யுணர்வொடுங்கிப்
பிறவா தனையடைந் தாவி பிரிந்திடும் வேளையிலே
நறவார் பொழிலன லைப்பதி மேவிய நாயகனே
மறவா துனைத்துதிக் கும்வரம் வந்து வழங்குதியே. ....10

வாழி யனலைப் பதிவளர் காரி மலரடிகள்
வாழி யவனருள் பூரணை புட்கலை வாழியன்பர்
வாழி கருவி மழைவாழி யந்தணர் வாழிசிவம்
வாழி செழுந்தமிழ்க் காரிகை பத்தும் வளமுறவே. ....11

உ

# பிரார்த்தனை உரை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

'ஆழி தாங்கிய அண்டமொத்திலங்கிய தகன்றேர்' என்பது, கந்தபுராணத்தில் வருவதொரு தேர் வருணனை.

ஆழி-சில். சிற்கள் தாங்குகின்றதொரு அண்டம் போல் விளங்கியது அத்தேர் என்றவாறு.

ஃ ஃ ஃ

அண்டம், பதினான்கு உலகங்கள் கொண்டது. கீழ் ஏழு உலகம்; மேல் ஏழு உலகம்.

கீழ் உலக அடுக்குக்களுக்குக் கீழே, அட்டமாநாகம்-ஆதிசேடன் - கூர்மம் தேரின் கீழ்ப்பாகம்.

மேல் உலக அடுக்குப் பூலோகந் தொடக்கமானவை. பூமி, பூலோகத்தின் சின்னஞ் சிறியதொரு பாகம். பூலோகம், கீழிருந்து எட்டாவது உலகம்.

மேல் ஏழு உலகத்துக்கு மேலேயும் மூன்றுலகம் உண்டு. அவை: சத்திய உலகம், வைகுந்தம், கைலாசம் என்பன. மூன்றையும் ஒருங்கு சேர்த்து, அண்டத்தின் மணிமுடி எனலாம்.

அண்டமாகிய தேரின் நடுத்தட்டு, பூலோகம். இறைவன் நடுத் தட்டில் எழுந்தருளி, உயிர்களுக்கு அநுக்கிரகம் புரிந்தருளுவான்.

இவ்வாறே ஒவ்வொரு அண்டமும் இறைவன் எழுந்தருளும் தேராம். அண்டங்கள் எண்ணில.

அண்டப் பகுதியின்
உண்டைப் பிறக்கம்
அளப்பருங் கோடி
வளப்பருங் காட்சி
ஒன்றனுக் கொன்று
நின்றெழில் பகரின்

நூற்றொரு கோடியின்
மேற்பட விரிந்தன''

என்பது திருவாசகத்தில் திருவண்டப்பகுதி.

ஃ ஃ ஃ

அனலைதீவில் ஐயனார் எழுந்தருளுதற்கு அமைந்த தேர், சாத்திரங்களுக்கும், சிற்ப விதிகளுக்கும், இலக்கியமாய், விளங்குவதாக என்று,

திருவருளைப் பிரார்த்தித்து வாழ்த்துவோமாக.

ஃ ஃ ஃ

இச்சந்தர்ப்பத்தில் ஐயனார் பற்றிச் சிந்திப்பது, அப்பெருமானாரின் ஆற்றலை ஓரளவு அறிவதற்குப் பொருத்தமாகும்.

ஃ ஃ ஃ

ஐயனார், ஹரி ஹர புத்திரர். ஹரி-அரி; விஷ்ணு. ஹரன்-அரன்; சிவன்.

'அரியலால் தேவியில்லை' என்பது தேவாரம்.

அரனுக்கு அரி, தேவி.

ஒரு காலத்தில் அரனருளால், அரியின் உந்தியில், பிரமா உதயமானார்.

மற்றொரு காலத்தில் அரன் அருளால், ஹரிஹர புத்திரராய் ஐயனார் அவதரித்தார்.

அரியின் பாதுகாப்பும், அரனின் சங்காரமும் ஒருங்கு அமைந்தவர், ஐயனார்.

ஃ ஃ ஃ

சூரபன்மனின் ஆட்சியில் தேவர்கள் மீன் சுமந்தார்கள். சயந்தன் சிறைப்பட்டான். இந்திரன் இந்திராணியுடன் காட்டிற் கரந்துறைந்தான்; கரந்துறைந்த காலத்தில், ஐயனாரை வணங்கி வேண்டுதல் செய்து, இந்திராணிக்குப் பாதுகாப்பும், தனக்குக் கைலைக்குச் செல்ல உத்தரவும் பெற்றான்.

ஐயனாருக்குப் பணிசெய்பவர் வீரமாகாளர். இந்திராணி வீரமாகாளர் பாதுகாப்பில் இருந்தாள்.

ஃ ஃ ஃ

ஒருநாள் வந்தாள் அசமுகி; கண்டாள் இந்திராணியை. தமையனாகிய சூரபன்மனுக்கு இந்திராணியை அன்புக் காணிக்கை செய்ய

எண்ணினுள். இந்திராணியைக் கையில் பற்றி இழுக்கத் தொடங்கினுள்.

கோடி தாடகைகளின் ஆற்றல் ஒருங்கு சேர்ந்தாலும், அசமுகியின் பேராற்றலுக்கு உறையிடவும் போதியதாகாது. கோபமே மிக மிகு கொடிய முனிவர், துருவாசர். கோபம் மிகத் தவம் மிகும் வரப் பிரசாதம் படைத்தவர் துருவாச முனிவர். அப்படிப்பட்ட துருவா சரைத் துரத்திப் பிடித்து, வலிதிற் சேர்ந்து,

வில்வலன் வாதாவி என்கின்ற புத்திர சிகாமணிகளை ஈன்றவள் அசமுகி. வில்லவன் வாதாவி, முனிவர்களை உண்டு ஏப்பம் இடுபவர்கள். அசமுகி யதேச்சாதிகாரி. அவள் இந்திராணியின் கைகளை இறுகப்பற்றி இழுத்தால், இந்திராணி நிலை எப்படியிருக்கும்!

ஃ ஃ ஃ

இந்திராணி,

'பையரா வமளியானும் பரம்பொருண் முதலுநல்கு
மையனே யோலம்விண் ணோர்க்காதியே யோலஞ்செண்டார்
கையனே யோலமெங்கள் கடவுளே யோலமெய்யர்
மெய்யனே யோலந்தொல் சீர்வீரனே யோலமோலம்.'

'ஆரணச் சுருதியோர் சாரடலுருத்திர னென்றேத்துங்
காரணக் கடவுளோலங் கடனிறத் தெந்தாயோலம்
பூரணைக் கிறைவா வோலம் புட்கலை கணவா வோலம்
வாரணத் திறைமேற் கொண்டுவரும் பிரானேலமென்றுள்.'

'ஒய்யெனச் சசியிவ்வாற்றுல் ஓலிட வதுகேட்டெங்கள்
ஐயனைக் குறித்துக்கூவி அரற்றுவாள் போலுமென்னு
மையினைத் தடுத்துச்சிந்து மருத்தென வந்தானென்ப
வெய்யரிற் பெரிதும் வெய்யோன் வீரமாகாள னென்போன்.'

வாயுவேகத்தில் வந்த வீரமாகாளரை, ஒரு சிறு தூசியாகவும் அசமுகி கருதவில்லை. அவள், ஆடுதானே! தன்போக்கிற் போனுள்.

'போகலும் அதனையையன் பொருநரிற் றலைவன் பாரா
வேகுதி போலுநில்லென் றெய்தியே யுடைவாள் வாங்கிச்
சேகுறு மணத்தாள்கூந்தல் செங்கையாற் பற்றி யீர்த்துத்
தோகையைத் தொட்டகையைத் துணித்தனன் விண்ணோர் துள்ள.'

ஹரிஹர புத்திரராகிய ஐயனுரைப் பிரார்த்தித்து,
வீரமாகாளரை வாழ்த்தி,
மண்ணில் நல்லவண்ணம்,
வாழ்வோமாக.

உ

# அற்புதம் செய்யும்

# அனலை ஐயனார்.

மு.வே. மயில்வாகனம்.
(செயலாளர், ஐயனார் ஆலய பரிபாலனசபை)

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தென்மேற்குத் திசையில் உள்ள தீவுக்கூட்டங்களில் ஒன்றாக அனலைதீவு உளது. இங்கு நடராஜர், அம்மன், விநாயகர், முருகன், வைரவர், ஐயனார் முதலிய தெய்வங்களுக்கெனப் பிரமாண்டமான கட்டிடங்களைக் கொண்டு ஆலயங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றுள் ஐயனார் ஆலயம் அமைப்பில் பெரிதாகவும், வரலாற்றுப் பெருமையுடையதாகவும் உளது. காத்தற் கடவுள் என்று போற்றப்படும் ஐயனாருக்கென எழுப்பப்பட்ட ஆலயங்கள் யாழ்ப்பாணத்திற் குறைவு எனலாம்.

இந்நிலையில் அனலையம்பதியில் கோயில்கொண்ட வரலாறும் அற்புதமாக உளது. இத்தீவில் தனிச் சைவம் தழைத்தோங்குகிறது. இவ்வூர் மக்கள் அனைவரும் சைவசமயிகளாக உள்ளனர். இத்தகைய இடத்தில் நயினாகுளம் எனும் திருப்பதியில் ஐயனாருக்கு ஆலயம் எழுப்பப்பட்டது. இவ்வாலயத்திலுள்ள ஐயனாரின் திருவிக்கிரகம் முன்னோர் காலத்தில் இத்தீவின் மேற்குச் சமுத்திரக் கரையில் பெட்டியில அடைக்கப்பட்டு வந்தது. இது பற்றிய வரலாற்றை விபரமாகப் பிறிதொரு இடத்தில் காணலாம்.

பூசகர் இந்த ஆலயத்தில் மாலை நேரப் பூசையை முடித்துத் திருக்கதவுகளை அடைத்துச் சென்றபின், அர்த்த யாமத்தில் மணியடித்துத் தேவ பூஜை நடைபெற்றதாகவும் —நடைபெறுவதாகவும் நேரில் கண்டு அனுபவித்த மெய்யன்பர்கள் கூறுகின்றனர். ஆரம்பத்தில் சிறு ஓலைக் கொட்டகையுடன் காணப்பட்ட இக் கோயில் இன்று மெய்யன்பர்களின் முயற்சியாலும், ஐயனார் அருளாலும் பெருங் கோயிலாக உருவாகியுள்ளது. ஏறக்குறைய 350 வருடகாலப் பழம் பெருமை உடையதாக இத்தலம் விளங்குகிறது. மழைக்காக இறைவனை ஆராதனைசெய்து வீடு திரும்புவதற்கு முன் ஐயனார் மழையினை வருஷிக்கின்றார். மாடுகளுக்கு நோய் வந்தால் ஐயனாரை நினைத்து, அவற்றின் கழுத்தில் காசு கட்டி நேர்த்திசெய்தால் நோய் தீர்ந்துவிடுகிறது. ஒருசமயம் ஒருவர் பிறநாட்டிலிருந்து வாங்கிய எருதுகளைக் கடல்வழியே கொண்டுவரும்போது நடுக்கடலில் மாடு ஒன்று பாய்ந்துவிட்டது. மாடு மறுபடியும் கிடைத்துவிட்டால் இடப வாகனம் ஒன்று செய்துதருவதாக ஐயனாருக்கு நேர்த்தி வைத்தார். பின் அவ்வாறு நேர்த்திக் கடன்செய்ய ஐயனார் கருணைசெய்தார்,

இற்றைக்கு 300 வருடங்களுக்கு முன் அனலைப் பதியில் பெரும் காற்று, ஊழித் தீபோல் நகரை அழிக்க வந்தபோது, ஊர்ச் சனங்கள் ஐயனார் சந்நிதானத்தில் சென்று முறையிட்டுப் புலம்பினார்கள். உடனே நாற்றிசையிலும் பெரிய பீரங்கி போன்ற இடிமுழக்கம் ஏற்பட்டு, பெருகிவந்த கடல் வற்றி, உள்ளடங்கிப் போயிற்று. இதைக் குறித்து வரகவி முத்துக்குமாரப் புலவர்:-

''வடமலைகள் கிடுகிடென மறுமலைகள் சாய
மழையினுடன் பிரசண்ட மாருதய டிக்கக்
கடல்குமுறி யலைபொருதிக் கலகலவென வரவே
காராளர் கண்டுநின் றபயமுறை யிடவே
திடுதிடென யானைமீ தையனார் தோன்றித்
திக்கெட்டு மேபடைக ளேவியே நின்று
விடுவிடென வெடிவைக்க அஞ்சியே கடலும்
விலைசகெட்டு அலைகெட்டு ஓய்ந்திட்ட தன்றே.

பாடியுள்ள தனிப்பாடல ஒன்று சிறப்பானது.

இது மட்டுமல்ல, அம்பாள் கருணைபோல, ஊர் மக்களுக்கு ஏற்படும் பேதி அம்மை, சின்னமுத்து முதலான நோய்கள் வந்தால் ஐயனாருக்கு நேர்த்தி செய்தவுடன் நோய் தீர்ந்துவிடுகிறது. ஆலயத்திற்கு அருகில் உள்ள தீர்த்தக் கரையில், ஐயனார் அருளால் பெரிய இரண்டு தேக்கு மரங்கள் வந்தடைந்தன. திருவருளை வியந்த மெய்யன்பர்கள் அம்மரத்தினைப் பயன்படுத்தி, ஆலயத்தின் பழைய குடிலைத் திருத்திச் செம்மையுற அமைத்தனர். ஐயனாரின் தலவிருட்சமான கூழாமரம் ஆலயத்தின் அருகில் செழிப்புடன் காணப்படுகிறது. இம்மரம் யாரால், எப்போது உண்டாக்கப்பட்டது என்று கூறமுடியாது, அவர் கூழாமர நிழலில தங்கியிருப்பதையே,

''திருத்து நல்நயி னார்குள நற்பதி
சிறந்த கூழா மரநிழல் தங்கியே'' எனும் பாடலடி கூறுகின்றது.

மருதநிலமும், நெய்தல்நிலமும் கலந்து காணப்படும் நயினாகுளப் பகுதியில் அமர்ந்திருக்கும் ஐயனாருக்கு ஒவ்வொரு வருடமும் ஆடி மாதத்தில் பூர்வபக்கச் சஷ்டித் திதியில் உற்சவம் ஆரம்பமாகி, விழாக்கள் மிகவும் விசேடமாக நடைபெறும். ஆலயத்தின் மேற்குத் வீதிக்குச் சமீபமாயிருக்கும் சமுத்திரத்தில் சங்கம தீர்த்தம் இருக்கிறது. இது, சேது தீர்த்தம் வந்து கலக்கும் சிறப்புடையது. இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வோர் தீராத நோயினையும் குணப்படுத்திச் செல்வர்.

மேற்கூறிய உற்சவத்தைவிடச் சித்திரை மாதம் முதல் திங்களில் வரும் பொங்கல் விழாவும் சிறப்பாக நடைபெறுகிறது. இக்காலத்திலும், திருவிழாவின் போதும் பிற ஊர்களிலிருந்து பன்னூற்றுக்கணக்கான அன்பர்கள் வந்து, காணிக்கைகள் செலுத்திச் சுவாமி தரிசனம் செய்து, தாம் விரும்பிய இஷ்டசித்திகளைப் பெற்றுச் செல்வர். வருடாந்த உற்சவத்தின்போது அன்னதானம் திருவிழா முழு நாட்களும் நிகழும். இதற்கென அன்னதானச் சபையார் பிரமாண்டமான மடம் ஒன்றையும் கட்டியுள்ளனர். திருவிழாக் காலங்களில் தொண்டர் சபை, சாரணர் இயக்கம் என்பனவும் மெய்யடியார்களின் பக்திசிரத்தைக்கு மதிப்பளித்து ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றனர்.


வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் காத்தற் கடவுளாகிய அரிஹரபுத்திர ஐயனார், அடியார்கள் உய்யும்பொருட்டுக் கருணைமூர்த்தியாகத் திருவுருக் கொண்டு அனைவருக்குமே இம்மை மறுமைச் செல்வங்களை அளித்துவருகின்றார்.



வருடாந்த உற்சவம் 11-08-80ல் ஆரம்பமானபோது கொடியேற்ற நிகழ்ச்சி நிகழ்வதற்கு முன்னர் கும்ப பூசை நடைபெற்று ஆதிமூலத்தை வலம் வந்து கொண்டிருக்கும் காட்சி.




கொடியேற்று வைபவம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஊரெழு சிவாகம பூஷணம் பிரதிஷ்டா பிரதம் சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார் அவர்கள் துவஜாரோகண வைப வத்தை பயபக்தியுடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.



ஐயனூர் யானை வாகனத்தில் எழுந்தருளி வெளிவீதிக்கு வந்துகொண்டிருக்கிறுர். பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் கூத்தாடுவது மெய்சிலிர்க்கச் செய்யும்.



ஐயனூரின் பழைய தேர்




சித்திரத்தேர் நிர்மாண வேலைகள் நடைபெறுக்கொண்டிருக்கிறது. உள்ளூர் ஆசாரிமார் தங்கள் பூரண ஒத்துழைப்பை இந்தியச் சிற்பிகளுக்கு வழங்கி, ஐயனுருக்கு தங்கள் அன்புக்கடமையை செவ்வனே நிறைவேற்றினர்.



கூழாமரத்தின்கீழ் ஐயனர்! இஃது தேரில் அமைந்துள்ள முக்கிய சிற்பங்களில் ஒன்று. சிற்பி தம் கைவண்ணம் காணீர்!



யானை வாகனத்தில் மடித்த காலில் கை யுடன் ஐயனர்! இஃதிலும் சிற்பியின் கைவண்ணம் காண்பீர்!




சித்திரப் பெருந்தேரைச் சமைத்த
இந்திய சிற்பிகளுடன்
உள்ளூர் ஆசாரிமார் சிலர்
காணப்படுகின்றனர்



ஆலயத்தின் தென்கிழக்குப் பக்கமாக தென்னந்தோப்பினுள் எழுந்து நிற்கும் பிரமாண்டமான அன்னதான மண்டபம்! ஐயனார் கோவில் அன்னதான சபையாரின் அயராத உழைப்பு இந்த மண்டபத்தில் பிரதிபலிக்கிறது.


வருடாந்த உற்சவகாலங்களிலும், நாயன்மார் குருபூசை தினங்களிலும் மற்றும் சிறப்பு நாட்களிலும் அன்னதான சபையார் அன்னதானம் வழங்கி வருகின்றனர்.

1972ம் ஆண்டில் இக்கட்டிடம் சுமார் ஒருஇலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது.



**வெள்ளோட்டம் காணவிருக்கும்
சித்திரப் பெருந்தேரின்
சிம்மாசன மட்டத்திலான தோற்றம்!**

*பூதப்பார் முதல் சிம்மாசனம் வரை 27 அடுக்குகளைக் கொண்ட
இந்த மகோத்தர மகாரதத்தின் சில்லு வாகை மரத்தாலும்
அடுக்குகள் முதிரை மரத்தாலும்
சிற்பங்கள் இலுப்பை மரத்தாலும் ஆனவை.*



சித்திரப் பெருந்தேரை நிர்மாணித்த பிரதம சிற்பி
மாலைகண்டான் திரு. சோம. லக்ஷ்மண ஸ்தபதி
தஞ்சாவூர் வாளுமங்களம் திரு. எஸ். தியாகராசன் ஸ்தபதி
மாலைகண்டான் சோம. சின்னத்தம்பி ஸ்தபதி ஆகியோரையும்
தேர் வேலையில் அயராது பங்கெடுத்த உள்ளூர் ஆசாரிமார்களான
திரு. க. சின்னத்துரை, திரு. வே. ஐயாத்துரை, திரு. க. நமசிவாயம்,
திரு. ஐ. கந்தையா, திரு. ஐ. நாகமணி, திரு. க. அருணாசலம்,
திரு. மா. வைத்தியலிங்கம், திரு. நா. கதிரவேலு, திரு. நா. சின்னையா,
திரு. சி. குலநாதன், திரு. சி. இராமநாதி, திரு. இ. மனோகரன்
ஆகியோரையும் படத்தில் காணலாம்.

சிற்ப வேலையில் பங்கெடுத்த
மாலைகண்டான் திரு. எஸ். பி. இரத்தினம் ஸ்தபதியாரும்
இரும்பு வேலை செய்த திரு. ஆ. கணபதியும் இதில் அடங்குவர்.

உ

# அனலையில்

# அரிஹர புத்திரன்!

மு. சிவரத்தினம்.

இணைச்செயலாளர், ஐயனார் ஆலய தேர்த்திருப்பணிச்சபை

உலகம் உணர்ந்து உய்ந்திடவேண்டி இறைவன் பற்பல மூர்த்தங் கொண்டனன். அவன் திருவிளையாடல்கள் எண்ணிலாதவை முன்னொரு காலத்தில் பத்மாசுரன் சிவபெருமானை நோக்கி, கடுந்தவமியற்றினன். அவன் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவன் முன் தோன்றினார். "அன்பனே நீ விரும்பியதைக் கேள்! அதனை உனக்குத் தருவேன்" என்றார். கொடுமனங் கொண்ட அசுரனோ, நான் தொட்டதெல்லாம் எரிந்து சாம்பராகவேண்டுமென்று கேட்டான். இறைவனும் அவ்வாறே ஆகுக என வரங் கொடுத்தார். தான் பெற்ற வரத்தைப் பரீட்சித்துப் பார்க்க விரும்பிய அசுரன் சிவபிரான் தலைமீது தன் கையை வைக்கப் போனன். சிவபிரான் தன் நிலை உணர்ந்து ஓடத் தொடங்கினர். அசுரனும் விடாது துரத்தினன்.

திருமால் நடப்பதை அறிந்து, அழகிய மோகினி வடிவு கொண்டு அசுரன் முன் தோன்றினார். அவர் அழகில் மயங்கிய அசுரன், சிவனைத் துரத்துவதை மறந்து அவளை அடைய விரும்பி, அவளிடம் மன்றாடினன். அவளோ என்னை அடையவேண்டுமானல் குளித்துச் சுத்தமாக வாவெனக் கூறினள். அவன் குளித்து வர நீர் தேடிச் சென்றான். திருமால் நீர்நிலைகளில் உள்ள நீரையெல்லாம் மறையச்செய்தார். எங்கேயும் நீர் காணுவசுரன் மனம் சோர்ந்து திரும்பி வந்தான். குளிப்பதற்கு நீர் கிடைக்கவில்லையெனக் கூறினன். அவ்வாறாயின் சிறிது நீரை எடுத்து தலைமேல் தெளித்துக்கொண்டாவது வாவென மோகினி கூறினள். அசுரன் திரும்பிச் சென்றான். திருமால், மாட்டின் குளம்படி பதிந்த இடத்தில் சிறிது நீர் தேங்கிநிற்கச் செய்தார். அந்த நீரைக் கண்ட அசுரன் அதைத் தொட்டுத் தன் தலைமேல் வைத்தான். தான் பெற்ற வரத்தால் எரிந்து சாம்பரானன்.

துரத்திவந்த அசுரனைக் காணுத சிவபிரான் திரும்பிவந்தார். அதி சௌந்தர்ய மோகினியைக் கண்டார். மையல் கொண்டார். உணர்ச்சி மேலிட விந்து சிந்தியது. அதனைக் கீழே விழவிடாது, மோகினியாய் நின்ற மகாவிஷ்ணு தம் கரத்திலேந்தினர், அதினின்றும் அரிஹர புத்திரனும் ஐயனார் உதித்தனன் உலகம் உய்ய!

°°  °°  °°  °°

இற்றைக்கு ஏறக்குறைய 350 வருடங்களுக்கு முன் அலைபுனல்சூழ் அனலையின் மேல்பால் அலைவழிபோந்து ஒதுங்கியது ஒரு பேழை. அதனைக் கண்ட மக்கள் பலர் குழுமி, அப்பேழையைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள், பாரம் தூக்க முடியாமற்போகவே, சிறிது தூரத்தில் நின்ற கூழாமரத்தடியில் பெட்டியை வைத்தனர். பின்னரும் தூக்கிச் செல்ல முயன்றனர். பெட்டியைச் சிறிதுகூட அசைக்கமுடியாது போகவே, உள்ளே இருப்பதை அறியும் ஆவலால் பெட்டியை உடைத்துப் பார்த்தனர். அங்கே பூரணை, புட்கலை சமேத ஐயனார் இருக்கக் கண்டனர். அவ்விடத்திலேயே கோயிலெடுத்து வணங்கி வருவாராயினர். இவ்வாறாக பூரணை, புட்கலை சமேத அரிஹரபுத்திர ஐயனார் அனலை வந்துதித்தனன்.

ஒருமுறை கடல் பெருக்கெடுத்துப் பேரலைகளுடன் ஊரின் உள்ளே வரத் தலைப்பட்டது. அனலை மக்கள் எல்லோரும் ஐயனாரே தஞ்சமென ஆலயம் புகுந்தனர். அப்போது கோயிலின் வெளியே பெரிய வெடியோசை கேட்டது! அலையோய்ந்து, ஆழி அமைதிபெற்றது. மக்கள் ஆபத்திலின்றும் நீங்கினர். ஐயனார் கடலையடக்கிய ஓசையே பெரிதாகக் கேட்டதென்பர். பரம்பரையாக மக்கள் வழி இக்கதை வழங்கிவருகின்றது. அனலைவாழ் மக்கள் இம்மைக்கும் மறுமைக்கும் நீங்காப் பெருந்துணையாய் நீக்கமற நின்று தம்மை ஆள்பவர் ஐயனாரே என்ற அசையா நம்பிக்கை உடையவர்கள். எக்கருமத்தைச் செய்யினும் ஐயனாரே தஞ்சமென அக்கருமத்தைச் செய்வர். அவர்கள் வாழ்வு வளம் பெற அமைதல் கண்கூடு! அவரை நம்பினோர் கைவிடப்பட்டாரில்லை.

ஃ ஃ ஃ ஃ

பழைய தேர் பழுதடைந்துவிட்டதால் புதிய தேர் செய்யவேண்டுமென்று மக்கள் விரும்பினர். பொருட்செலவு எவ்வளவாகுமென நினைத்தாரில்லை. சிறந்த தேர், மிகச் சிறந்த சித்திரத் தேர், ஐயனுக்கு வேண்டுமென்றே நினைத்தனர். அதற்கென ஒரு சபையையும் தெரிவுசெய்தனர்.

தேர்த் திருப்பணிச் சபையினர், இந்தியச் சிற்பிகளை வரவழைத்து தேர் சமைக்க எண்ணினர். ஆயினும் வழிவகை தெரியாது அலமந்திருந்தனர், காலம் கடந்துகொண்டிருந்தது. திருப்பணிச் சபையினரில் ஒரு பகுதியினர் பொறுமை இழந்து, இந்தியச் சிற்பிகளை வரவழைக்கும் திட்டத்தைக் கைவிடுமாறும் இலங்கையிலுள்ள சிறந்த சிற்பாசாரியரைக் கொண்டு தேர் செய்தாற் போதுமென்றும் கூறினர். இந்தியச் சிற்பிகளைக் கொண்டுதான் தேர் செய்யவேண்டுமென்றும் விடாப்பிடியாய் நின்றவர்களுக்கு ஒரு வாரகால அவகாசம் கொடுக்கப்பட்டது. அவ்வேளை நிகழ்ந்தது அதிசயம்! ஒரு வாரகால அவகாசம் கொடுத்த மறுநாள், அவ்வேளை யாழ்ப்பாணத்தின் அரசாங்க அதிபராயிருந்த மாண்புமிகு விமல் அமரசேகரா அவர்கள் அனலைதீவுக்கு வந்தார்கள். அரசாங்க அதிபர்கள் அனலைதீவுக்கு வருவது அபூர்வம். ஆயினும் விமல் வந்தார். இந்தியச் சிற்பிகள் நால்வரை வரவழைக்க விசா பெற்றுத்தருவதாக உறுதியளித்துச் சென்றார். அப்போதைய அரசாங்கத்தின் கொள்கைப்படி இந்தியச் சிற்பிகளை வரவழைப்பது விரும்பப்படாததாக இருந்தது, ஆயினும் தாம் வாக்களித்தபடி விசா, பெற்றுத் தந்தார்கள். அக்காலத்தில் அரசாங்கத்தில் மந்திரியாக இருந்தவர்கூடத் தமது ஊரின் கோயிலுக்குத் தேர் செய்ய இந்தியச் சிற்பிகளை வரவழைக்க அனலைதீவு ஐயனார் கோவிலுக்கு இந்தியச் சிற்பிகள் வந்திருப்பதை உதாரணம் காட்டி

விசா, பெற்றதாக அறிந்தோம்! இவ்வண்ணம் அன்பர்களின் ஆசை தீரச் சித்திரத் தேரில் பவனிவந்து உலகோர்க்கு அருள்புரிய ஐயன் திருவுளங் கொண்டவன், சேரவாரும் ஜெகத்திரே! அவனருள் பெற்றுய்வீரே!!

ஃ ஃ ஃ ஃ

தென் இந்தியாவில் தேர் வேலைக்குப் பேர் போனது இராமநாதபுரம். அங்கே 75க்கு மேற்பட்ட மகோத்தர மகா ரதங்களை அமைத்துப் புகழ் பெற்றவர் மாலைகண்டான் சோமசுந்தர ஸ்தபதியார் அவர்கள். அது காரணமாக காஞ்சி காமகோடி சங்கராச்சார்ய சுவாமிகளால் 'ரதச் சக்கரவர்த்தி' என்று பட்டம் சூட்டப்பெற்ற பாக்கியம் பெற்றவர். அன்னார் காலமாகிவிட, அவர் மகன் இலட்சுமண ஸ்தபதி அவர்கள், தந்தைவழி மைந்தன் என்ற கோட்பாட்டை நிலைநாட்டிவருகின்றார். அவரின் கன்னித் தேர், செட்டிநாடு பாகனேரி புலவாய்நாயகி அம்மனுக்கு அமைந்தது. அடுத்த தேர், அனலைதீவு ஐயனுக்கு அமையப்பெறும் பாக்கியம் பெற்றோம்.

எளிமையான தோற்றம், நிறைந்த கற்பனை வளம். எதனையும் நுட்பமாக விளங்கிக்கொள்ளும் ஆற்றல். சிக்கலான கணிப்புகளையும் சாதாரண வழியில் விளக்கிக் கூறும் திறமை, இவையெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர், எங்கள் ஸ்தபதியார் அவர்கள். இவர் மகாரதச் சக்கரவர்த்தி என்ற பட்டத்தைப் பெறும் நாள் தூரத்தில் இல்லை. இவர் உயர்கல்வி பெற்றிருந்தால், கணித மேதை இராமானுஜர் போன்று புகழ்பெற்றிருப்பார். ஆயின் தமக்குத் தேர் அமைக்கும் வாய்ப்பு இல்லாது போகுமென்றதாற்போலும் இறைவன் இவருக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்காதுவிட்டனன்.

திரு. இலட்சுமணன் வடிவமைத்து, உருவாக்கிய இத்தேருக்கு சிற்பக்கலை வல்லுநன் வாழுமங்கலம் சண்முக ஸ்தபதியின் மகனும் ஏகாம்பர ஸ்தபதியின் இளவலுமான தியாகராசன் ஆச்சாரி அவர்கள் உயிர்ப்புள்ள சிற்பங்கள் செதுக்கி உயிரூட்டி இருக்கின்றார்.

மாலைகண்டான் சோமசுந்தர ஸ்தபதி அவர்களின் தம்பி சுப்பையா ஆச்சாரி மகன் சுப. இரத்தினம் ஆச்சாரி அவர்களின் சிற்பங்களும் அழகுக்கு அழகூட்டுகின்றன.

இவர்கள் செதுக்கிய சிற்பங்களை எல்லாம் இலட்சுமண ஸ்தபதி அவர்களின் தம்பி சின்னத்தம்பி ஆச்சாரி அவர்கள் மெருகேற்றி, பேசும் பொற்சித்திரங்களாக மாற்றித் தம் கைவண்ணம் காட்டியிருக்கின்றார்.

இவை எல்லாம் சிறப்பாக நிறைவேற, எமது உள்ளூர் ஆசாரிமாரின் திறமையும், ஊக்கமும் கைகொடுத்தன!

திருத்தேர் நிறைவேறப் பொருளாலும், உடலாலும், உளத்தாலும் உதவினோர்க்கு இம்மையிற் செல்வமும், மறுமையில் வீடுபேறும் நல்கவேண்டுமென ஐயனை வேண்டுகிறேன்.

பூதப்பார் முதல் சிம்மாசனம் வரை 27 அடுக்குகளை உடைய இந்த மகோத்தர மகாரதத்தின் சில்லு வாகை மரத்தாலும், அடுக்குகள் முதிரை மரத்தாலும், சிற்பங்கள் இலுப்பை மரத்தாலும் ஆனவை. 800 ஆண்டுகள் வரை நிலைத்துநின்று இறைவனைத் தாங்கும் பேறுபெற்ற இவை செய்த தவம் இருந்தவாறு.

உ

# தேர் விழாவும், அதன் தத்துவமும்

சு. இரத்தினசபாபதி
தேர்த்திருப்பணிச்சபை உறுப்பினர்.

தேரின் அமைப்பை உளத்திலே ஆராய்ந்து அவதானிப்போமாயின், அதன் முழுத் தோற்றமும் கொழுந்துவிட்டெரியும் அக்கினியின் அமைப்பை நிகர்க்கும். இக்கருத்தை உள்ளடக்கியே "சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்" எனநவிலப்பட்டது. ஈசனின் திருக்கரத்திலே ஏந்தியிருக்கும் அக்கினி சங்காரத்தைக் குறிப்பதாகும். தேர், இரதம் என்பன ஒரே பொருளைக் குறிப்பன. நால்வகைத் தானைகளுள் தேரும் ஒன்று.

ஆதிகாலத்திலே விருயுத்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்ற அசுரர்கள் மூவரிருந்தனர். இவர்கள் மூவரும் இறைவனைக் குறித்து நெடுங்காலம் த்வமியற்றி இரும்பு, வெள்ளி, பொன் எனும் மூன்று உலோகத்தாலும் அமைந்த கோட்டைகளையுடைய மூன்று ஜங்கம புரங்களைப் பெற்று, அப்பட்டணங்களோடு அந்தரத்தெழுந்து, தத்தமக்கிஸ்டமாகிய இடங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள பட்டணங்கள் மீதும் அமர்ந்து, அங்கு வசித்தவர்களை நாசஞ்செய்து வந்தனர். அக்கொடுமைகளைக் கண்ட காத்தற் கடவுளாகிய திருமால், நாரதரை திரிபுராசுரரிடம் ஏவி, பாஷண்ட மதத்தை உபதேசித்து, சிவன் மீது அவர்கள் வைத்திருந்த பக்திக்கு ஊறு செய்வித்தார். அதனால் இறைவன் இவர்களை அழிக்க நினைந்து ஓர் இரதத்தைத் தேவர்களைக் கொண்டு அமைப்பித்தார். இயற்கையில் உள்ள பொருட்களையெல்லாம் அவர்கள் அதில் பொருத்தி வைத்தார்கள். தேவர்கள் மூவர்கள் யாவரும் அத்தேரின் வெவ்வேறு உறுப்புக்களாக அமைந்திருந்தார்கள். மந்திர கேசரி மலைகள் அச்சாகவும், சூரிய சந்திரர்கள் சக்கரமாகவும், ஆறு ருதுக்களை சக்தியாகவும் பதினன்கு லோகமும் தட்டுகளாகவும், ஆகாயம் ஆசனமாகவும், உதயாத்தமன மலைகள் கூவிரமாகவும், நதிகளும் நதங்களும், கொடிகளாவும், நட்சத்திரங்கள் விதானமாகவும், மோட்சலோகம் மேல் விரிவாகவும், யாகங்கள் சட்டங்களாகவும், நாள் முதலியன இடுக்கு மரமாகவும். அட்ட மலைகள் தூண்களாகவும், அட்ட யானைகள் தாங்குவனவாகவும், சத்தசமுத்திரங்கள் திரைச் சீலை

களாகவும். கன்ம ஞானேந்திரியங்கள் கலன்களாகவும், கலைகள் முளைகளாகவும், வேதாங்க உபாயங்கள் மநு சாஸ்திரங்கள் மணிகளாகவும், வாயுக்கள் படிகளாகவும், நான்கு வேதங்கள் பூட்டப்படுங் குதிரைகளாகவும் அமைக்கப்பட்ட இரதத்திலே சங்கார மகாதேவன் எழுந்தருளி, கங்கை முதலிய தேவ மாதர்கள் சாமரம் இரட்டவும், ஊர்வசி முதலிய கணிகை மகளிர் நடனமிடவும், மகாமேரு மலையை வில்லாகவும், சரஸ்வதியை வில்லிற் கட்டிய மணியாகவும், வாசுகியை நாணுகவும், விஷ்ணுவைப் பாணமாகவும், அக்கினி தேவதையை அவ்வம்பின் கூர்நுனியாகவும், வாயு தேவனை அம்பிறகாகவுங் கொண்டருளி, சாரதியாகிய பிரமா பிரணவமாகிய தூண்டுகோல் கொண்டு செலுத்த, ஒவ்வொரு தேவரும் தாம் வசித்த ஸ்தானத்தின் சிறப்பைக் குறித்துத் தற்பெருமையுற்றனர். ஆனுல் போர் புரிதற்கு இரதத்தையோ, தாம் கையில் தாங்கியிருந்த வில்லையோ, அம்பையோ பயன்படுத்தவேண்டிய அவசியம் சிவபெருமானுக்கு உண்டாகவில்லை. அவர் முப்புரங்களைப் பாத்தார்; புன்னகை பூண்டார்; முப்புரங்கள் வெந்து மறைந்தன.

முப்புரமென்பது, ஆணவம், கன்மம், மாயையென்னும் மும்மல காரியங்கள் எனவும். அத்திரிபுரங்களை நீறுக்கி தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி என்னும் மூவர்களையும், தேவர்களையும் அடிமையாகக் கொண்டு அவர்கட்குத் தம்பதமருளி இன்பங் கொடுத்தமை, மும்மல காரியங்களையும் கெடுத்து விஞ்ஞாகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களையும் அடிமையாகக் கொண்டு திருவடி முத்தி கொடுக்கும் உண்மையெனவும் அறிய நின்றதனுல் எல்லாமாய் அவைகட்குக் காரணமுமாய் நிற்கும் பரமபதியாகிய சிவபெருமானே ஆன்மாக்களுடைய மும்மலப்பந்த வாதனைகளைக் கெடுத்து, திருவடிப் பேருகிய பேரானந்தப் பெருவாழ்வளிப்பர் என்பதும் உணரப்படும். மேலும் மூன்று அசுரர்கள் என்பார் முக்குணங்கள் எனவும், சத்வகுணத்தின் வெண்மையை வெள்ளிக்கோட்டை விளக்குகிறதெனவும், ரஜோ குணத்தின் செம்மை நிறத்தைத் தங்கம் தெரிவிப்பதாகவும், தமோணத்தின் கருமைக்கு இரும்பு எடுத்துக்காட்டுவதாகவும் கூறப்படுகிறது.

மானுட சரீரமே ரதம். பிரபஞ்சப் பொருள்களெல்லாம் மானுட சரீரத்திலுமுண்டு. இந்திரியங்கள் அனைத்தும் தேவர்கள் எனப்படுகின்றன. அஞ்ஞானத்தில் உழலும் சீவாத்மன் பிரம்மதேவன் ஆகிறுன். அவன் பெற்றுள்ள அறிவு வேதங்களாகின்றன. சிவனருளால் சிவஞானம் உதயமாகும்போது முக்குணமயமான இவையாவும் அழிந்து பட்டுப் போகின்றன. சீவாத்மா சிவத்தில் லயமாகிறுன். குணுதீதத்திலிருப்பது

சிவம், பல பிறவிகளில் படாதபாடுபட்டு ஜீவாத்மன் தன்னைப் பக்கு வப் படுத்துகிருன். முற்றிலும் பக்குவமான பிறகு பரஞானம் அவனுக்கு எளிதில் வாய்க்கிறது. ஏனென்ருல் யாண்டும் அவனுக்கே சொந்த மாயுள்ள நிறசொரூபம் அதுவாகும். இங்ஙனம் பரஞானம் அடையப் பெறுபவர்கள் எல்லாரும், எக்காலத்திலும் திரிபுரதகனம் செய்துவருகி ருர்கள்.

"அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கண்
முப்புர மாவது மும்மல காரிய
மப்புர மெய்தமை யாரறிவாரே'' திருமந்திரம்

''வளைந்தது வில்லு விளைந்தது பூச
லுளைந்தன முப்புர முந்தீபற
வொருங்கடன் வெந்தவா றுந்தீபற''

''பிரம்பு கண்டில மேகப்பர தன்மையி
லோரம்பே முப்புர முந்தீபர
வொன்றும் பெருமிகை யுந்தீ பற''

''தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலு
மச்சு முறிந்த தென் றுந்தீ பற
வழிந்தன முப்புர முந்தீ பற''

''உய்யவல் லாரொடு மூவரைக் காவல் கொண்
டெய்ய மல்லானுக்கே யுந்தீ பற
விளமுலை பங்கனென் யுந்திபற''
திருவாசகம் திருவுந்தியார்.

பிழைக்க வல்லவராயிருந்த மூன்று அரக்கர்களையும் கயிலைக்குக் துவாரபாலகராகச் செய்தான் சிவன். உமாதேவி சமேதன முப்புரங்களை அம்பால் எரிக்க வல்லான் என்பதே ஷை திருவாசகம் விளக்குவது.

மானுட சரீரமே ரதமென ஏற்கெனவே கூறப்பட்டது. சிவஞா னத்துக்குப் பிறகு அது பயனற்றதாகிறது. ஜாக்கிரதம், சொப்பனம், சுஷுபதி என்ற மூன்று அவஸ்தைகளே முப்புரமெனவும் பரபேதம் அடையப்பெற்றதும் இம் மூன்றும் மாயமாய் மறைந்து போகின்றன வென்றும், இவைகளுக்கு மூலகாரணமாகிய சத்வம், ரஜஸ், தமஸ் எனும்

முக்குணங்கள் அழிவதில்லை யெனவும், அவை பிரகிருதி மயமாய் பரவஸ்துவுக்கு வாயில் காப்பாளராகக் கீழ் நிலையிலிருக்கின்றன வெனவும் கொள்ளப்படுகிறது.

பிரபஞ்சம் முழுவதும் பீடசக்தியாகவும், அவற்றுள் மறைந்திருப்பதே சிவ சொரூபம் என்ற நினைவுடன் இரதத்திலே இறைவனை நாம் தரிசிப்பதனால் சிறந்த பலனை அடையலாம். வேதத்திலே இரதத்தைப் பற்றி,

''தக்ஷத்ப்யோ ரககாரேப் யச்ச வோநம;
ரதேப்யோ ரதபதிப்யச்சவோ நம', என்று சொல்லப் பட்டுள்ளது.

பெருமரங்களை வெட்டிச் சிறுதுண்டுகளாக ஆக்கித்தருபவன் தச்சன். சிற்பசாஸ்திர நுணுக்கப்படி அவைகளை உருவாக்குபவன் சிற்பாசாரி. அதனால் அமைந்த உருவம் தேர். அதில் வீற்றிருப்பவன் இறைவன். இவ்வாறு உலகத்தில் நாம் காண்கிறோம். இதனையே இந்த மந்திரம் விளக்குகிறது.

இவ்வளவு சிறப்புகள் பொருந்திய பொருளமைந்த தேர்விழாவைத் தரிசிப்பதற்குச் சிவபுண்ணியப் பேறுவேண்டும். இதனை நாம் மனத்தகத் திருத்தி உற்றுணர்ந்து கடைப்பிடித்து நற்பேறு பேறுவோமாக!

**சிவபுராணம்**

''சிவ சிவ என்று ஒருநாமம் சொல்லடா கெட்ட
பாமரமே உனக்கு அது பாரம் என்னடா
பொல்லாத யமன் வந்தால் விடமாட்டான்
சாம்பசிவ தாசன் என்றால் தொடமாட்டான்''

ஒரு பழம்பாடல்

# கடவுட் கருணை

(1955ம் ஆண்டளவில் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் அனலைதிவுக்கு வருகை தந்திருந்தார். திரும்பிச் செல்லும் போது அவருடன் கூட வந்திருந்த தினகரன் நிருபரிடம் இப் பாடல்களை திரு. கி. வா. ஜ. பாடிக் கொடுத்திருக்கிறார். மறுநாள் "தினகரன்" பத்திரிகையில் இவை பிரசுரமாகியிருந்தன. பாடல்களின் கீழ்
"கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அனலை தீவுக்கு விஜயம் செய்த போது தினகரன் நிருபரிடம் பாடிக் கொடுத்தது"
என்று "தினகரன்" குறிப்பு எழுதியிருந்தது.)

*நாற்புறமும் கடலலைகள் வீச மேலே*
*நலந்தருமக் காற்றசைய அன்பரோடே*
*ஏற்புறவே "ஸ்டீம் லோஞ்சி"'ல் அனலைதீவுக்*
*கேகுகின்ற போதினிலே என்னே இன்பம்!*
*பாற்படுமவ் வீதிகளும் இல்லந்தாமும்*
*பரப்பாகக் காண்பதிலை புழுதியில்லை*
*தோற்பதிலை வெல்வதிலை சாந்தி என்னும்*
*தூயநிலை கடலிடையே கண்டேன் யானே.*

★

*மேலேவிண் நீலமுறு விதானம் போர்ப்ப*
*விரிந்த கடல்நாற்றிசையும் பாவாடைபோல்*
*காலமெதுவானாலும் அலைகள் வீசக்*
*கண்டிருந்த காட்சியிலே கருத்துமூழ்கி*
*நீலநிறப் பரப்பிதுதான் மாலோன் மேனி*
*நீட்டமோ எனநினைந்தேன் முருகனேறும்*
*கோலமயில் வாகனத்தின் நிறமோஎன்று*
*கும்பிட்டேன் மனமங்கே செருகிற்றம்மா!*

★

இயற்கையெழில் தனைக்கண்டால் மனிதன்செய்கை
எள்ளாகி எள்ளினிலும் எளிதாகிச்
செயற்கையெலாம் அழகற்ற நிலையேயாகிச்
சிந்தையிலே படுவதனைக் கவிஞர் கண்டார்
அயர்ச்சியெலாம் போக்கஇறை அருளைஎண்ண
அழகான கவிதைதனைப் பார்க்கவேண்டின்
முயற்சியொடும் மலையெங்கே பொழில்கள் எங்கே
மூளாறெங்கே யென்றே தேடிச்சென்றார்.

★

பொழில்கண்டார் பொழிலினிலேமரத் தைக்கண்டார்
பொலிமரத்திற் கிளைகண்டார் கிளையிற்கொம்பும்
எழிலுடைய இலைப்பரப்பும் அதனினூடே
இலகுமலர் காய்கனிகள் இருப்பக்கண்டார்
பழகுமிவற்றைக் கண்டபோழ்தில் இந்தப்
பாரிலவைதமைச் செய்தகலை ஞன்தன்னை
அழகரிலே அழகனும் இறைவன்சீரை
அகத்தினிலே நினைந்துருகிப் பாடினார்கள்.

★

அழகுடைய பொருளிலே இன்பம்காணல்
அம்புவியின் மனிதர்செயல் அகிலத்தெல்லாம்
பழகுபொருள் யாவையுமே அழகாக்காணும்
பண்புடையார் அருட்கவிஞர் ரோஜாப்பூவில்
ஒழுகுகருணைக் கடவுள்தன்னைக் காண்பார்
உறுத்துமுள் ளில்அவனருளைக் கண்டுவப்பார்
அழிவரியபொருள் அவன்றன்படைப் பாம்எல்லாம்
அழகழகென்றே வாழ்த்தி அன்புசெய்தார்.

★

# திருப்பாட்டின் முதற்பாட்டு

சிவநெறிச்செல்வர் வே. ச. சுப்பையா.

இன் சொல்லும், பணிவும் உடைய வனுயிருந்தும் கையில் ஒன்றுமில்லாதானே உலகம் இகழும். கடுஞ்சொல்லும் பணிவா மையுமுள்ளவனைச் சூழ்நது புகழ்ந்து பணிந்து அவன் சேவடிக்கீழ் ஒதுங்கும். புகழுடையவரை இகழ்ந்தும், இகழ்ச்சியா ளரைப் புகழ்ந்தும் வரும் உலகம் அறி வுடையதல்ல மயக்கமாகிய பித்துடையது என்றார் குமரகுருபரர்.

''இன் சொல்லன் தாழ் நடையன்
ஆயினும் ஒன்றில்லானேல்
வன் சொல்லின் அல்லது வாய்திறவா
— என் சொல்லினும்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும்
கடல் ஞாலம்
பித்துடைய அல்ல பிற''

இதனல் ஆவதை ஒழித்து, அழிவதை மேற்கொள்ளலும், போற்றப்படுவதைத் தூற்றுவதும், தூற்றப்படுவதைப் போற்று வதும் ஆகிய செயல்கள் பித்தின் இலக்க ணம் காரணமின்றிச் சிலர் சிறிதும் பொருந்தா உரை பகர்வர். அதுவும் பித் தின் இலக்கணமேயாகும். இறைவன் இத் தகைய பித்தன் அல்லன். உலகப் பித்தி னைப் போக்கித் தன்பால் பித்துக்கொள்ளு மாறு அருள்செய்பவன் இறைவன். சுந் தரரை உலக மையலில் சிக்காவண்ணம் தடுத்து ஆட்கொள்ளவே பித்தன் என்ற பெரும் பெயர் பெற்ருர்.

ஆளுடைய நம்பிகள் அருளிய திருப் பாட்டின் முதற்பாட்டின் முதன்மொழி பித்தன் என்பது. இத்திருநாமத்தின் சீரிய உட்கருத்தினைக் காண்பாம். நம்பிக்குத் திரு மணம் தொடங்கும் அமையத்து, பெருமான் கிழ வேதியர் கோலம் பூண்டு. பந்தரிடை மெய்தி ஆரூரன் என் அடிமை என்றனர். ஆரூர் அந்தணர், அந்தணர்க்கு அடிமை யாதல் எங்கும் கேட்டிலம். ''நீர் பித் தரோ,, என எள்ளி நகையாடினர்'' யான் பித்தனுமாக பேயனுமாக வித்தகம் பேச வேண்டி பணிசெய்ய வேண்டுமென்றனர்'' வேதியர். பின்னர் அற்புத பழஆவணம் காட்டி ஆட்கொண்டவா முன்பு எனைபித் தன் என்றனை'' பித்தன்,, என்றே பாடுக வென்ருர் - ஆரூரர் ''பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா''

என்று பாடினர். வல்வழக்காடிய வேதி யரை இன்னரென்று அறியாத நிலையில முறையிலாது ''பித்தரோ நீர்,, என்று கூறிய பொருளில். அவரை இன்னர் என அறிநத பின்னரும்,

'பித்தா பிறை சூடி பெருமானே
''அத்தா உனக்காளாய் (அருளாளா)
அல்லேன் எனலாமே,, என்று

கழிந்தகற்கு இரங்கிய சமயத்தும் ஆண்ட வனே ''பித்தன்'' என்று நாணுது கூறத் தலைப்பட்டிருப்பதா என்பது ஆராய்தற் குரியது. உலகப்பித்துடையார்க்கு மெய்யு ணர்வின் வடிவாம் இறைவன் பித்தனுகக் காணப்படுதல் பொருத்தமே - ஆனல் ''பேயாய்த்திரிந் தெய்தேன் பெறலாக அருள் பெற்றேன்'' என்று தமது இழிதக வினையும் அதற்கு மாறுகத் தம்மைத் தடுத்தாண்ட மேதக வினையும் ஒப்பிட்டுக் கண்ட ஆரூரர் இறைவனை உலகவர் கூறும் பொருளில்

பித்தன் என்று உணர்த்திராதிலே? பின்னை இறைவனை எத்தகைய பித்தன் என்றுரெனின்? ''அன்புப பித்தன்'' 'அருள் பித்தன்' என்றே உரைத்திருக்கவேண்டும். பெருமான் கயிலையில அருள் செய்த சாலுமொழியால் தடுத்தடிமை கொள்வான் மணமிடைவந்து கிழவேதியராய்த் தமது பரவியலபைகருதாது தனதடிமையென்பதை வழக்காடி வென்று தம்மை அறிவுறுத்தி ஆரூரர்க்குப பண்டைய நிகழ்ச்சியினை நினைவுறுத்தியது ஆண்டவனது அருள் பித்தன்றே. அதனை நினைத்தே ஆரூரர் பித்தன் என்று கூறி இருக்கவேண்டும். இப்பித்தினலன்றே இறைவன் தம்மைத் தொழுவாரிடை குற்றமே குடி கொண்டிருப்பினும் அதனைக் குணமாகக் கொண்டு - ''தொழுவார் அவர் துயராயின் தீர்தல் உனதொழிலே'' என்றபடி திங்கள் தனது கலைதேயப் பெற்றபோது. இறைவனைப் புகலடைந்தமையால் இடுக்கண் களைந்து முடியில் அணித்து ''பிறைசூடி'' என்று பட்டம் பெற்றதை அடுத்துக் கூறியுளளார். அனைத்து உயிர்க்கும் தலைவனாய் நிற்கும் பெருமையால் பெருமானே - என்றூர் வினையுள் அழுந்தும் மக்களைக்கடைத்தேற - மணற்சோற்றில் கல் ஆராய்வார் போலன்றி மக்களது தகுதி நோக்காது தனது கருணையே துணையாகக் கொண்டு உய்விப்பவன் என்பார் அருளாளர் என்றழைத்தார் - இதனல் ஆரூரர்பால் ஆண்டவன் கொண்டபித்து அருள் பித்தெனல் வேண்டும். இங்ஙனம் பித்தாதல் இறை இயல்பாதலை ஆரூரர் பிறிதோரிடத்து

''கடைந்தெழுந்த ஆல நஞ்சு கண்டவர் மிக இரிய அமரர்கட்கு அருள்புரிவது கருதி நீல மார் கடல் விடந்தனையுண்டு கண்டத்தே வைத்த பித்த நீ செய்த சீலம்,,

என்ற விடத்து பித்த என்றது அருள் பித்தாதலை விளக்கி நின்றது. அருள்மொழித் தேவர் கண்ணப்பர் புராணத்து ''தேவுமால் கொண்டான் இத்திண்ணன்'' என்று கூறியிருப்பதும் நினைத்தகத்தக்கது - ஆரூரது இக் கருத்தினையுணர்ந்த சேக்கிழார் பெருமான் அன்புப்பித்தன் ஆண்டவன் என்பதை அவர் சரிதையில் மூன்றிடங்களில் அமைத்து விளக்கியுள்ளமை அறிந்தின் புறற்குரியது. ஒன்று நாம் தடுத்தாண்டோம் ஆண்டவனுர் அவ் வொலியினை ''என்றெழும் ஓசைகேளா ஈன்ற ஆன்கனைப் புக்கேட்டகன்றென நம்பிகேட்டார்,, என்பது இரண்டாவது, மெய்த்தாயினுமினியானை அவ்வியநாவலர் பெருமான் என்பது மூன்றுவது கயிலையில் கண்ணுதலை அடைந்த நிலையை ''சேணிடைவிட்டகன்று கோவினைக் கண்டணைந்ததெனன்'' என்பது பெற்ற மனம் பித்து என்ற பழமொழி இதற்குச் சான்றுகும்.

## ஐயனுர் இங்கு எப்படி வந்தார்?

# தேவர் விரும்பிய திருப்பதி அனலைப்பதி!

மூலம்: நாகேசுர படலம்
தொகுப்பு: அனலையூர் திரு. செ. தம்பையா அவர்கள்

பூம லக்குமியையும் மகாலக்குமியையும் உடைய மகாவிஷ்ணுவானவர் சிவனுக்கு விண்ணப்பித்த மாற்றங் கேட்ட பிரமாவானவர் மெய் புளகாங்கித முற்று, விம்மிதமடைந்து இறைவன் பாதாரவிந்தத்தில் வீழ்ந்து இறைபாதத்தைத் தம்முடியால் தேய்த்து 'ஆதியாகிய தாங்களும், மகாவிட்டுணுவும் ஒருங்கே யமைந்த ஐயனுரின் திருவுருவத்தைச் செம்மையாய் வழிபாடாற்ற இப்பூமியில் எவருமில்லை யென்ருர். அதனைச் செவியுற்ற சிவன் திருமாலைப் பார்த்து ''நான் முகன் மொழிந்த வடிவமைந்த அரிஹர மூர்த்தியை முன்னரே உமது கரத்தேற்ற முறைப்படி பூரணை, புட்கலை சமேதராயமைந்தருளினுல் அடியார்கள் அனலைதீவில் ஐயனுருக்கு ஆலயம் அமைத்து விடுவரென்ருர். இதனைக் கேட்ட நாரணனுர் இமையவரமிர்தத்தையருக்கிய போழ்தினும் மிக மகிழ்வுற்று இறை திருவாய் மலர்ந்தருளியவாறு பூரணை புட்கலை யிருமருங்கும் அமையப் பூமியிலுள்ளோரனை வரையும் காக்கும் பொருட்டு வேதாகமங்களாலும் விளக்க வொண்ணு ஹரிஹர சுதனையும் தேவியரிருவரையும் செம்பால் உருக்கியமைத்த பாங்காக ஓர் யானைத் தந்தத்தாலிழைத்த பேழையில் வைத்து, ஆகமங்களைக் காப்பிட்டு அலையில் அடையச் செதனர்.

மேலே குறித்த அனலைதீவில் மேன்மை கொள் சைவம் போற்றுகின்ற பெரும் பேறுற்ற அவ்வூரவர்கள் மேற்றிசையில் சமுத்திரத்தில் ஓர் பெட்டியைக் கண்டு மிக்க ஆனந்தமடைந்து கரைக்குக் கொணர்ந்தனர். இப் பெட்டகத் தைத் தாங்கி வந்தவர்கள் பாரம் பொறுக்க வியலாது பூமியில் வைத்தனர். அவ்விடமே நயினுகுளமெனும் திருப்பதியாகும். திரும்பவும் பேழையைத் தூக்க முயன்றபோது முடியாமையால் ஊரவர்கள் யாவரும் ஒருங்கு கூடித் தமக்குத் தாமே நிகரான அந்தப் பெட்டியைத் தி ந்தபோது வானிலிருந்து, ''உங்களுக்குக் கிடைக்கப்பெற்றது ஐயனுரும், தேவியரிருவரும்'' எனவும், ''அவர்களை எந்நாளும் தவருது துதித்துப் போற்றுங்கள்'' எனவும் அசரீரி கேட்டது.

## அனலைதீவில் ஐயனுர் உதயம்:

மேற்குறித்த விடத்தில் ஆலயம் ஐயனுருக்கு அமைந்தபின்னர் அனலைதீவு சிறப்புற்ருேங்கியது. மக்கள் இன்னல்களின்றியும், திடீர் மரணங்களேற்படாமலும் ஐயனுர் காத்துவரலானுர். ஆயிரம்நூற்ருண்டுகட்கு முன்னர் ஒடி தீவை இருளா

னது சூழ. வாயுவுக்கும், வருணனுக்கும் பெரும் போர் மூண்டு தம்மில் யார்
வலியுடையாரெனப் பரீட்சித்தகாலை மேய் சமுத்திரமானது சினமுற்றுப் பொங்கி
அனலைதீவை அழித்து விடுமோ வெனச் சகலரும் அஞ்சினர். அக்கணமே யாவரும்
மனம் பதைபதைப்ப மேலவனும், அரியுமீந்த சாத்தனது உறையுள் (ஆலயத்தள்)
தனித்தனியே புக்கு எமைக் காக்க வேண்டும் ஐயனாரே'' யென ஓலமிட்டனர்.
அடியாரின் அபயக்குரலைக் கேட்ட ஹரிஹரப் பெருமான் தமது மெய்காப்பாளரான
வீரமாகாளரும், மறுகணங்களும் துடிகளுடன், மற்றும் பல்லியங்களும் ஒலிப்ப
பெலிமுழக்கஞ் செய்து அட்டகுல கிரிகளும் அசைந்திடிந்த பேரொலிபோல்
ஒலிக்க எழுகடலுமடங்கிற்று. அற்றைநாள் தொடங்கி இற்றைநாள் வரையும்
எமது ஐயனார் அடியார்களைக் காப்பதோடு, கார்மேகம் போன்ற கருங்கூந்தலை
யுடைய மாதரார் கற்பையும், அவர்தங் கொழுநரையும் காக்குமாறு நோக்கும்
நோன்பின் பயனையுமருளி வருகிறார். பாலர்முதல் விருத்தரீறாக ஐயன் திருநா
மத்தை உச்சரித்தே உறங்கி விழிப்புறுகின்றனர்.

மறைக் குலத்தவர் ஒருவர் தமது குலப் பெண்களிருவரை மணம் புரிந்து
வாழ்ந்து வந்தார். அவர்கள் ஐயனாரை தோற்றுவித்தனர். இளையாளாகிய சுந்தரி
அவனருளால் ஓர் ஆண் மகவைப் பெற்றாள். அக்குழந்தையை மூத்தவளாகிய
(தமக்கை) பைந்தொடியாள் கண்ணையிமை காப்பதுபோல் காத்து வரலானாள்.
இவ்வாறாகிய நாளில் காத்தற் கடவுளாகிய திருமாலானவர் அனலைதீவின் தென்
எல்லையாகவுள்ள 'புலியேத்தி' என்று அழைக்கப்படும் புலியந்தீவிலிருந்து பாம்புரு
வுடன் மலர் கொண்டு சென்று நயினாதீவு நாகேஸ்வரியை வழிபடும் செயலைத்
தங்குலத்தவராலறிந்து தாமும் அம்பிகையை வணங்கும் விருப்பால் தமது கொழுந
னுடன் இடையிலுள்ள பாம்டனைக் கடந்து போனார்கள். தமது அருமை
மைந்தனைப் பைங்கொடியால் பாதுகாப்பில் விட்டுச் சென்றனர். அம்பிகையை
வழிபாடு செய்தபின்னர் கங்கை பெருக்கதிகரித்ததினால் ஓடக்காரர் கங்கையைக்
கடக்க அஞ்சினர். அற்றை இரவு சுந்தரியும், கொழுநனும் தமது சுதனை விட்டுப்
பிரிந்த வேதனை காரணமாக அரிஹரா சுதனையே வாயார வாழ்த்தி நின்றனர்.
பைந்தொடியானவள் பிள்ளை அழுததினால் தமது மடியிலிருத்தி அன்பால் ஆன்
பாலை ஊட்டினாள். அக்கணமே (பால் புரைக்கேறி) பிள்ளை அசைவறதிருந்தது.
பைந்தொடியாள் மனம் மிக நொந்து பிள்ளையைக் கொன்றுவிட்ட பாவம் தம்மை
வாணாள் முழுவதும் வருத்துமெனும் பழிக்கஞ்சி அடியற்ற மரமென நிலத்தில்
வீழ்ந்தாள். பின்னர் ஒருவாறெழுந்து, சுந்தரியானவள் வந்து தம்மிடம் ஒப்ப
டைத்த பிள்ளையைக் கேட்பின் ''யாது பகர்வேனெனத் துயரக்கடலில் மூழ்கி
ஐயனார் ஆலயமடைந்து நடந்தவற்றை யுன்னிப் புலம்பினாள். 'ஐயனே' என்றரற்றி
னாள், அவ்வொலி கேட்டதும் ஐயன் வாரணமதனில் பூரணை புட்கலையுடன் அவள்
முன் தோன்றினார். தன் வயிற்றிலடித்துத் துயருருவாயமைந்த பைந்தொடியை
நோக்கி ''பிள்ளையின் பசியைத் தீர்க்க நீ உவந்து பாலூட்டிய காரணத்தாலேற்
பட்ட கலை நீங்குமென்று திருவாய் மலர்ந்தருளினார். வேத கோஷங்களுடன்
ஐயன் எழுந்தருளி அருள் பாலித்ததும் பிள்ளையும் எழுந்தது. ஐயனருள் பெற்
றெழுந்த அக்குழந்தையும் மாயனார் கையிலேந்திய ஐயனார் திருக்காட்சியைக
கண்டுமனமயக்கொழிந்து நிற்க, குழந்தையைப் பிரிந்து முதலிரவு தங்கிய அன்னை
யும், பிதாவும் முன்வந்து பிள்ளையைத் தம்கரத்திலேற்றிக் கண்களில் ஒற்றி
மகிழ்ந்தனர். 'அருந்தவக் கொழுந்து அழாதிருக்க யாது புரிந்தீரென' பைந்
தொடியாளைக் கணவர் வினவ, நடந்த வராற்றினைத் தவறாது மொழிந்தாள்.
சுந்தரியும், பைந்தொடியாளும், கணவரும் ஐயன்பால் மாறா நோன்பியற்றினர்.
இதனைப் போன்று எத்தனையோ திருவருட் செயல்களை ஐயனார் அருளினாரெனக்
கர்ணபரம்பரையாக முன்னோர் புகன்றுளர்.

# தேரின் தத்துவம்.

மாவையாதீனம்:- மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்,
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்

## (1) தேரின் உறுப்புகள்

1. சக்கரங்கள்- சில்லுகள்,
2. ஆர் - தேர்ப்பண்டிகை - கீழண்டம்.
3. தட்டு- தேர்நடு- பீடம்.
4. பார்- தேரின்பரப்பு- மேலண்டம்.
5. கொடிஞ்சி- தேர்மொட்டு- முடி.
6. கவிகை- உச்சிக்குடை- திருவடிநீழல்.

## (2) தேர் அண்ட பிண்டசொரூபமாயுள்ளது.

### தேரின் அண்டசொரூபம்.

1. நான்கு சக்கரங்கள்; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கங்களைக்குறிப்பன. இந்த நான்குபடிகளில் ஒன்றில் நின்றுதான் ஆன்மாக்கள் உருள்வன.
2. கீழண்டம்; ஆன்மாக்களின் உபாயச் சரியா கிரியா யோகஞான மார்க்கங்களைக்குறிப்பது, கீழண்டத்தில் (அ) பாதாள லோக வாழ்க்கை. (ஆ) மண்ணுலக வாழ்க்கை. (இ) விண்ணுலக வாழ்க்கைச் சித்திரங்கள் சித்தரிக்கப்பட்டிருக்கும்.

   (அ) பாதாளலோக வாழ்க்கைச்சித்திரங்கள்: நரகவேதனைக்காட்சிகள்.

   (ஆ) மண்ணுலக வாழ்க்கைச சித்திரங்கள்: அரசகொலு, ஏர் உழுதல், காமச் சித்திரங்கள், சிருங்காரக் காட்சிகள் என்பன,

   (இ) விண்ணுலோக வாழ்க்கைச் சித்திரங்கள்: தேவேந்திரசபை, அரம்பையர், கின்னரர், கும்புருடர், காமதேனு, கற்பகதரு போன்ற காட்சிகள்.
3. பீடம்: (இருதயம்) சுவாமி இருக்கை. இது ஆன்மாக்கள் திருவருள் விளக்கம் பெறுவதைக்குறிக்கும்.
4. மேலண்டம்: ஆன்மாக்களின் உண்மைச் சரியா, கிரியா, யோக ஒலி மார்க்கத்தைக் குறிக்கும். மேலண்டத்தில் சிவலோக வாழ்க்கைச் சித்திரங்கள் சித்திரிக்கப்பட்டிருக்கும்.

   சிவலோக வாழ்க்கைச் சித்திரங்கள்: தெய்வத்திருக் காட்சிகள், தெய்வலீலைகள், திருக்கயிலாயக்காட்சி, தெய்வத்திருநடனங்கள் என்பன.

5. கலசம்—முடி; ஆன்மாதான் என்றொரு பொருள் வேறு தோன்றாத வாறு பதியில் லயப்பட்டு நிற்றலைக்குறிக்கும்.

6. உச்சிக்குடை—திருவடிநீழல்: ஆன்மாதான் என்றொரு பொருள் இல்லையாய் இறைவனின் சர்வ வியாபகத்துள் தான் அடங்கி, சிவானந்தப் பேரின்ப வாழ்வு வாழ்தலைக்குறிக்கும். இதுபரமுத்தி நிலை. (இரண்டன்மை; ஏவை.

தேரின் உண்மைத் தத்துவத்தை நோக்கும்போது, ஆன்மாக்களாகிய நாம் உபாயமார்க்கம், உண்மைமார்க்கம் ஆகிய இருமார்க்களிலொருமார்க்கத்தில் நின்று சுழலுவதையே தேரின் கீழண்டத்தையும் மேலண்டத்தையும் தாங்கும் சரியா கிரியா யோக ஞான மார்க்கங்களாகிய நான்கு சில்லுகளும் உணர்த்துகின்றன, உபாயமார்க்கத்தை அனுட்டிக்கும்போது எமது அவாவின் விரிவையும், பாதாள, பூலோக, விண்ணுலோக வாழ்க்கைளின் விரிவையும், சிற்றின்ப துன்ப நுகர்சிகளையும் தேரின் கீழ்க்கண்டம் உணர்த்துகிறது. தேரின் பீடம் ஆன்மாக்கள் திருவருள் விளக்கம் பெறுவதைக் குறிக்கிறது. அவ்வாறு திருவருள் விளக்கம் பெற்றபோது எமது அவாவெல்லாம் ஒடுக்க நிலையாகிச் சிவலோக வாழ்வையும் பேரின்ப நிலையையும் நோக்கி நிற்கும் முறையைத் தேரின் மேலண்டம் புலப்படுத்துகின்றது. தேர்முடி, ஆன்மா தான் என்றொரு பொருள் தோன்றாதவாறு பதியோடு லயப்படுவதைக் காட்டுகிறது. உச்சிக்குடை பதியின் வியாபகத்துள் இலயப்பட்ட ஆன்மா திருவடி நீழலில் சிவானந்தப் பேரின்ப முறும் நிலையையுணர்த்துகின்றது.

"உலகெலா மாகி வேறா யுடனுமா யொளியாயோங்கி
யலகிலா வுயிர்கள் கன்மத்தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனா யிவற்றின் தன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவு சிரமல னாகி நின்றனன் னீங்கா தெங்கும்"

**சிவோசித்: 2ஆம் சூத்: 1-ம் செய்யுள்.**

இச்செய்யுள் தேரின் தத்துவத்தை ஒருவாறு புலப்படுத்துகின்றது.

## (3) தேரின்பிண்டசொரூபம்

கால்கள்: 1. சக்கரங்கள் (சில்லுகள்): இருகால்கள், தசவாயுக்கள் என்பனவாகும்.

2. முதலாமடுக்கு, பண்டிகை-ஆர்-கீழண்டம்.
   - (அ) அச்சு: i மூலாதாரம், குண்டலினிசத்தி, பஞ்சபூதங்கள் என்பனவாகும்.
   - (ஆ) அதன்மேற்பகுதி: ii சுவதிஸ்டானம்.
   - (இ) அதன்மேற்பகுதி iii மணிபூரகம்- நாபித்தாளம், தசேந்திரியம் என்பன.

முண்டம்:
   - (ஈ) அதன்மேற்பகுதி: ஐந்தவத்தை, ஐங்கோசம், இராகாதி குணங்கள் என்பன.
   - (உ) பீடம்: iv அநாகதம், இருதயத்தானம், இறைவன் இறைவியுடன் சத்தி மூர்த்தமாக எழுந்தருளியிருக்குமிடம்.

கழுத்து: 3. மேலண்டத்திற்கும் கீழண்டத்திற்கும் இடைப்பகுதி:
   - (v) விசுத்தி- கழுத்துத்தானம்.
   - (அ) அந்தக்கரணங்கள் 32 குத்துக்கால்கள் 32 தத்துவங்கள் (ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் தவிர்ந்த)
   - (ஆ) முற்றுறைகள் கண்கள், பிற்றுறைகள் சிகைகள், பக்கத்துறைகள் இரு செவிகள், பீடம் முதற்பகுதியாய், இடப்

பகுதியிலுள்ள இருகுதிரை வடிவங்கள் இடப்பாக, சந்திர சூரிய கலாவாசிகள், வலப்பகுதியிலுள்ள இரு குதிரை வடிவங்கள் வலப்பாக, சந்திர சூரிய கலாவாசிகள், (நான்கு குதிரைகளையும் நான்கு வேதங்களாகவும் கொள்லாம) சாரதிவடிவம் மும்மல ரூபமும் நாசியுமாம்.

தலை: 4. மூன்றுமடுக்குப் புருவமத்தி (பேலண்டம்)
5. நான்கா மடுக்கு: இலலாடமத்தி
6. ஐந்தாமடுக்கு: மஸ்தகாந்த ஸ்தானம்.
7. ஆறுமடுக்கு: மஸ்தக மத்தியஸ்தானம்.
8. ஏழாபடுசகு. மஸ்தக ஆதித்தானம்.
9. எட்டாமடுக்கு: துவாத சாந்தத்தானம்.
10. கலசம்- முடி: சோடசாந்தத் தானம்.
11. உச்சிக்குடை: பிரமரந்திரம்.

எனவே,

சக்கரங்களாகிய தசவாயுக்களை நிறுத்த அசைதல் முதலிய வினைகள் ஒழியும். சிலர்கள் தம்பனத்தை முறையே பேலாக விளங்கும் உந்திக் குண்டலிலிருந்து நாபிக்கும் பின் இருதயத்திற்கும், அங்கிருந்து கண்டம், வாய், நாசி இரு கண்கள இவைகளின் வழிபாய் மேல நோக்கி லயப்படுத்தி அங்கிருந்து புருவ மத்தியத்திலும், அங்கிருந்து ஏனைய அடுக்குகளாகிய மஸ்தக அந்தம், மத்தி, ஆதித்தானங்களிலும், துவாத சாந்தத்திலும் லயப்படுத்தி அங்கிருந்து உச்சிக் குடையாகிய பிரமரந்திரத்தில் ஏற்றி லயப்படுத்தி, பரமானந்த நிலையாக வேண்டுமென்பதைத் தேர் அறிவுறுத்துகின்றது, இத் தத்துவத்தை நீ தேர்ந்து கொள் என்ற கருத்துப்படவே தேர் எனவும் அழைக்கப்படுகின்றது.

''அஞ்செழுத்தா லுள்ள மரனுடமை கண்டரனை
அஞ்செழுத்தா லர்ச்சித் திறயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் சோதண்டஞ் சாணிக்கில்
அண்டனும் கேடனுமங்கு''

சிவ. போத: 9 ஆம் சூத்; அதி 3, உதா: வெண்-6.

(4)

மற்றொருவகையில் தேர் சரீரம்; (அ) நான்கு சிங்கங்களாவன: லோப ரூரம், சர்வவித ஆசைப்பெருக்க சங்கற்பவிருத்தி, சர்வவித அபிமான கோலாகல விபரீதம், சர்வவித அகங்கார கோபதாபவிகாரம் என்னும் நான்குவித கர்ம விருத்திகள்.

(ஆ) எட்டுயாளிகள்; அஞ்ஞானம், அபிமானம், ராகாதி குணங்கள், துக்கம், விடயவாசனை, நாலுவித கன்மம், உபாதி, அவஸ்தை என்னும் எட்டுவித அனுபவங்கள்.

(இ) கொடிகள்: தத்தவக்கூட்டங்கள்.

(ஈ) மணிகள்: பீஜமந்திர பிரணவாதி சத்தங்கள்-

(உ) குஞ்சங்கள்: எண்பத்துநான்குலட்ச யோனிபேதங்களில் மாறிமாறித் தோன்றும் மரணவஸ்தை.

எனவே,

சிங்கங்களையொத்த தர்மவிருத்திகளையும், யாளிகளைப் போன்ற அனுபவங்களையும், கொடிகளைப் போன்ற தத்துவக் குழாங்களையும், மணிகளைப் போன்ற தத்துவக் குழாங்களையும், மணிகளைப் போன்ற வாக்கொலிகளையும், குஞ்சங்களைப் போன்ற மனச் சலனங்களையும் இல்லையென்னும்படி செய்து, சித்திரத்தீபம் போலநின்று மோனசாட்சாக்கார நிலையை அடைய வேண்டுவதைத் தேர்குறிக்கின்றது என அறிக.

(சங்காரத் தொழில்- திரிபுய நிலை)



## சிவஸ்ரீ ஏ. இராமஸ்வாமிக் குருக்கள்

ஐயனார் கோவில் பிரதம அர்ச்சகராக இருந்து நற்பணியாற்றி சிவபதமடைந்த அமரர் சிவஸ்ரீ. ஏ. இராமஸ்வாமிக் குருக்கள்!

# " கண்திறந்தருளுவாயே "

அனலையின் தலைவநீ ஐயநீ தேர்மிசை
ஆடிவர அன்பு கொஞ்சும்
அணியிழை மங்கையர் மருங்கிலே கூடிவர
அவனியில் மாரி மிஞ்சும்

தனமான தமிழ்தனில் தத்துவப் பாடல்வர
பத்திநிலை முத்தி வழியும்
தரணியில் நின்னருள் சால்பினை அளித்திடும்
தண்மையோ டமைதி பொழியும்

மனதிலே ஐயநின் கோலமே நாளுமாய்
மகிழ்கின்ற தொண்டர் கண்கள்
மாபெரும் தேரிலே மன்னநீ ஊர்கின்ற
மாட்சியே வேண்டி நிற்கும்

கனமான அனலையின் கடவுளே கருணைவளர்
ஹரிஹரன் பெற்ற தேவே
கண்கொளா நினதுதேர் வெள்ளோட்டம் கண்டிட
கண்திறந் தருளுவாயே

— " ஹரிஹரப்பிரியா "

# அன்னதான சபை

வருடாவருடம் நடைபெறும் திருவிழாக் காலங்களில் அடியவர்க்கு ஐயனருளால் அன்னதானமளித்து அகமிகமகிழ்ந்து வந்தனர் அனலைபம்பதி மக்கள். இதனிமித்தம் ரூபா 100000/- பெறுமதியான அன்னதான மடமொன்றையும் அமைத்தனர்.

இவ்வரிய தொண்டு மேலும் சிறப்புற நடைபெற வேண்டி ஒருசபையை அமைக்க நோக்கம் கொண்டு அதன்படி ''அனலைதீவு ஐயனார் ஆலய அன்னதானசபை'' என்னுமோர் சபையை அமைத்து செயல்படப்பணித்தனர் அனலைதீவுமக்கள். கடந்த பல வருடங்களாக இச்சபையினர் சிறப்புற மேற்படி கைங்கரியத்தை நிறைவேற்றி வருகின்றனர்.

**நன்றி நவில்வது நயமெனில்:**

சபையினர் பொதுமக்களிடம் பணமாகவும் பொருட்களாகவும் பெற்று அடியவர்க்கு அமுதளித்து வருகின்றனர். இவ்வரிய கைங்கரியத்திற்கு பொருள் குவிந்தவர் பொற்குவையீந்தனர்; நிதிமிகுந்தவர் காசுகள் ஈந்தனர்; அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளினர். கைங்கரியம் சிறப்புற நடைபெறுகிறது. அவர்க்கு எமது நன்றி.

தொண்டர்க்குத் தொண்டனும் எமது ஐயனின் அருள்வேண்டி, வேதனம் பெற்றாலும் வேண்டிய நேரத்தில் வேலைகளைச் சிறப்புற முடிக்க தமது உளமார்ந்த உதவிகளை அளித்தனர் பரிசாரகர்கள், தண்ணீர் வண்டி உதவியாளர், காய்கறி அனுப்பி உதவிய அன்பர், மற்றும் தொண்டர்கள்! அவர்க்கும் எமது நன்றி.

''அற்றார் அழிபசிதீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி'' என்னும் பொய்யாமொழியான் வாக்குக்கிணங்க நடைபெற்று வரும் புனித தொண்டு இனிமேல் வருங்காலங்களிலும் சிறப்புற நடைபெறவேண்டும் என்பதே எமது பிரார்த்தனை!

க. இளையதம்பி
செயலாளர்

க. இரத்தினசபாபதி
தலைவர்

அனலைதீவு ஐயனார் ஆலய அன்னதான சபை.

# தொண்டர் சபை.

அனலை ஐயனார் கோவில் உற்சவகாலங்களில் பக்தர்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு தொண்டர்சபை ஒன்றை அமைக்க வேண்டிய அவசியத்தை 1961-ம் ஆண்டளவில் நாம் உணர்ந்தோம். அப்போது எமது ஊருக்கு ஆசிரியத் தொழிலின் பொருட்டு இடமாற்றலாகிவந்த நயினாதீவைச் சேர்ந்த சைவப்புலவர் திரு. த. தியாகராசா, காலஞ்சென்ற சைவத்தொண்டர் சாமி க. வேலாயுதம், கிராம சேவையாளர் திரு. சு. இரத்தினசபாபதி ஆகியோரின் உற்சாகத்தினால் காந்திய சேவா சங்கம் என்ற பெயரில் ஒரு ஸ்தாபனத்தை நிறுவி அதன்மூலம் பக்தர்களுக்குச் சேவையாற்றி வந்தோம். நாளடைவில் 1972-ம் ஆண்டில் இதன் பெயரை அனலைதீவு தொண்டர் சபை என மாற்றித் தீவகத்தின் முழு வட்டாரங்களிலிருந்தும் இளைஞர்களைத் திரட்டி ஐயனார் உற்சவ காலங்களில் மட்டுமன்றி எமதூர் சிரமதானப் பணிகளிலும் அவ்வப்போது தொண்டர்களை ஈடுபடுத்தி சேவை செய்து வந்துள்ளோம்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் வருடாந்த உற்சவ காலங்களிலும் நமது தொண்டர்கள் அங்கு சென்று சேவையாற்றி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தொண்டர் சபையினரின் அயராத முயற்சியினால் தொண்டர் சபைக்கென ஆலயமுகப்பில் காரியாலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தொண்டர் சபை நிறுவனம் மென்மேலும் வளரவும் இன்று சித்திரப் பெருந்தேரில் பவனிவரவிருக்கும் எம்பெருமான் ஐயனாரின் அருள் யாவர்க்கும் கிட்டவும் பிரார்த்திப்போமாக!

வே. குகதாசன்
செயலாளர்,

தொண்டர் சபை,
அனலைதீவு.

---

## ஆண்டவன்!

மாண்டவன் போலிருந்து, உயிர்க்காற்றை
இயக்கிக் காத்து அழித்து,
தாண்டவம் புரிகின்ற மாயோனே ஆண்டவன்!

உ. இ. தமிழ்ச்செல்வன்

# தேர்த் திருப்பணிச்சபைச் செயலாளர் நன்றி கூறுகிறுர்.

அழகும் அருளும் பொலிய ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனுருக்கு அமைக்கப்பெற்ற அழகிய புதிய சித்திரத்தேர் (மகாரதம்) நிறைவு பெற்றதை யொட்டி ஐயன் அடியார்கள் யாவருக்கும் நன்றி கூறுவ தற்கு தேர்த்திருப்பணிச் சபையோர் சார்பில் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன். ஐயன்மீது கொண்ட அசையாத பக்தியால் "ஒன்றே செய் அதுவும் நன்றே செய்" என்னும் முதுமொழிக் கிணங்க இப் பெரிய கைங்கரியம் நடந்தேறப் பொருள் உதவியும் பணஉதவியும் தாராளமாக வாரி வழங்கிய அடியார்களுக்கெல்லாம் ஐயனுரின் திரு வருள் கிடைக்கப்பெற வேண்டுமென வேண்டி எமது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இச்சித்திரத்தேரைச் சிறந்த கைவண்ணத்தில் கலையழகு பொருந்தியதாக அமைக்க வேண்டும் என்ற பெருநோக்குடன் ஐய னின் திருவருளுக்காளாகி எங்கள் குடும்பத்தில் ஒருவர் போல் திகழ்ந்து இப்பெருந் திருப்பணியை நிறைவேற்றித் தந்த, தமிழ்நாட்டைச் சார்ந்த மாலைகண்டான் சோம. இலட்சுமண ஸ்தபதியார் அவர்களுக் கும், அவருடன் இத்திருத்தேர் முற்றுப்பெற தமது கைவண்ணத்தை நிரூபித்துக் காட்டிய வாழுமங்கலம் சண். தியாகராஜ ஸ்தபதி அவர் களுக்கும், மாலைகண்டான் சு. இரத்தினம் ஸ்தபதி அவர்களுக்கும் அதே நாட்டைச் சேர்ந்த சோம. சின்னத்தம்பி ஸ்தபதி அவர்களுக் கும் எங்கள் மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்னும் இப்புதிய சித்திரத்தேரை இரவு பகல் பாராது, உரு வாக்க உழைத்த எமது நாட்டைச் சேர்ந்த ஆசாரிமார்களுக்கும் நன் றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சித்திரத்தேர் மலர் சிறப்பாக அமைய ஆசியுரைகள், கட்டுரை கள் வழங்கிய அருளாளர்களுக்கும், பணவுதவி புரிந்தும் விளம்பரங்

கள் தந்துதவியும், தங்களது ஆதரவை நல்கிய வர்த்தகப் பெருந் தகைகளுக்கும் எங்கள் பாராட்டுக்கள் உரித்தாகுக.

இச்சபையின் ஆரம்ப காலத்தில் தனாதிகாரியாக இருந்து அருந் தொண்டாற்றிய அமரர் சு. சிவபாதசுந்தரம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஐயனைரைப் பிரார்த்திப்போமாக.

இப்பெருந் தொண்டில் பணியாற்ற எங்களுக்குச் சந்தர்ப்ப மளித்த பொதுமக்களுக்கு எனது சார்பிலும், சபையினர் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

அனலைதீவு.
21-8-80

ஐ. வைத்தியலிங்கம்
இணைச் செயலாளன்

அனலைப்பதி ஐயனாரின் தேர் வெள்ளோட்டச்

சிறப்பு மலர் சிறப்படைய

அன்புடன் வாழ்த்துகிறோம்!

# சிங்கம் ஸ்ரோர்ஸ்

மொத்த, சில்லறை வர்த்தக

கமிஷன் ஏஜண்ட்.

தோட்டங்கள், மாளிகைகளுக்கு

உகந்த பொருட்களை விநியோகிப்பவர்.

216, பிறின்ஸ் வீதி,

கொழும்பு 11.

☎ 27009

ஏறு மயில் ஏறி விளையாடிடும்

வீறுகொண்ட உன்சிறப்பு ஓங்க

துதிக்கிறது

உரிமை: எஸ். கே.

ஆறுமுகம்

(பிரபல வர்த்தகரும்

107, 4ம் குறுக்குத்தெரு,

:29961, 22597

எங்கள் ஆறுமுகன்போல் ஐயனாரே!

ஆறுமுகம் அன் கோவும்

ஐயனாரே!

இரத்தினசபாபதி.

அன் கோ ☆

கமிஷன் ஏஜண்டும்)

கொழும்பு-11

கிளை:

தீபா ஜுவல்லர்ஸ்

நகை அடைவு பிடிப்பாளர்.

கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

☎ : 7529

காலஞக கானகத்திற் தோன்றிய

கடும்புலியைக் கணத்திலடக்கிய ஐயஞரே!

பாலரத்தினம் அன் கோவும்

பாரில் அதர்மமழிந்திட துதிக்கிரேம் ஐயஞரே!

# த. பாலரத்தினம் அன் கோ.

பிரபல பிடவை வர்த்தகர், கமிஷன் ஏஜண்ட்,

தோட்டப் பொருள் விநியோகஸ்தர்,

தேயிலே, றப்பர், றேடியோ

உத்தரவு பெற்ற விற்பனேயாளர்

பவுண் அடைவு பிடிப்பவர்.

சிறிவர்த்தன கட்டிடம்,

தெரணியகலே.

தொலே பேசி: 893, தெரணியகலே.

அனலை ஐயனார் சித்திரப் பெருந்தேரிலே

பவனிவரும் நன்னாளில்

எமது நல்வாழ்த்துக்களை அனைவருக்கும்

வழங்குகின்றோம்.

# அம்பிகா ஸ்டோர்ஸ்

125, பிரதான வீதி,

நீர்கொழும்பு.

தொலைபேசி: நீர்கொழும்பு. **2477**

ஐயனின் அருளால் புதுமையும் பொலிவும் நிரம்பட்டும்

வாழ்வும் வளமும் பெருகட்டும்; அன்பும் அறமும் ஓங்கட்டும்

அருளும் பொருளும் சிறக்கட்டும்.

## என். வி. ஆர். எம். அன் கம்பனி

பிரபல வர்த்தகரும் கமிஷன் ஏஜண்டும்

அரிசி நெல் விநியோகஸ்தர்

**111, பழைய சோனக தெரு, கொழும்பு 12**

தொலைபேசி: கொழும்பு *31461*

வத்தளை *370*

அனலைதிவு ஐயனார் சித்திரப்பெருந்தேர் சிறப்பு மலர்
சிறப்புற அமைய எமது வாழ்த்துக்கள்.
ஐயனின் அருள் அனைவருக்கும் கிட்ட
எமது பிரார்த்தனைகள்.

பெட்டா டிரேட் கம்பனி
(P.T.C.)

90, 4-ம் குறுக்குத்தெரு, கொழும்பு-11

---

அனலை ஐயனின் அழகில் அகமகிழ்வோம்

வீனஸ் ட்ரேட்
(V.T.)

77, 4-ம் குறுக்குத் தெரு
கொழும்பு-11

# செல்வம் ஸ்ரோர்ஸ்

பிரபல **வர்த்தகரும்**, கமிஷன் ஏஜெண்டும்

அரிசி மற்றும் இலங்கை உற்பத்திப்பொருட்களின் விற்பனையாளர்.

**52, பழைய சோனகத்தெரு.**

**கொழும்பு-12.**

**தொலைபேசி: 31164. தந்தி. "SWISS BANK"**

---

## கோபாலன் டிரேடிங் கம்பனி

இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர் கமிஷன் ஏஜண்ட்

அரிசி, தேங்காய் எண்ணெய், பிண்ணாக்கு

மற்றும் இலங்கை உற்பத்தி பொருட்களின் **விற்பனையாளர்.**

149, டாம் வீதி, கொழும்பு 12

தொலைபேசி: *34419*

# நியூ கோபால் கம்பனி

## [கட்டிடப் பொருள் விற்பனையாளர்]

மின்சாரப் பொருட்கள்,

இரும்பு வகைகள்

இயந்திரப் பொருட்கள்,

உதிரிப்பாகங்கள்,

எஸ். லோன் குழாய் பொருத்துபவர்கள்,
போக்குவரத்து ஏஜண்டும்.

30, கடற்கரை வீதி,

திருகோணமலை.

☎ 619 தந்தி: கோபால்

அருள் பெருக, அன்பு பெருக, அறிவு பெருக,

ஆற்றல் பெருக, அனலைப்பதி சிறப்பும் பெருக;

இதயக்கனிவுடன் உனைத்துதிக்கிறோம் ஐயனாரே !

ஆதித்தன் ஸ்ரோர்ஸ்

115, மத்திய வீதி

திருகோணமலை.

☎ 405

மாதவம் புரிந்த முனிவரெல்லாம் மகிழ்ந்திட
அருளளித்த ஐயனுரே!

ஆதவன் டெக்ஸ்ரையிலாம்
நாமும் அகிலத்துக்குப் பணியாற்றிட
அருளிவாய் ஐயனுரே!!

# ஆதவன் ரெக்ஸ்

115/3 மத்திய வீதி,
திருகோணமலே.

கிளை:- விக்னேஸ்வரா
66, பிரதான வீதி,
குளியாப்பிட்டிய.

ஐயனே எம்மைக் காத்தருள்வாய் !

எஸ். வீ. கே. ஸ்ரோர்ஸ்,

48, பிரதான வீதி,
பெல்மதுளை.

---

ஐயன் அருள் வேண்டி நிற்கிறோம்!

எஸ். இராமலிங்கம்

எஸ். சின்னராசா

# நாகப்பா ஸ்ரோர்ஸ்

பிரபல வர்த்தகரும், கமிஷன் ஏஜண்டும்.

16, 18, சிசமாவத்தை,
குளியாப்பிட்டிய.

பறீட் பிறதர்ஸ்

**FAEED BROTHERS**

**Licence Dealers in Rubber & Ceylon Produce.**

**47, New Building, Elkaduwa Road,**
**UKUWELA.**

**T.phone: Office. 0662-345**

**Residence: 0662, 370.**

---

சும்ஸ் ஹோம் இன்டஸ்றீஸ்

**Shums Home INDUSTRIES**

202, பழைய சோனகத்தெரு,

கொழும்பு-12

தொலைபேசி: 31924

## செய்யது ட்ரேடிங் கம்பனி

பிரபல வர்த்தகர் - கமிஷன் ஏஜண்ட்

192, பழைய சோனகத்தெரு, கொழும்பு-12

தந்தி: 'SEYADU'

தொலைபேசி: 32301

---

## சிலோன் புரொடியூஸ் சென்டர்

*Ceylon Produce Centre*

கமிஷன் ஏஜண்ட் இலங்கை உற்பத்திப்பொருட்களின், ஏற்றுமதியாளர், இறக்குமதியாளர்

185, பழைய சோனகத்தெரு,
கொழும்பு-12

தொலைபேசி: 35475.

ஐயனே உன் அருள் கேட்டு கூத்தாடுகிறோம்!

★

## விஜயசுந்தர அன் கோ

பிரபல வர்த்தகர் - கமிஷன் ஏஜண்ட்.

42, பழைய சோனகத்தெரு, கொழும்பு-12

தொலைபேசி: 34733.

---

அனலை ஐயன் பெருமை பெருகட்டும்!

# திலகா ஸ்ரோர்ஸ்

(உரிமையாளர்: T. கந்தையா)

பிரபல வர்த்தகர் - கமிஷன் ஏஜண்ட்,

ஏற்றுமதியாளர் இறக்குமதியாளர்

127, பழைய சோனகத்தெரு, கொழும்பு-12

தொலைபேசி: 31893

சித்திகளை அளிக்கவல்ல ஐயனாரே

சித்தத்தை நிலைநிறுத்துவாய் ஐயனாரே!

★


என். எஸ். எம். எஸ்,

நியூ சிறிமுருகன் ஸ்ரோர்ஸ்

(உரிமையாளர்; ஜி. தம்பிப்பிள்ளை)

இறக்குமதியாளர் - அரிசி விற்பனையாளர்

கமிஷன் ஏஜண்ட்

49, பழைய சோனகத்தெரு, கொழும்பு-12.

தந்தி: "MINNOLEY" தொலைபேசி: 33770

# காதர் பிறதர்ஸ்

★

பிரபல வர்த்தகர், கமிஷன் ஏஜண்ட், உத்தரவு பெற்ற-

றப்பர் தேயிலை விற்பனையாளர்.

205, பழைய சோனகத்தெரு, கொழும்பு-12.

தொலைபேசி: *34174.*

---

## கண்டி ரீ ஸ்ரோர்ஸ்

## *KANDY TEA STORES*

203, பழைய சோனகத்தெரு,

கொழும்பு 12

தொலைபேசி: *32191*

# இஸ்மாயில்ஸ் கமிஷன் ஏஜன்சி

★

இலங்கை உற்பத்திப்பொருட்களின் விற்பனையாளர்

*199*, பழைய சோனகத்தெரு, கொழும்பு-*12*.

தொலைபேசி: 36319

---

# கே. எம். கஹானி அன் கோ.

# K. M. GHANI & CO

பிரபல வர்த்தகர், கமிஷன் ஏஜண்ட்

197, பழைய சோனகத்தெரு, கொழும்பு 12

தொலைபேசி: *33601 - 34951*

ஐயனுக்கு சமர்ப்பணம்

பெற்ரு ட்றேடர்ஸ்

**PETTAH TRADERS,**

பிரபல வர்த்தகர், கமிஷன் ஏஜண்ட்.

இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், தோட்டப்பகுதி விநியோகஸ்தர்

214, பழைய சோனகத்தெரு, கொழும்பு-12.

தொலைபேசி: 35677

---

கார்டோ மொம்ஸ்

**CARDOMOMS**

57, பிரதான வீதி, வத்தேகம.

தொலைபேசி: 241 வத்தேகம.

மடக்கிய கால்மீது கைவைத்திருக்கும் ஐயனுரே!
அடக்கிய எம்புலனைக் காத்திடுவாய் ஐயனுரே!


## ராம்சேது அன் கோ

பிரபல வர்த்தகர், கமிஷன் ஏஜண்ட்.
சகல உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் விற்பனையாளர்.

### 65, 4-ம் குறுக்குத்தெரு. கொழும்பு-11

தொலைபேசி: யாழ்ப்பாணம், *415.*
கொழும்பு, *23686.*


---

சித்திகளை அளிக்கவல்ல ஐயனுரே
சித்தத்தை நிலைநிறுத்துவாய் ஐயனுரே!


## நியூ ஜெயந்தீஸ் டெக்ஸ்டையில்ஸ்

2ம் மாடி

### 102/7. 3ம் குறுக்குத்தெரு
### கொழும்பு 11

தொலைபேசி: *25183.*

எஸ். எஸ். சண்முகம் அன் கோ.

இறக்குமதியாளரும், ஏற்றுமதியாளரும்

S. S. S.

200, பிறின்ஸ் வீதி, கொழும்பு-11.

தொலைபேசி: 27420 தந்தி. "EYESBE"

---

அனலை ஐயன் அருள் அனைவருக்கும்

கிட்ட எமது பிரார்த்தனைகள்!

★

ஸ்ரீ தாமோதர விலாஸ்

239, கே. கே. எஸ். ரோட்,

யாழ்ப்பாணம்.

தொலை பேசி: **7065**

சித்திரத்தேர் வெள்ளோட்ட நாளில்

ஐயனின் திருவருளை எண்ணி உளம் பூரிக்கின்றோம்.

ஆ. கணேசன்

# கணேசன் ஸ்ரோர்ஸ்

39, நூறி றேட், தெரணியகலை.

---

ஐயன் துணைவேண்டி நிற்கின்றோம்.

ஆ. பாலசுப்பிரமணியம்

# மணியம் ஸ்ரோர்ஸ்

33, நூறி றேட், தெரணியகலை.

அன்பர்கள் போற்ற அனலையில்

குடிகொண்ட ஐயனைப் போற்றுகின்றோம்.

கே. எஸ். பி. அன் சன்ஸ்

388, பிரதான வீதி, கந்தானை

தொலைபேசி: 076, 405.

---

ஐயனே அருள் தருவாய் - அனலைநகர்

ஐயனே அருள் தருவாய்.

நிர்மலாஸ்

142, மலே வீதி, கொழும்பு-2.

ஐயனே உன்னை நினைக்க மெய் சிலிர்க்கிறது.

உன் அருள் சகலருக்கும் கிட்ட எமது பிரார்த்தனை

# லிங்கம் ட்ரேட்ஸ்

**இறக்குமதியாளர், பிரபல வர்த்தகர்-
கமிஷன் ஏஜண்ட், இலங்கை உற்பத்திப்
பொருட்களின் விநியோகஸ்தர்.**

224, கெய்சர் வீதி, கொழும்பு-11

தொலைபேசி: 23406.

## ஹமீட் ஸ்ரோர்ஸ்

193, பழைய சோனகத்தெரு, கொழும்பு 12.

தொலைபேசி: 35862

313, கிருண்ட்பாஸ் ரோட், கொழும்பு 14.

தொலைபேசி: 33974

---

## மொஹமெடான் கொம்மேர்சல் கொம்பனி

ஏற்றுமதியாளர், இலங்கை உற்பத்திப்பொருட்களின் விற்பனையாளர்.

193, பழைய சோனகத்தெரு, கொழும்பு-12.

தந்தி: MOHAMEDAN

தொலைபேசி: 31582.

புத்தியும், வித்தையும், பல்பொருளும் அருளும் அனலைவாழ் நாதனைப் போற்றுகின்றோம்.

★

# நடராஜா அன் கோ;

**பிரபல வர்த்தகர், கமிஷன் ஏஜன்ட்,**

**உத்தரவுபெற்ற றப்பர் விற்பனையாளர்.**

196, பழைய சோனகத்தெரு கொழும்பு-12

☎ 36084

அனல்வேகத்தில் பயணம் செய்திடும் மக்களுக்கு
அன்புச்சேவை செய்திட அருளுவாய் ஐயனாரே!

# "கலெக்ஸி ட்டூர்ஸ்"

## போக்குவரத்துச் சேவை

# GALAXI TOURS

*உரிமை:*

எஸ். வெற்றிவேலு
172. பிரதான வீதி
கொழும்பு 11

எம். ராஜரத்தினம்.
அனலை. 2,
அனலைதீவு.

அனலை ஐயன் சித்திரப்பெருந்தேரில் பவனிவரும் நன்னாள்
எம் வாழ்நாளில் பொன்னாள்.
நம் நாட்டவர் மகிழும் திருநாள்.
அடியார்கள் அகம் மலரும் பெருநாள்.


# குளோப் டிரேடிங் கோ;

(சகல உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்)

**100, 4**ம் குறுக்குத்தெரு,
கொழும்பு **11.**

☎ 26739 தந்தி: ஜி. ரீ. சி.

பையரா அமிளி யானும்

பரம் பொருள் முதலும் நல்கும் ஐயனே! ஓலம்;

விண்ணோர்க்கு ஆதியே! ஓலம்;

செண்டார் கையனே! ஓலம்;

எங்கள் கடவுளே! ஓலம்;

மெய்யர் மெய்யனே! ஓலம்;

தொல்சீர் திரனே! ஓலம்; ஓலம்;


FREE LANKA
INDUSTRIES Ltd.

P. O. Box. 4. Minuwangoda Road,
JA-ELA. Srilanka.

Cable: 'KALAS'

076 - 412 - 419 - 265

10.00
4.00
27.00
4.00
45.00

CA
CHITRA ACHCHAKAM

310, Clock Tower Road, JAFFNA.